பக்கங்கள் – 16+8
விலை – ரூபா 60
Registered as a Newspaper
# உதயன்
சுடர் : 40
கதிர் : 124
ஞாயிற்றுக்கிழமை
30 மார்ச் 2025
பங்குனி 16 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

## மியான்மர் நிலநடுக்கம்; உயிரிழப்பு 1,700+

நைபிட்டோ, மார்ச் 30
மியான்மரில் நேற்றுமுன்தினம் ஏற்பட்ட நில நடுக்கத்தில் சிக்கி 14

நேற்றுமுதல் மீண்டும்

# ஆனையிறவில் உப்பு உற்பத்தி ஆரம்பம்

கிளிநொச்சி, மார்ச் 30
நவீன உபகரணங்கள் மற்றும் பொதியிடல் வசதிகளுடன் மீளமைக்கப்பட்ட ஆனையிறவு உப்பளத்தில், 'ரஜ உப்பு' (அரசாங்க உப்பு) என்ற பெயரில் உப்பு உற்பத்தி நேற்றுச் சனிக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது. 14

## 'ஆனையிறவு உப்பு' எங்கள் அடையாளம்

### பெயர்மாற்றத்தை ஏற்கோம் சிறீதரன் எம்.பி. தெரிவிப்பு



கிளிநொச்சி, மார்ச் 30
தமிழ் மக்களின் வாழ்வியலோடு இணைந்த 'ஆனையிறவு உப்பு' என்னும் அடையாளப்பெயரை உறுதிசெய்ய வேண்டும் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவரும், 14

## 'ஆனையிறவு உப்பு' என்று விரைவில் பெயர்மாறும்

### அமைச்சர் சந்திரசேகர் உறுதி



கிளிநொச்சி, மார்ச் 30
ஆனையிறவு உப்பளத்தில் உற்பத்தி செய்யப்படும் உப்பானது, 'ஆனையிறவு உப்பு' என்ற பெயருடன் உலகம் முழுவதும் விநியோகிக்கப்படும் என்று கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் 13

## பரந்தன் தொழிற்சாலை விரைவில் இயங்கும்!

யாழ்ப்பாணம், மார்ச் 30
பரந்தன் இரசாயனத் தொழிற் சாலை விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது என்றுகடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.
யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற கலந்துரையா 14

## சங்கிலியை அறுத்தோரை விரட்டிப்பிடித்தது பொலிஸ்

### ஹெரோய்ன், கஞ்சாவும் அவர்களிடமிருந்து மீட்பு

கிளிநொச்சி, மார்ச் 30
கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஏ-35 பிரதான வீதியில் பயணித்த பெண்ணொருவரின் தங்கச்சங்கிலியை மோட்டார் 14

## இடைநிறுத்தப்பட்டுள்ள வீட்டுத்திட்டங்களுக்கு 6 லட்சம் ரூபா!

யாழ்ப்பாணம், மார்ச் 30
அரசாங்கத்தால் வழங்கப்பட்டு இடைநிறுத்தபட்ட வீட்டுத்திட்டங்களைத் தொடர்வதற்காக மீண்டும் நிதியுதவி வழங்கப்படும் என்று கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
யாழ்ப்பாணத்தில் பொது மக்களுக்கு வழங்கப்பட்ட 14

### மோடியின் வருகையின்போது

## மீனவர்கள் விவகாரம் ஆழமாகப் பேசப்படும்!

### கடற்றொழில் அமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 30
பிரதமர் மோடியின் வருகையின் போது இந்திய - இலங்கை மீனவர்களுக்கு இடையிலான பிரச்சினைகள் தொடர்பில் ஆழமாகப் பேச்சு வார்த்தை நடத்தப்படும் என்று கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகர் தெரிவித்தார். 13

## 24 மணிநேர மின்சாரம்; சொன்னவுடன் 'பவர்கட்'!

### மூக்குடைபட்ட வலுசக்தி அமைச்சர்



யாழ்ப்பாணம், மார்ச் 30
'யாழ்ப்பாணத்துக்கு 24 மணிநேரமும் மின்சாரத்தை வழங்குவோம்' என்று வலுசக்தி அமைச்சர் குமார ஜயக்கொடி உரையாற்றிவிட்டு அமர்ந்த சிறிதுநேரத்தில் மின் 14

## பேச்சுக்கு வந்தவர் தப்பியோட்டம்!

யாழ்ப்பாணம், மார்ச் 30
மீனவ அமைப்புகளுக்கு இடையிலான பேச்சு வார்த்தைக்காக, இந்தியாவில் இருந்து வருகைதந்த மீனவசங்கப் பிரதிநிதியைக் கைதுசெய்ய முற்பட்டதைத் 13

## விபத்தில் இளைஞர் உயிரிழப்பு!

யாழ்., மார்ச் 30
சுன்னாகம் - கந்தரோடை பகுதியில் நேற்று மதியம் இடம்பெற்ற மோட்டார் 14

## யாழ்ப்பாணத்துக்குள்ளும் ஆர்.எஸ்.எஸ். ஊடுருவல்

சென்னைப் பல்கலையின் பேராசிரியர் எச்சரிக்கை 14



'என்ன நல்லது செய்தாலும் அதுக்குள்ள்யும் ஒரு விளையாட்டுக்காட்டாமல் விடாயினம் பாருங்கோ'

## வதைமுகாம்கள் எல்லாவற்றையும் விசாரிப்போம்!

### அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவிப்பு

வவுனியா, மார்ச் 30
பட்டலந்த வதைமுகாம் மட்டுமல்ல பல வதை முகாம்கள் நாட்டில் செயற்பட்டுள்ளன. எனவே, அனைத்து வதை 14

# சஞ்சீவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | ஹந்தஹன ராசி சுப பலன் | NLB ஜய | மெகா பவர் | மஹஜன சம்பத | தன நிதானய | அத சம்பத |
|---|---|---|---|---|---|---|
| திகதி 29.03.2025 | திகதி 29.03.2025 | திகதி 29.03.2025 | திகதி 29.03.2025 | திகதி 29.03.2025 | திகதி 29.03.2025 | திகதி 29.03.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் 4032 | சீட்டிழுப்பு இலக்கம் 1099 | சீட்டிழுப்பு இலக்கம் 0058 | சீட்டிழுப்பு இலக்கம் 2138 | சீட்டிழுப்பு இலக்கம் 5790 | சீட்டிழுப்பு இலக்கம் 1820 | சீட்டிழுப்பு இலக்கம் 0365 |
| ஆங்கில எழுத்து Z | வெற்றி இலக்கினம் கடகம் | ஆங்கில எழுத்து Y | ஆங்கில எழுத்து T | ஆங்கில எழுத்து Q | ஆங்கில எழுத்து F | ஆங்கில எழுத்து Q |
| வெற்றி இலக்கங்கள் 01 38 53 79 | வெற்றி இலக்கங்கள் 06 09 36 46 | வெற்றி இலக்கங்கள் 3 7 5 2 | சுப்பர் இலக்கம் 04 | வெற்றி இலக்கங்கள் 4 5 4 7 5 2 | வெற்றி இலக்கங்கள் 04 36 58 77 | வெற்றி இலக்கங்கள் 4 7 5 2 |
| விசேட எழுத்து Z | | | வெற்றி இலக்கங்கள் 11 30 49 64 | | விசேட எழுத்து F | |

## பங்குனித் திங்கள் உற்சவம்

யாழ்ப்பாணம், மார்ச் 30
பிரசித்திபெற்ற மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் ஆலயத்தில் மூன்றாம் பங்குனித் திங்கள் உற்சவம் நாளைதிங்கட்கிழமை காலை 5 மணிக்கு சிறப்புப் பூஜைகளுடனும் அபிஷேகத்துடனும் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து காலை முதல் மாலை வரை பொங்கல் வழிபாடுகள் இடம்பெறவுள்ளன. (ச-41-17)

## தேசபந்துவுக்கு உதவிய பொலிஸ் கைது

கொழும்பு, மார்ச் 30
பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தலைமறைவாக இருப்பதற்கு உதவிய குற்றச்சாட்டில் கான்ஸ்டபிள் ஒருவர் உட்பட இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.
கடந்த பெப்ரவரி மாதம் 27 ஆம் திகதிக்கும் மார்ச் 19ஆம் திகதிக்கும் இடையில் தேசபந்து தென்னக்கோன் மறைந்திருக்க உதவிய குற்றத்துக்காக விசேட பாதுகாப்புப் பிரிவில் கடமையாற்றும் கான்ஸ்டபிள் ஒருவரும் தலவத்துகொடப் பிரதேசத்தைச் சேர்ந்த மற்றுமொருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். (ச-இ)


# காணி விற்பனைக்கு

## யாழ்ப்பாணம் உரும்பிராய் பகுதியில் 10 பரப்பு காணி விற்பனைக்குண்டு

### நிலப்பரப்பு

- பலாலி வீதியில் இருந்து 150 மீற்றர் தூரம்
- 20 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது
- உரும்பிராய் பெற்றோல் செற் முன் வீதியில் உள்ளது
- பயன் தரும் தென்னைகள் உள்ளன
- நல்ல சுற்று சூழல் குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி
- நல்ல தண்ணீர் ஊற்று சூழல்
- ஒரு பரப்பின் விலை 64 லட்சம்
- தரகர் தேவையில்லை
- பார்வையிடும் நேரம்: காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை

தொடர்புகளுக்கு: ஜெயம்
077 814 7389
077 986 5457

(CS/2829) J-1


| சுபிரி தன சம்பத | |
|---|---|
| திகதி | 29.03.2025 |
| தினம் | சனிக்கிழமை |
| வெற்றி வாரம் | 0498 |
| ஆங்கில எழுத்து | X |
| வெற்றி இலக்கம் | 9 3 6 6 6 0 |

| Super Ball | |
|---|---|
| திகதி | 29.03.2025 |
| தினம் | சனிக்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | 2764 |
| ஆங்கில எழுத்து | A |
| வெற்றி இலக்கம் | 06 07 33 78 |

| சனிதா | |
|---|---|
| திகதி | 29.03.2025 |
| தினம் | சனிக்கிழமை |
| ஆங்கில எழுத்து | F |
| வெற்றி இலக்கம் | 01 06 30 73 |
| வெற்றி வாரம் | 4925 |

| SASIRI | |
|---|---|
| திகதி | 29.03.2025 |
| தினம் | சனிக்கிழமை |
| வெற்றி வாரம் | 0653 |
| வெற்றி இலக்கம் | 03 11 12 |

| லக்ன ராசி | |
|---|---|
| திகதி | 29.03.2025 |
| தினம் | சனிக்கிழமை |
| | துலாம் |
| வெற்றி இலக்கம் | 01 07 32 33 |
| சீட்டிழுப்பு வாரம் | 4476 |

| KAPRUKA | |
|---|---|
| திகதி | 29.03.2025 |
| தினம் | சனிக்கிழமை |
| ஆங்கில எழுத்து | H |
| சுப்பர் இலக்கம் | 36 |
| வெற்றி இலக்கம் | 19 31 45 58 |
| வெற்றி வாரம் | 1940 |

| அத கோடிபதி | |
|---|---|
| திகதி | 29.03.2025 |
| தினம் | சனிக்கிழமை |
| ஆங்கில எழுத்து | F |
| வெற்றி இலக்கம் | 33 40 57 68 |
| வெற்றி வாரம் | 2590 |

## மருத்துவத்துறை வெற்றிடங்கள் உடனடியாக நிரப்பப்படவேண்டும்


கொழும்பு, மார்ச் 30
மருத்துவ நிர்வாகத்துறையில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புமாறு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திடம் சுகாதாரப் பிரதியமைச்சர் அறிவுறுத்தியுள்ளார்.
மருத்துவ நிர்வாகத்துறையில் பல வெற்றிடங்கள் காணப்படும் நிலையில் வெற்றிடங்களாகவுள்ள மருத்துவர்களின் சேவைகள் பதில் மருத்துவர்களாலேயே மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. இதனால் வேலைப்பளு அதிகரித்துள்ளது. எனவே வெற்றிடங்களாகக் காணப்படும் பதவிகளை உடனடியாக நிரப்பவேண்டும். அதேவேளை மருத்துவர்களின் இடமாற்றங்களில் தொழிற்சங்கங்களின் தலையீடுகள் காணப்படுகின்றன என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ச-41-6)


Smart Science Academy
A/L 2027
ஆரம்பம் APRIL 03
அனுமதிகள் 30-03-2025 இலிருந்து பெற்றுக்கொள்ளலாம்
PHYSICS T.சம்பந்தன்
CHEMISTRY S.சுரேஸ்குமார்
BIOLOGY K.
COM.MATHS V.ஹரிவண்ணன்
154A, Navalar Road, Jaffna.
Tel: 0777 872 903, 0775 559 028


# முல்லையில் பண்பாட்டு நடுவம் அமைக்க இந்தியாவை அணுகுவோம்!

## ரவிகரன் எம்.பி. தெரிவிப்பு

முல்லைத்தீவு, மார்ச் 30
முல்லைத்தீவு மாவட்டத்தில் பண்பாட்டு நடுவம் அமைப்பது தொடர்பில் இந்தியத்துணைத்தூதுவருக்கு எண்ணமுள்ளது. அரசாங்கம் உரியவகையில் அணுகினால் முல்லைத்தீவில் பண்பாட்டு நடுவம் அமைப்பதற்கு இந்தியா நிதியுதவிகளை வழங்கும் என்று வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
முல்லைத்தீவு மாவட்டத்தில் பண்பாட்டு நடுவம் அமைப்பது தொடர்பாக இந்தியத் துணைத்தூதுவர் சாய் முரளியை யாழ்ப்பாணத்தில் சந்தித்துப் பேசியுள்ளேன்.
இந்தியத்துணைத்தூதுவருக்கும் முல்லைத்தீவு மாவட்டத்தில் பண்பாட்டு நடுவம் அமைக்கும் எண்ணமுள்ளது.
முல்லைத்தீவு மாவட்டத்தில் பண்பாட்டு நடுவம் அமைக்கவேண்டுமென முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டது. இவ்வாறு எடுக்கப்பட்ட தீர்மானத்தை உரிய தரப்பினர்களுக்கு அனுப்பிவைப்பதெனவும் முடிவெடுக்கப்பட்டது - என்றார். (ச-246-213)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிராகரிக்கப்பட்ட வேட்புமனுக்கள் மீள்பரிசீலனைக்கு வாய்ப்பில்லை

## தேர்தல்கள் ஆணைக்குழு அறிவிப்பு

**கொழும்பு, மார்ச் 30**

**அனைத்து நிராகரிப்புகளும் சட்டவிதிகளைக் கண்டிப்பாகப் பின்பற்றிச் செய்யப்பட்டன. அந்த முடிவுகளைத் தேர்தல் ஆணையகம் மறுபரிசீலனை செய்யவோ அல்லது மாற்றவோ வாய்ப்பில்லை என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.**

இதுதொடர்பில் தேர்தல் ஆணையகத் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க தெரிவிக்கையில்,

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டதை மறுபரிசீலனை செய்யுமாறு பல அரசியற்கட்சிகள் கோரிக்கைவிடுத்துள்ளன.

அனைத்து நிராகரிப்புகளும் சட்டவிதிகளைப் பின்பற்றியே செய்யப்பட்டன. அதனை மீள்பரிசீலனை செய்வதற்கு வாய்ப்பில்லை. மே 6 ஆம் திகதி நடைபெறும் உள்ளூராட்சித் தேர்தலுக்கான ஏற்பாடுகள் தற்போது மும்மரமாக நடைபெற்றுவருகின்றன- என்றார். (ச-சி)

## மாணவியைக் கண்டித்த ஆசிரியருக்குப் பிணை

யாழ்ப்பாணம், மார்ச் 30

வடமராட்சியிலுள்ள ஆரம்பப் பாடசாலை ஒன்றில் ஐந்தாம் வகுப்பு மாணவி ஒருவரைக் கண்டித்த விவகாரம் தொடர்பில் பருத்தித்துறைப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட ஆசிரியரைப் பிணையில் விடுவிக்க பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குறித்த மாணவியின் பிழையான செயற்பாடு காரணமாகக் கண்டித்த ஆசிரியருக்கு எதிராக மாணவியின் தாயாரால் பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்தில் நேற்றுமுன்தினம் முறைப்பாடு செய்யப்பட்டது. முறைப்பாட்டுக்கமைய ஆசிரியர் கைதுசெய்யப்பட்டு நேற்றுமுன்தினம் பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். இதன்போதே ஆசிரியரை பிணையில் விடுவிக்க நீதிமன்றம் உத்தரவிட்டதுடன் வழக்கு விசாரணை எதிர்வரும் டிசெம்பர் 5 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (ச-100)

## வேட்புமனு நிராகரிப்புக்கெதிராக வல்வெட்டித்துறை சுயேச்சைக்குழு உயர்நீதிமன்றில் வழக்குப்பதிவு

யாழ்ப்பாணம், மார்ச் 30

2025 க்கான உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்கு வல்வெட்டித்துறை நகரசபைக்கு கையளிக்கப்பட்ட வேட்புமனு நிராகரிக்கப்பட்டமைக்கு எதிராக வல்வெட்டித்துறை சுயேச்சைக்குழு நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளது.

வேட்பாளர்களது பிறப்புச்சான்றிதழின் மூலப் பிரதி இணைக்கப்படவில்லை என்ற காரணத்துக்காக வல்வெட்டித்துறை சுயேச்சைக்குழுவின் வேட்புமனு நிராகரிக்கப்பட்டிருந்தது.

தேர்தல் ஆணைக்குழு தனது பொறுப்புகளை சரியான முறையில் மேற்கொள்ளத் தவறியுள்ளது என வல்வெட்டித்துறை சுயேச்சைக்குழுவின் முதன்மை வேட்பாளர் ச.செல்வேந்திரா தெரிவித்துள்ளார். (ச-100)

## வெங்காய விதை உற்பத்தி முல்லையில் ஊக்குவிப்பு

முல்லைத்தீவு, மார்ச் 30



முல்லைத்தீவு மாவட்டத்தில் பெரிய வெங்காயம் மற்றும் சின்ன வெங்காயம் ஆகியவற்றின் விதைகளைப் பெருக்கும் முகமாக உண்மை விதை உற்பத்தித் திட்டம் முல்லைத்தீவு மாவட்ட விவசாயத் திணைக்களத்தினால் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

ஐந்து விவசாயிகளுக்குத் தலா 100 மீற்றர் வர்க்கப் பரப்பளவு கொண்ட விவசாய நிலத்தில் பெரிய வெங்காய விதை உற்பத்திக்கான தாய்க் குமிழ் வழங்கிவைக்கப்பட்டது.

இதன் மூலம் ஒரு விவசாயி 10 கிலோவரை பெரிய வெங்காய விதையை உற்பத்திசெய்யமுடியும்.

அதேவேளை சின்ன வெங்காய விதைக்கு 8 பேருக்கு கால் ஏக்கர் நிலப்பரப்புக்கு சின்ன வெங்காயத் தாய்க்குமிழ் வழங்கிவைக்கப்பட்டது. இதன் மூலம் ஒரு விவசாயி 30 கிலோகிராம் விதையை உற்பத்திசெய்யலாம் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ச-125)

## புளியம்பொக்கணை உற்சவம் ஏற்பாடுகள் பூர்த்தி

கிளிநொச்சி, மார்ச் 30

வரலாற்றுச் சிறப்புமிகு கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய பொங்கல் உற்சவத்துக்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்திசெய்யப்பட்டுள்ளனவென கிளிநொச்சி மாவட்ட பதில் செயலர் எஸ்.முரளிதரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய பங்குனி உத்தரப்பொங்கல் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 11ஆம் திகதி இடம்பெறவுள்ளது. பொங்கல் உற்சவத்துக்குரிய போக்குவரத்து மற்றும் சுகாதாரம், பாதுகாப்பு ஏற்பாடுகள் அனைத்தும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன - என்றார். (ச-41-113)

## 'லைசென்ஸ்' இன்றி டிப்பர் செலுத்திய இளைஞன் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 30

சாரதி அனுமதிப்பத்திரம் இன்றி டிப்பர் ரக வாகனத்தைச் செலுத்திய இளைஞர் ஒருவர் மானிப்பாய் பொலிஸாரால் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார். சண்டிலிப்பாய்ச் சந்தியில் போக்குவரத்துக் கடமையில் ஈடுபட்ட பொலிஸார் டிப்பர் வாகனம் ஒன்றை வழிமறித்துச் சோதனையிட்டபோதே சாரதி அனுமதிப்பத்திரமின்றி டிப்பர் வாகனத்தை அவர் செலுத்திவந்தமை தெரியவந்தது.

அத்துடன் குறித்த சந்தேகநபர் ஏற்கனவே கிளிநொச்சிப் பொலிஸாரால் சாரதி அனுமதிப்பத்திரமின்றி வாகனம் செலுத்திய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டு நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்டவர் என்பதும் தெரியவந்தது. சந்தேகநபரையும் டிப்பர் வாகனத்தையும் நீதிமன்றில் முற்படுத்த பொலிஸாரால் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. (ச-125)

## உதைபந்தாட்டப் போட்டி

# சம்பியன் வென்றது வட்டக்கச்சி லக்கிஸ்ரார்

இந்த ஆண்டுக்கான கரைச்சிப் பிரதேச செயலக உதைபந்தாட்டப் போட்டியில் வட்டக்கச்சி லக்கிஸ்ரார் விளையாட்டுக்கழகம் சம்பியனைத் தனதாக்கியுள்ளது.

இந்த உதைபந்தாட்டத் தொடர் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமாகிய நிலையில் கடந்த திங்கட்கிழமை இறுதிப்போட்டி நடைபெற்றது.

இறுதிப்போட்டியில் ஆனந்தபுரம் ஸ்டார் ஈகிள் விளையாட்டுக்கழகமும் வட்டக்கச்சி லக்கிஸ்ரார் விளையாட்டுக்கழகமும் மோதின. 90 நிமிடங்கள் நீடித்த விறுவிறுப்பான இறுதிப்போட்டியில் இரண்டு அணிகளும் தலா ஒரு கோல் பெற்ற நிலையில், பெனால்டி உதைகள் மூலம் வெற்றி தீர்மானிக்கப்பட்டது.

அதில் வட்டக்கச்சி லக்கிஸ்ரார் விளையாட்டுக்கழகம் 4:3 என்ற கணக்கில் ஸ்டார் ஈகிள் விளையாட்டுக்கழகத்தைத் தோற்கடித்துச் சம்பியனாகியது. (ச-41-113)



## யாழ்ப்பாணத்தில் சுகாதார விதிமுறை மீறல் உணவகங்களுக்குத் தண்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 30

யாழ்ப்பாணத்தில் சுகாதாரச் சீர்கேட்டுடன் இயங்கிய மூன்று உணவகங்களுக்கு ஒரு இலட்சத்து 56ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

கோண்டாவில் பொதுச்சுகாதாரப் பரிசோதகர் க. ஜெயகாந்தன் தலைமையிலான குழுவினர் கடந்த 19ஆம் திகதி தமது பகுதியில் உள்ள உணவகங்களில் திடீர்ச் சோதனை நடவடிக்கைகளைமேற்கொண்டனர். இதன்போது சுகாதாரச் சீர்கேட்டுடன் இயங்கிய மூன்று உணவகங்கள் கண்டறியப்பட்டதுடன் அவற்றில் ஒரு உணவகத்தில் இருந்து காலாவதியான பொருள்களும் மீட்கப்பட்டன.

குறித்த உணவகங்களுக்கு எதிராக யாழ். மேலதிக நீதவான் நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்ட நிலையில் இந்த வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது ஒரு உணவகத்தில் காணப்பட்ட சீர்கேடுகளைச் சீர்செய்யும்வரையில் அதற்குச்சீல்வைக்குமாறும் உத்தரவிடப்பட்டதுடன் மூன்று உணவகங்களுக்கும் 90 ஆயிரம் ரூபா, 36 ஆயிரம் ரூபா மற்றும் 30 ஆயிரம் ரூபா என ஒரு இலட்சத்து 56ஆயிரம் ரூபா தண்டமும் விதிக்கப்பட்டது. (ச-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தன்னிச்சையில் காரைநகர் பஸ்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 30

காரைநகர் வழித்தடப் பேருந்துகள் மாவட்ட மட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தை மீறிப் பயணிக்கின்றன என்று மக்களால் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

காரைநகரிலிருந்து வருகைதரும் பேருந்துகள் ஆரியகுளம் சந்தியை அடைந்து பின்னர் வேம்படிச் சந்தியை அடைந்து அதனூடாக யாழ். தனியார் பேருந்து நிலையத்தைச் சென்றடைய வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனினும் குறித்த பஸ் சேவைகள் குறித்த பகுதிகளினூடாக இடம்பெறாது தமக்கு ஏற்றவகையில் முன்னெடுக்கப்படுகின்றன என்று சுட்டிக்காட்டப்பட்டது. இதுதொடர்பில் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத்தலைவரால் எந்தவித பதில்களும் வழங்கப்படவில்லை.

(ச- 125)

# சீரணி நாகபூணிக்கு சங்காபிகேம்

யாழ்ப்பாணம், மார்ச் 30

அருள்மிகு ஸ்ரீ சீரணி நாகபூஷணி அம்பாள் ஆலயத்தின் சங்காபிஷேகம் இன்று சிறப்புற இடம்பெற்றுள்ளது.

சங்காபிஷேகத்தைத் தொடர்ந்து கும்பாபிஷேக சிறப்பு மலர் வெளியீட்டு விழாவும், அம்பாளின் பவனியும் இடம்பெறவுள்ளது என்று தேவஸ்தான தர்மகர்த்தா சபையினர் அறிவித்துள்ளனர். (ம-இ)

# புதிய நிர்வாகத் தெரிவு

யாழ்ப்பாணம், மார்ச் 30

கொக்குவில் சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகிகள் தெரிவும் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணியளவில் சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளன. இந்தப் பொதுக்கூட்டத்துக்கு சனசமூக நிலைய அங்கத்தவர்கள், கிராமத்தவர்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் அனைவரையும் தவறாது சமூகமளிக்குமாறு சனசமூக நிலையத்தின் செயலாளர் கேட்டுள்ளார். (ச-66)

யாழ். பிரதேச செயலர் பிரிவுகளில்

# தலா 3 கிராமங்களைத் தெரிவுசெய்து 5 வருடகாலத்தில் மேம்படுத்தல்!

யாழ்ப்பாணம், மார்ச் 30

**யாழ்.மாவட்டத்திலுள்ள 15 பிரதேச செயலாளர் பிரிவுகளிலிருந்து தலா மூன்று கிராம அலுவலர் பிரிவுகள் தெரிவுசெய்யப்பட்டு ஒருங்கிணைந்த கிராம அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன என்று யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

இதன்பிரகாரம் குறித்த கிராமிய மக்களின் வருமானத்தை மேம்படுத்தல், நுண்ணிய மற்றும் நடுத்தரத் தொழில் முனைவோருக்குத் தேவையான ஆதரவை வழங்குதல், சுற்றுச் சூழலைப் பாதுகாத்தல் மற்றும் நிலைபேறான அபிவிருத்திப் பொது வசதிகளை மேம்படுத்துதல் என்பன இந்தத் திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

அதற்கமைய நெடுந்தீவு பிரதேச செயலாளர் பிரிவில் நெடுந்தீவு மத்தி மேற்கு, நெடுந்தீவு மேற்கு , நெடுந்தீவு கிழக்கு ஆகியவையும் வேலணைப் பிரதேச செயலாளர் பிரிவில் புங்குடுதீவு தெற்கு, அல்லைபிட்டி, வேலணை கிழக்கு ஆகியவையும் ஊர்காவற்றுறைப் பிரதேச செயலாளர் பிரிவில் நாராந்தனை தெற்கு, அனலைதீவு வடக்கு, எழுவைதீவு ஆகியவையும் காரைநகர் பிரதேச செயலாளர் பிரிவில் காரைநகர் தெற்கு , காரைநகர் கிழக்கு, காரைநகர் மேற்கு ஆகியவையும் யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் பிரிவில் கோட்டை, நாவந்துறை வடக்கு, புதிய சோனகத் தெரு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளும், நல்லூர்ப் பிரதேச செயலாளர் பிரிவில் அரியாலை கிழக்கு, வண்ணார்பண்ணை வட மேற்கு, திருநெல்வேலி மத்தி வடக்கு ஆகியவையும், சண்டிலிப்பாய் பிரதேசசெயலர் பிரிவில் நவாலி கிழக்கு, மாதகல் கிழக்கு, மாரீசன்கூடல் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளும், சங்கானைப் பிரதேச செயலர் பிரிவில் சுழிபுரம் கிழக்கு, அராலி மேற்கு, அராலி கிழக்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளும், உடுவில் பிரதேச செயலர் பிரிவில் ஏழாலை மத்தி, உடுவில் மத்தி வடக்கு , கந்தரோடை ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளும், தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் மல்லாகம் தெற்கு, வயாவிளான் கிழக்கு, கொல்லங்கலட்டி ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளும் இவ்வாறு தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

எதிர்வரும் 5 வருட காலப்பகுதியில் இந்தத்திட்டத்தினூடாக மேற்குறித்த கிராம அலுவலர் பிரிவுகள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன என்று அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரன் தெரிவித்துள்ளார். (ச-125)



# கர்ப்பவதி பராமரிப்பு நிலையம் சுழிபுரத்தில் நிரந்தரமாக நிறுவுக

யாழ்ப்பாணம், மார்ச் 30

சுழிபுரத்தில் காட்டுப்புலம் மற்றும் பாணாவெட்டை ஆகிய கிராமங்களுக்கு கர்ப்பவதி ஆரம்பப் பராமரிப்பு நிலையம் ஒன்று நிரந்தரமாக நிறுவப்படவேண்டும் எனச் சங்கானைப் பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரி வேண்டுகோள் விடுத்துள்ளார். சங்கானைப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் அவர் இதனைச் சுட்டிக்காட்டினார்.

குறித்த இரண்டு கிராமங்களும் பொதுப்போக்குவரத்து வசதிகள் இன்றிக் காணப்படுகின்றன. தற்பொழுது தற்காலிகமாக பிரதேச கிராம அபிவிருத்திச்சங்க கட்டட வளாகத்தில் குறித்த சேவை இடம்பெற்று வரும் நிலையில் அடிப்படை வசதிகளின்றிக் காணப்படுகின்றது என்றும் அவர் குறிப்பிட்டார்.

அதற்குப் பதிலளித்த பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத்தலைவர் இதனைச் சாதகமாகப் பரிசீலிப்பதாகத் தெரிவித்தார். (ச-125)

## வடக்கு கால்நடைத் திணைக்களத்தால்

# முல்லைத்தீவு, வவுனியாவில் 14 செயற்றிட்டங்கள் விரைவில்

முல்லைத்தீவு, மார்ச் 30

முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களில் மாகாண விசேட குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதியின் கீழ் 50 வீதம் மானிய அடிப்படையில் 14 திட்டங்களை முன்னெடுக்க வடக்கு மாகாணக் கால்நடை உற்பத்திச் சுகாதாரத் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

இந்தத் திட்டங்கள் மூலம் பயனடைய விரும்பும் பண்ணையாளர்கள் தமது பிரதேசக் கால்நடை மருத்துவ அலுவலகங்களில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு வடக்கு மாகாணக் கால்நடை உற்பத்திச் சுகாதாரத் திணைக்கள மாகாணப் பணிப்பாளர் மருத்துவக்கலாநிதி எஸ்.வசீகரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

புல் வளர்ப்பு மற்றும் பதனிடல், நல்லினப் பட்டிக் காளை மற்றும் பட்டிக் கடாக்கள் வழங்குதல், செயற்கைமுறைச் சினைப்படுத்தல் கன்றுகளுக்கான ஊக்குவிப்புப் பெறல், சிறிய அளவிலான பாற்பண்ணைகளுக்கான கால்நடைத் தொழுவங்களைக் கட்டுதல் மற்றும் புதுப்பித்தல், சிறிய நடுத்தர அளவிலான ஆட்டுப் பண்ணைகளுக்கு நல்லின ஆடுகளை வழங்குதல், உள்ளூர் இன ஆடுகளை இனவிருத்தி செய்யும் முகமாகப் பொருத்தமான கடா அல்லது மறி ஆடுகள், கொட்டகைகள் மற்றும் பயிற்சிகளை வழங்கல், ஆட்டுப் பண்ணையாளர்களுக்கு உயர்த்தப்பட்ட ஆட்டுக்கொட்டகை வழங்கல், தரமான மறி ஆடுகள் வழங்கல், விசேட தேவையுடைய குடும்பங்களுக்கு ஒரு மாத வயதுடைய 25 கோழிக்குஞ்சுகள் வழங்குதல், ஒரு மாத குஞ்சு வளர்ப்பதற்கான உபகரணங்கள் மற்றும் உள்ளீடுகள் வழங்கல், வர்த்தக ரீதியான கோழிப்பண்ணைகள் புனர்நிர்மாணம் மற்றும் கட்டுமானம் செய்வதனை ஊக்குவிக்க உள்ளீடுகள் வழங்கல், மடியழற்சி நோய்க்கட்டுப்பாட்டுக்கான உள்ளீடுகளை வழங்கல், பாற்கொள்கலன்கள் மற்றும் உபகரணங்கள் வழங்கல், பால்பதனிடல் தொடர்பான உபகரணங்கள் மற்றும் உள்ளீடுகள் வழங்கல் ஆகிய 14 செயற்றிட்டங்களுக்கே பண்ணையாளர்களிடமிருந்து பதிவுகளுக்கான கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-66)

# வட்டு சங்கானை மருத்துவமனைகள் குறைபாடுகளை நிவர்த்திசெய்யுங்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 30

சங்கானை மற்றும் வட்டுக்கோட்டைப் பிரதேச மருத்துவமனைகளின் குறைபாடுகளை நிவர்த்திசெய்யுமாறு குறித்த மருத்துவமனைகளின் நலன்புரிச்சங்கங்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

சங்கானைப்பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நேற்றுமுன்தினம் சங்கானைப் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

இதன்போது கருத்துத் தெரிவித்த சங்கானைப் பிரதேச மருத்துவமனை நலன்புரிச்சங்கத்தினர்,

எமது மருத்துவமனை தரமுயர்த்தபடவேண்டும். எம்மிடம் ஒரேயொரு அம்புலன்ஸ் மாத்திரமே காணப்படுகிறது. எமது பிரதேச மருத்துவமனை சார்ந்த தரமுயர்த்தலை மேற்கொள்வதன் மூலம் அதிகளவு நன்மை மக்களுக்குக் கிடைக்கும் என்றனர்.

வட்டுக்கோட்டைப் பிரதேச மருத்துவமனை நலன்புரிச்சங்கத்தினர் தெரிவிக்கையில், 10 வருடத்தில் 73 மகப்பேறுகள் எமது மருத்துவமனையில் நிகழ்ந்துள்ளன. ஆயினும் வெளிநோயாளர் பிரிவு விடுதியில் மருந்து சேகரிப்பு அறை பூரணப்படுத்தவில்லை. வெளிநோயாளர் பிரிவின் மூலம் நோயாளார் விடுதிக்குச் செல்வதற்கு மழைக்காலங்களில் நனைந்துசெல்ல வேண்டியுள்ளது.

இவை அனைத்துக்கும் மேலாக இரவு நேரங்களில் மருத்துவர், தாதியர் இருவர் ஆகியோரை கடமையில் அமர்த்தவேண்டும் என்றனர்.

(ச-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







## ஓட்டிசம் விழிப்புணர்வு



யாழ்ப்பாணம், மார்ச் 30

உலக ஓட்டிசம் தினம் வருடந்தோறும் ஏப்ரல் 2 ஆம் திகதி நினைவுகூரப்படும் நிலையில் அன்றையதினம் சுண்டுக்குளி வளர்பிறை திறனாளிகள் நிலையத்தின் ஏற்பாட்டில் 'வேறுபாடுகளைக் கொண்டாடுங்கள்' எனும் தொனிப்பொருளிலான ஓட்டிசம் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு நடைபெறவுள்ளது.

இதன்போது ஓட்டிசத்தால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு பேச்சுச் சிகிச்சை, தொழிற்பாட்டுச் சிகிச்சை, நடத்தைச் சிகிச்சை, யோகா, மசாஜ், இசைச் சிகிச்சை போன்றவை தொடர்பில் விளக்கமளிக்கப்படவுள்ளது. (ச-25)

## கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், மார்ச் 30

அச்செழு வடக்கு அருள்மிகு வல்லியப்பர் சிவன் திருக்கோவில் புதிய உற்சவ மூர்த்தி பிரதிஷ்டை செய்யும் நிகழ்வும் வசந்த மண்டப கலச கும்பாபிஷேகமும் நாளை திங்கட்கிழமை பகல் 12.12 மணி தொடக்கம் 1.42 மணி வரை இடம்பெறவுள்ளன.

தொடர்ந்து உற்சவ மூர்த்தி அபிஷேகப் பூஜைகளும் சுவாமி வீதியுலாவும் இடம்பெறும்.

நிகழ்வுகள் சிவஸ்ரீ. கிருஷ்ண, ஜோதீஸ்வரக்குருக்கள் மற்றும் சிவஸ்ரீ. சிவசரவணபவ. [illegible] குருக்கள் தலைமையில் இடம்பெறவுள்ளன. (ச-41)

## பருத்தித்துறையில் தையல் பயிற்சிநெறி

யாழ்ப்பாணம், மார்ச் 30

வடமராட்சி வலயக் கல்வி அலுவலக முறைசாராக் கல்விப் பிரிவினால் இலவச தையல் பயிற்சிநெறி எதிர்வரும் ஏப்ரல் மாத முதல் வாரத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

விரும்பியவர்கள் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்திசெய்து எதிர்வரும் ஏப்ரல் முதலாம் ஆம் திகதிக்கு முன்னர் வலயக் கல்விப்பணிப்பாளர், வலயக்கல்வி அலுவலகம், 1 ஆம் கட்டை பருத்தித்துறை வடமராட்சி எனும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-25)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சனிப்பெயர்ச்சிப் பலன்கள் 2025 - 2027

திருக்கணித பஞ்சாங்கத்தின்படி 2025 ஆம் ஆண்டில் சனிப் பெயர்ச்சியானது நேற்று 29 ஆம் திகதி நடைபெற்றுள்ளது. மீனராசிக்கு வரும் சனிபகவான் தொடர்ந்து 03.06.2027 வரை இரண்டரை வருடகாலத்துக்கு இந்த ராசியில் சஞ்சாரம்செய்து அருளாசி வழங்குவார்.





## கும்பம்

எதிலும் வழக்குப்போடும் கும்ப ராசிக்காரர்களே! நீங்கள் எவருக்கும் அஞ்சாமல் உண்மையைப் பேசுபவர்கள். எல்லாரும் நன்றாக இருக்கவேண்டும் என்ற எண்ணம் உடையவர்கள். இருப்பதைக் கொண்டு எளிய வாழ்வு முறையை வாழ்ந்து, அமைதியுடன் இருக்க விரும்புபவர்கள்.

இதுவரை உங்கள் ராசியில் இருந்த சனிபகவான் விலகி, தனவாக்குக் குடும்ப ஸ்தானத்துக்குச் செல்கிறார். மூன்றாம் பார்வையால் சுக ஸ்தானத்தையும், ஏழாம் பார்வையால் அஷ்டம ஸ்தானத்தையும், பத்தாம் பார்வையால் லாப ஸ்தானத்தையும் பார்க்கிறார். தாயின்வழியில் நன்மைகள் உண்டாகும். உங்களைவிட்டு விலகியிருந்த தாய்வழி உறவினர்கள் மீண்டும் வந்து இணைவார்கள். அவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்து, உங்கள் நன்மதிப்பை உயர்த்திக் கொள்வீர்கள்.

அதிகமான பயணங்களை மேற்கொள்ளநேரிடும். எந்த வயதினருக்கும் புதிதாக ஒரு கல்வியோ, கலையோ பயில வாய்ப்பு உண்டாகும். சிலருக்கு வெளியூர் சென்று படிக்கும் வாய்ப்புகளும் கிடைக்கும். செய்தொழிலில் வளர்ச்சி உண்டாகும். பழைய வாகனங்களை விற்றுவிட்டுப் புதிய வாகனங்களை வாங்குவீர்கள். அதேநேரம், உடல் நலத்தில் கவனமாக இருக்கவும்.

குடும்பத்தில் மகிழ்ச்சி பொங்கும். உங்கள் மனதில் சிலரது போக்கினால் வருத்தங்கள் ஏற்பட்டாலும், அதை வெளியில் காட்டிக்கொள்ளாமல் செயற்படுவீர்கள். எப்போதோ உங்களுக்கு உதவியவர்களுக்கு நீங்கள் மனமுவந்து உதவும் காலகட்டம் இது. சுதந்திரமாகச் சிந்தித்துத் தனித்துச் செயற்படுவீர்கள். புதிய உறவுகள் மலரும். அவர்கள் உங்கள் செயல்களுக்கு அரணாகத் திகழ்வார்கள். சிலர் புதிய திட்டங்களை நடைமுறைப்படுத்துவார்கள். வருமானம் பெருகும். இதனால் புதிய சேமிப்புத் திட்டங்களிலும் ஈடுபடுவீர்கள்.

**உத்தியோகத்தர்களுக்கு:**
விரும்பிய பணி உயர்வு கிடைக்கும். இதனால் ஊதியம் உயரும். மேலதிகாரிகள் உங்களை நம்பிப் புதிய பொறுப்புகளை ஒப்படைப்பார்கள். உடலில் இருந்த சோர்வும், மனதிலிருந்த குழப்பமும் மறையும். சக ஊழியர்கள் உங்களிடம் பகை மறந்து நட்புப் பாராட்டுவார்கள். அலுவலகத்தில் சிறப்பான பயிற்சிகளைக் கற்றறிந்து வெற்றியடைவீர்கள்.

**கலைத்துறையினருக்கு:** அனைத்து வேலைகளும் சுமுகமாக முடியும். உங்களைத் தேடிப் புதிய வாய்ப்புகள் வரும். திறமைகளை வெளிப்படுத்துவதற்கான சந்தர்ப்பங்கள் தாமாகவே அமையும்.

**பெண்களுக்கு:**
குடும்பத்தாரிடம் விட்டுக்கொடுத்து நடந்துகொள்ளவும். அனைவரையும் அனுசரித்துச் செல்லவும். நன்கு யோசித்த பிறகே முக்கிய முடிவுகளை எடுக்கவும். ஆடம்பரச் செலவுகளைத் தவிர்த்து, சேமிப்புகளில் கவனம் செலுத்தவும். கடுமையான சொற்களை உதிர்க்காமல், நிதானமாகப் பேசவும்.

## உழைப்பால் உயர்வு

**மாணவர்களுக்கு:**
படிப்பில் ஏற்படும் இடையூறுகளைச் சமாளிக்கும் ஆற்றலைப் பெறுவீர்கள். தெளிவான மனதுடன் படித்து, நல்ல மதிப்பெண்களைப் பெறுவீர்கள். நண்பர்களும் உங்களுக்கு உதவிகரமாக இருப்பார்கள். அதேசமயம், விளையாட்டுகளில் எதிர்பார்த்த வெற்றிகளைப் பெறமுடியாமல் போகும்.

**அவிட்டம்:** உழைப்பினால் வாழ்க்கையில் முன்னேறுவீர்கள். திடீரென்று வரும் கோபத்தைக் கட்டுப்படுத்தினால், வெற்றி நிச்சயம். புத்திக்கூர்மையுடன் செயல்களைச் செய்து, எதிலும் வெற்றி பெறுவீர்கள். வசதிகள் அதிகரிக்கும். மதிப்பும், மரியாதையும் கூடும். ஆனால், வீண் செலவுகள் உண்டாகும்.

**சதயம்:** தொழில், வியாபாரம் தொடர்பாகப் பயணங்கள் சென்றுவரவேண்டியிருக்கும். வியாபாரம் தொடர்பான செலவுகள் அதிகரிக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் வீண் அலைச்சலைச் சந்திப்பார்கள்.

**பூரட்டாதி:** புத்திக்கூர்மையுடன் செயற்பட்டுக் காரியங்களை வெற்றிகரமாகச் செய்துமுடிப்பீர்கள்.

# வேட்பாளர் அறிமுகக்கூட்டம் தமிழரசுக்கட்சி ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 30

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த இலங்கைத் தமிழரசுக்கட்சியின் சார்பில் 17 உள்ளூராட்சி சபைகளுக்குப் போட்டியிடும் வேட்பாளர்களின் அறிமுகக்கூட்டம் ஏப்ரல் 4ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் நல்லூர் இளங்கலைஞர் மன்ற மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.
நேற்று சனிக்கிழமை இடம்பெறுமென ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரும், கட்சியின் நீண்டகால நிர்வாகச் செயலாளருமான சு.சே.குலநாயகத்தின் ஏகபுதல்வியான சட்டத்தரணி ஆன் குலநாயகத்தின் திடீர் மறைவு காரணமாக இந்தக் கூட்டம் பிற்போடப்பட்டுள்ளதாகத் தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தெரிவித்துள்ளார். (ச-41-66)

# பொற்பதி அறிவாலய ஆண்டு நிறைவுவிழா

யாழ்ப்பாணம், மார்ச் 30

பொற்பதி அறிவாலயத்தின் 13 ஆம் ஆண்டுநிறைவுவிழாவும், சரஸ்வதி முன்பள்ளியின் 40 ஆவது ஆண்டு கால்கோள் விழாவும் பொற்பதி அறிவாலய மண்டபத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3 மணிக்கு இடம்பெறவுள்ளன.
அறிவாலயத்தின் தலைவர் சண். வாமதேவன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண பிரதம செயலாளர் எல். இளங்கோவன் கலந்துகொள்ளவுள்ளார். (ச- 25,66)

# ஏழாலையில் நடமாடும் சேவை

யாழ்ப்பாணம், மார்ச் 30

வலிகாமம் தெற்குப் பிரதேசசபையின் ஏழாலை உப அலுவலகத்தினரால் பொதுமக்களுக்கான நடமாடும் சேவை ஏழாலை மேற்கு உதயசூரியன் சனசமூக நிலைய மண்டபத்தில் நாளை திங்கட்கிழமை மு.ப 8:30 மணி முதல் பி.ப.1.30 மணி வரை நடத்தப்படவுள்ளது.
நடமாடும் சேவையில் பொதுமக்கள் தங்களின் ஆதனங்களுக்கான ஆதனவரி, வியாபாரங்கள் மற்றும் தொழில்களுக்கான வரி, உரிமக் கட்டணங்கள் போன்றவற்றை இலகுவாகச் செலுத்திக்கொள்ளமுடியுமென வலிகாமம் தெற்குப் பிரதேச சபையின் செயலாளர் அ.பிரதீபன் அறிவித்துள்ளார். (ச-25,66)

# செல்லப்பா சுவாமிகளின் 110 ஆவது குருபூசை

யாழ்ப்பாணம், மார்ச் 30

நல்லூர் தேரடிச்சித்தர் செல்லப்பா சுவாமிகளின் 110 ஆவது குருபூசை நிகழ்வு, நல்லூரில் அமைந்துள்ள சுவாமிகளின் நினைவாலயத்தில் நாளை திங்கட்கிழமை நடைபெறவுள்ளது. காலை 9 மணிக்கு சுவாமிகளுக்கு அபிஷேகம் இடம்பெற்று, தொடர்ந்து திருமுறை மற்றும் நற்சிந்தனைப் பாடல்கள் நடைபெறும். பகல்11.30 மணிக்கு குருபூசை இடம்பெறுவதையடுத்து, அடியவர்களுக்கு அன்னதானம் வழங்கப்படும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ச-25)

# இறுதிப்போட்டியும் பரிசளிப்பும்

யாழ்ப்பாணம், மார்ச் 30

உடுவில் பிரதேச செயலகத்தில் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான வருடாந்த விளையாட்டு விழாவின், இறுதிப்போட்டியும் பரிசளிப்பும் சுன்னாகத்தில் அமைந்துள்ள ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2.30 மணிக்கு இடம்பெறவுள்ளன.
உடுவில் உதவிப் பிரதேச செயலாளர் ஜெ.றெமினரன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் உடுவில் பிரதேச செயலாளர் பா.ஜெயகரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார். (ச-25,66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை


# பயனில்லையெனில் கூட்டங்கள் எதற்கு?

தையிட்டி திஸ்ஸ விகாரை தொடர்பில் தீர்மானமொன்றை மேற்கொண்டு அறிக்கை அனுப்பினாலும், அதற்குப் பதில் கிடைப்பது சந்தேகம்தான் என்று பகிரங்கமாக ஒப்புக்கொண்டிருக்கின்றார் வலிகாமம் வடக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஸ்ரீபவானந்தராஜா. வலிகாமம் வடக்குப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தின் மூலம் தீர்க்கக்கூடிய விடயமல்ல இது என்றும் அவர் கூறியிருக்கின்றார். ஸ்ரீபவானந்தராஜா ஒன்றும் பிரதேசசபை உறுப்பினரோ அல்லது பிரதேசங்களை மையப்படுத்திய சிவில் செயற்பாட்டாளரோ இல்லை. அவர் ஓர் ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர். ஆதலால், அவர் தற்போது கூறியிருக்கும் கருத்துகள் இந்த விடயத்தை அரசாங்கம் எவ்வாறு கைக்கொள்கின்றது என்ற மனநிலையின் வெளிப்பாடே.

வலிகாமம் வடக்கில் மக்களின் காணிகளை இராணுவம் அடாத்தாக ஆக்கிரமித்து விகாரையை அமைத்திருக்கின்றது. தமது காணிகளைத் தம்மிடம் ஒப்படைக்குமாறு காணிகளின் உரிமையாளர்கள் போராடிவருகின்றனர். இந்தப் பூதாகர விடயத்துக்கு எதிராக ஒரு கண்டனத் தீர்மானத்தை நிறைவேற்றி அனுப்பினாலோ, அல்லது படையினரிடமுள்ள காணிகளை விடுவிக்கவேண்டும் என்று ஒரு கடிதம் அனுப்பினாலோ அதற்குப் பதில்கூடக் கிடைக்காது என்றால், இந்த அபிவிருத்திக் கூட்டங்கள் எதற்கு? என்ற கேள்வி எழுகின்றதல்லவா.

'பிரதேசத்தின் அபிவிருத்தி தொடர்பில் கருத்திற்கொள்வதற்கே இத்தகைய அபிவிருத்திக் கூட்டங்கள்' என்று அரசதரப்பு நியாயம் கற்பிக்கலாம். இராணுவத்தால் கையகப்படுத்தப்பட்டுள்ள நிலங்களைவிடுவிப்பதுகூட பிரதேசஅபிவிருத்திதான். பிரதேச அபிவிருத்தியின் அடிப்படையே நிலவிடுவிப்பு என்றாய் இருக்கின்றபோது, இந்த விடயத்தில் குரல்கொடுக்கவேண்டிய உரிமையும் கடமையும் வலிகாமம் வடக்குப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்துக்கு இருக்கின்றது. ஆதலால், 'இங்கு கதைத்து எதுவும் ஆகப்போவதில்லை' என்ற தோரணையில் நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீபவானந்தராஜா வெளிப்படுத்தியிருக்கும் கருத்துகள் கடுமையாகக் கண்டிக்கப்படவேண்டியவை. வலி. வடக்கு ஒருங்கிணைப்புக் குழுவால், இந்த விடயத்துக்குத் தீர்வைக் காணமுடியாது என்றால், அந்தக் கூட்டத்தின் தலைமைப் பதவியை அவர் வலிந்து பிடித்திருப்பதில் அர்த்தமில்லை.

வலிகாமம் வடக்கில் உள்ள பலநூறு பிரச்சினைகளில் இராணுவத்துடன் சம்பந்தப்பட்ட விடயங்களே மிகவும் அதிகம். ஆக்கிரமிக்கப்பட்டுள்ள காணிகள், அடாத்தாக வரும் புத்தர்சிலைகள், விடுவிக்கப்படாத வீதிகள், அளவுக்கு அதிகமாக உறிஞ்சப்படும் தண்ணீர், பொதுமக்களின் வர்த்தக வாய்ப்புகளைப் பறிக்கும் விவசாய உற்பத்திகள் என எந்தப் பிரச்சினையையும் இராணுவத்தின் வகிபங்கு இல்லாமல் கதைத்துவிடமுடியாது. அப்படியாயின் இந்த விவகாரங்களில் எல்லாம், நாடாளுமன்ற உறுப்பினரும் ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான ஸ்ரீபவானந்தராஜாவின் நிலைப்பாடு என்ன? உண்மையில் வலி.வடக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் நோக்கம்தான் என்ன? என்பதை அவரும், அவர் சார்ந்த அரசாங்கமும் வெளிப்படுத்தினால், வீணாகப் பணத்தையும், நேரத்தையும் விழுங்கும் ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டங்களை வைக்காமலே விடலாமே?


செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com




நாளொரு நல்வார்த்தை

கடந்தகால நினைவலைகள் மனிதனை அறிவாளி ஆக்குவதில்லை; வருங்காலம் பற்றிய பொறுப்புணர்ச்சியே அறிவாளிக்கு அடையாளம்.

—பெர்னாரட்ஷா—




# மருந்துப் பற்றாக்குறைக்கு அரசாங்கத்திடம் தீர்வில்லை



சஜித் சுட்டிக்காட்டு

**கொழும்பு, மார்ச் 30**

**கடந்தகாலங்களில் எமது நாட்டின் சுகாதாரத்துறையில் மருந்துப்பொருள் மோசடி, திருட்டு போன்ற கடுமையான சிக்கல் நிலைகள் காணப்பட்டன. தரம் குறைந்த மருந்துகளால் பலரின் உயிர் பறிபோனது. இன்றும் கடுமையான மருந்துத் தட்டுப்பாடு நிலவுகிறது. இதற்கு அரசாங்கத்திடம் தீர்வில்லை என்று எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.**

எதிர்வரும் உள்ளூராட்சிமன்றத் தேர்தலை இலக்காகக்கொண்டு ஐக்கிய மக்கள் சக்தியின் மாத்தறை மாவட்ட வேட்பாளர்களுடன் இடம் பெற்ற சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஆஸ்துமா நோயாளிகளின் உயிரைக் காப்பாற்றும் மருந்து, நுரையீரல் தொற்றுக்கு வழங்கப்படும் மருந்து, நியூமோனியா நோயாளிகளுக்கு வழங்கப்படும் ஆன்டிபயாடிக் மருந்துகள், தீவிர சிகிச்சைப் பிரிவில் உள்ள நோயாளிகளுக்கும் பக்டீரியாத் தொற்றுக்கான நுண்ணுயிர் எதிர்ப்பு மருந்துகளுக்கும் கடுமையான பற்றாக்குறை நிலவுகின்றது. வளமான நாட்டை உருவாக்குவோம் என்று கொள்கைப்பிரகடனத்தை முன்வைத்தனர், ஆனால் நோயாளிகளுக்குத் தேவையான மருந்துகளைக்கூட பெற்றுக் கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை. இயலுமையற்ற அரசாங்கமே நாட்டில் காணப்படுகின்றது - என்றார். (ச-இ)

# நிதி நிறுவனங்களுக்கு மத்திய வங்கி தண்டம்

கொழும்பு, மார்ச் 30

மத்திய வங்கி இரண்டு நிதி நிறுவனங்களான இந்திய வங்கிக்கும், அமானா வங்கிக்கும் தண்டம் விதித்துள்ளது. பத்து இலட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல்களை அறிவித்தமைக்காக இந்திய வங்கிக்கு 20 இலட்சம் ரூபாவும், வாடிக்கையாளர்களின் புதுப்பிக்கப்பட்ட விவரங்களைச் சமர்ப்பித்தமைக்காக அமானா வங்கிக்கு பத்து இலட்சம் ரூபாவும் தண்டம் விதிக்கப்பட்டுள்ளது. (ச-41-6)

# விலங்குகள் தரவு; அறிக்கை தாமதம்

நாட்டிலுள்ள விலங்குகள் தொடர்பான கணக்கெடுப்பு அறிக்கையை வெளியிட மேலும் தாமதமாகலாம் என்று கால்நடைத் திணைக்களப் பணிப்பாளர் ஹேமந்த சமரசிங்க தெரிவித்துள்ளார். தற்போது பெறப்பட்ட தரவுகள் முழுமையாகத் துல்லியமானவை அல்ல என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ச-சி)



# பரப்புரையில் ஜனாதிபதி

கொழும்பு, மார்ச் 30

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் தலைமையில் தேசிய மக்கள் சக்தியின் உள்ளூராட்சித் தேர்தலுக்கான பரப்புரைக் கூட்டங்கள் நாடெங்கும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு மாவட்டத்திலும் நடக்கும் பிரதான கூட்டங்களில் ஜனாதிபதி அநுர கலந்துகொண்டு, தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர்களுக்கு ஆதரவு திரட்டுவார் என்றும் கூறப்படுகின்றது. (ச-சி)

# ரணில் வீட்டுக்குத் தீ சூத்திரதாரி எரங்க?

அரகலயப் போராட்டத்தின்போது முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வீட்டுக்குத் தீ வைத்த சம்பவத்தில் இளைஞர் விவகாரப் பிரதியமைச்சர் எரங்க குணசேகர சந்தேகநபராக அடையாளப்படுத்தப்பட்டுள்ளார்.

இந்த வழக்கு கடந்த புதன்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது சந்தேகநபரான இளைஞர் விவகாரப் பிரதியமைச்சர் உட்பட ஏனைய சந்தேகநபர்கள் நீதிமன்றத்துக்கு சமுகமளிக்கவில்லை. அடுத்த தவணைக்கு இளைஞர் விவகாரப் பிரதியமைச்சரை நீதிமன்றில் ஆஜராகுமாறு உத்தரவிட்ட நீதிவான் ஏனைய சந்தேகநபர்களுக்கு எதிராகப் பிடியாணை பிறப்பித்துள்ளார். (ச-33-6)

நாளை

திங்கட்கிழமை-பங்குனி- 16

31.03.2025

சுபநேரம் : 12.12- 01.42

ராகுகாலம் : 07.42 -09.12


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மன்னாரில் ரெலோ வேட்புமனுத்தாக்கல்

மன்னார், மார்ச் 30
நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலில் மன்னார்ப் பிரதேசசபையில் போட்டியிடுவதற்கான வேட்புமனுவை தமிழீழ விடுதலை இயக்கம் மன்னார் மாவட்டச் செயலகத்தில் கடந்த புதன்கிழமை கையளித்தது. இயக்கத்தின் மாவட்ட அமைப்பாளர் டானியல் வசந்தன் தலைமையில் வேட்புமனுத் தாக்கல் இடம்பெற்றது. (ச-25, 56)

# முல்லைத்தீவு மாவட்டத்தில் மட்டும் 239 சட்டவிரோத மது விற்பனையாளர்கள்

## நடவடிக்கை எடுக்கக்கோரும் ரவிகரன் எம்.பி.

முல்லைத்தீவு, மார்ச் 30
முல்லைத்தீவு மாவட்டத்தின் ஐந்து பிரதேச செயலர் பிரிவுகளிலும் சட்டவிரோத மது விற்பனையில் ஈடுபடும் 239 பேர் இனங்காணப்பட்டுள்ளனர். வெலிஓயாப் பிரதேச செயலர் பிரிவில் அச்சுறுத்தல் காரணமாகத் தரவுகளைத் திரட்ட முடியவில்லை என்று முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் து.ரவிகரன் இந்த விடயத்தைத் தெரிவித்தார். சட்டவிரோதமான மது விற்பனை, போதைப்பொருள் விற்பனை என்பவற்றைத் தடுக்கக் கடுமையான நடவடிக்கைகள் தேவை என்றும் அவர் வலியுறுத்தினார்.


முல்லைத்தீவு மாவட்டத்தில் சட்டவிரோத மதுவிற்பனையில் ஈடுபடுபவர்களாக கரைதுறைப்பற்றுப் பிரதேசத்தில் 87 பேரும், புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் 28 பேரும், ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் 50 பேரும், துணுக்காய் பிரதேசத்தில் 34 பேரும், மாந்தைகிழக்குப் பிரதேசத்தில் 40 பேரும் இனங்காணப்பட்டுள்ளனர். விவரங்கள் திரட்டும் போது அச்சுறுத்தல் காணப்பட்டதால் வெலிஓயா பிரதேச செயலரால் இது தொடர்பான தரவுகளைக் கையளிக்கமுடியாது போயுள்ளது எனக் கூறப்படுகின் றது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் அதிகளவான படையினர் காணப்படுகின்றனர். இரு பொதுமக்களுக்கு ஒரு படைச்சிப்பாய் என்ற நிலையே காணப்படுகின்றது.

ஆனாலும் போதைப்பொருள் ஊடுருவலும், பாவனையும் அதிகரித்திருக்கின்றன. இது தொடர்பில் உரிய தரப்பினர் ஏன் கவனம்செலுத்தவில்லை? அதேநேரம் சில பொலிஸாருக்கும் போதைப்பொருள் விற்பனையாளர்களுக்கும் இடையே நெருங்கிய தொடர்புகள் உள்ளன என்றும் பொதுமக்கள் முறையிடுகின்றனர்.

இந்தவிடயம் தொடர்பில் மிகக் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப் படவேண்டும்.

இந்தநிலைமை தொடர்ந்தால் தற்போதைய அரசாங்கத்தையும் மக்கள் வெறுக்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்படுவார்கள் என்று நாடாளுமன்ற உறுப்பினர் து.ரவிகரன் சுட்டிக்காட்டி யுள்ளார். (எ-246)



# பொலிஸாரின் இப்தார் நிகழ்வு

யாழ்ப்பாணம், மார்ச் 30
யாழ். பொலிஸ் பிராந்தியத்தின் ஏற்பாட்டில் இப்தார் நிகழ்வு கடந்த புதன்கிழமை தனியார் விருந்தினர் விடுதியில் நடைபெற்றது.

இதன்போது மௌலவிகளால் வடமாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கு திருக்குர்ஆன் கையளிக்கப்பட்டது. நிகழ்வில் சர்வமதத்தலைவர்கள், வடமாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் திலக் தனபால, யாழ். பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் மற்றும் நலன்விரும்பிகள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-41-125)

# சந்ததி பயனுற பசுமைத்திட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 30
சுற்றுச்சூழல் நிலைத்தன்மையை மேம்படுத்துதல் மற்றும் எதிர்கால சந்ததியினருக்கு ஆரோக்கியமான சூழலை வழங்குதல் எனும் நோக்கில் யாழ்ப்பாண மருத்துவ சங்கம் மற்றும் இணுவில் மெக்லியாட் மருத்துவமனை ஆகியவை இணைந்து பசுமைத்திட்டத்தை ஆரம்பித்துள்ளன. இந்தத் திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு கடந்த புதன்கிழமை யாழ்.மருத்துவபீட மாணவர் நல நோன்பு வளாகத்தில் நடைபெற்றது.

ஜே.எம்.ஏ உறுப்பினரும், மெக்லியாட் மருத்துவமனையின் பணிப்பாளருமான மருத்துவர் பா.சயந்தன் நெறிப்படுத்திய இந்த நிகழ்வில் மருத்துவபீடத்தின் பேராசிரியர் ஆர். சுரேந்திரகுமாரன், ஜே.எம்.ஏ. உறுப்பினர்கள், மெக்லியாட் மருத்துவமனை நிர்வாகம், ஊழியர்கள், மருத்துவபீடத்தின் விரிவுரையாளர்கள், பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-41-125-20)

# அரச ஊழியர்களுக்கு ஆக்கத்திறன் போட்டி

யாழ்ப்பாணம், மார்ச் 30
அரச நிறுவனங்களில் பணியாற்றும் உத்தியோகத்தர்களுக்கான வருடாந்த ஆக்கத்திறன் போட்டிகளுக்காக கலாசார அலுவல்கள் அமைச்சினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. சிறுகதை, பாடல், கவிதை, சிறுவர் பாடல், சிறுவர் இலக்கியச் சித்திரம், புகைப்படம், சிறுநாடகப் பிரதியாக்கம் , குறும்பட ஆக்கம் ஆகிய போட்டிகளில் கலந்துகொள்ளமுடியும்.

சிறுகதை , பாடல், கவிதை, சிறுவர் பாடல் ,சிறுவர் இலக்கியச் சித்திரம், புகைப்படம் ஆகிய ஆக்கங்களை மே மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னரும் சிறுவர் நாடகப்பிரதி மற்றும் குறும்பட ஆக்கங்களை ஜூன் முதலாம் திகதிக்கு முன்னரும் நிறுவனத் தலைவரின் விதிப்புரைக்கமைய அனுப்பிவைக்குமாறு அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார். மேலதிக விவரங்களை www.cultural.gov.lk v என்ற இணையத்தளத்திலோ அல்லது 0112861325 எனும் தொலைபேசி இலக்கத்துக்கோ அழைத்துத் தெரிந்துகொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-25, 9)



# பால்நிலை வன்முறைகள் விழிப்புணர்வுச் செயலமர்வு

யாழ்ப்பாணம், மார்ச் 30
பால்நிலை வன்முறை மற்றும் 1938,1929 ஆகிய உதவித் தொலைபேசி சேவைகள் தொடர்பாக அரச உத்தியோகத்தர்களுக்கான விழிப்புணர்வுச் செயலமர்வு யாழ்.மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது.

மாவட்ட மேலதிக செயலர் க.ஸ்ரீமோகனன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக மெய்யியல் மற்றும் உளவியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் ரி.திலீபன், யாழ். பல்கலைக்கழகச் சட்டப்பீடத் தலைவர் திருமதி கோசலை மதன், மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சின் உத்தியோகத்தர் ரி.ஜெகானந்தன் மற்றும் மாவட்ட உளவள உத்தியோகத்தர் பி.கோபி ஆகியோர் கருத்துரைகளை வழங்கினர். (ச-25, 66)




# தடுத்துவைக்கப்பட்ட மீனவர்களை பார்வையிட்ட இந்தியப்பிரதிநிதிகள்

வவுனியா சிறைச்சாலையில் விளக்கமறியலில் தடுத்துவைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களை, இந்திய மீனவ சங்கப் பிரதிநிதிகள் பார்வையிட்டுக் கலந்துரையாடினர்.

இருநாட்டு மீனவர்களின் பிரச்சினை தொடர்பில் இலங்கைக்கு வருகைதந்த இந்தியாவின் இராமேஸ்வரம் மாவட்ட மீனவப் பிரதிநிதிகளே நேற்றுமுன்தினம் வவுனியா சிறைச்சாலைக்குச் சென்று பார்வையிட்டனர். வவுனியாச் சிறைச்சாலை அதிகாரிகள், தடுத்துவைக்கப்பட்டுள்ள மீனவர்களைப் பார்வையிட இந்திய மீனவ சங்கப் பிரதிநிதிகளுக்கு விசேட ஏற்பாடுகளைச் செய்துகொடுத்திருந்தனர். (ச-110,18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விற்பனைக்கு



புத்தம்புதிய பாவனை
அற்ற உடற்பயிற்சி
செய்யும் சைக்கிள்
விற்பனைக்குண்டு.
விலை
பேசித்தீர்மானிக்கலாம்.

தொடர்பு:
**077 790 0947**

(cs 57825) N-1

---

# ROYAL GRANITE CORNER

வேலை
**வாய்ப்பு**

வெற்றிடம் :

- அலுமினியம் தொழிலாளர்கள்
- வெல்டர்கள் (welders)
- தச்சுவேலை செய்பவர்

அனுபவம் : 1 வருடம்
வயது : 45 க்கு கீழே
(நல்ல தகவல் தொடர்பு திறன் மற்றும் தொழில்நுட்ப அறிவு)

இடம் :
யாழ்ப்பாணம்

CV யை அனுப்பவும்:
www.royalgraniter@gamil.com
மேலும் தகவலுக்கு: 077 3580 547

---

# காணி விற்பனைக்கு

நீர்வேலி மாசுவன் சந்தியில் 2 பரப்பு
5.87 குழி உடைய சிறிய வீடும், கிணறும்
கொண்ட காணி விற்பனைக்குண்டு.
விலை 70 லட்சம்
( தரகர் தேவையில்லை )

Whatsapp:
00 337 748 98048
**076 755 2253**

---

# அவசர தேவை

சிறுநீரகம் பாதிப்படைந்த நபர்
ஒருவருக்கு அவசரமாக 0+வகையான
சிறுநீரகம் தேவைப்படுகின்றது.
வயதெல்லை 30-50

தொடர்பு:- **076 476 7400**

---

# காணி விற்பனைக்கு

நாவற்குழி புகையிரத
நிலையத்திலிருந்து 100m தூரத்தில்
4 பரப்புக்காணி
விற்பனைக்கு உண்டு.

**076 330 9761**

(cs.57838) (N-1)

---

# கடை விற்பனைக்கு

பலாலி றோட் உரும்பிராய் பகுதியில்
16 அடி அகலம், 37 அடி நீளமான
கடையும், 12 அடி அகலம் 37 அடி
நீளமான கடையும் உடனடியாக
விற்பனைக்கு உள்ளது.

தொடர்பு: **077 123 5307, 074 112 1359**

(cs.57838) (N-1)

---

# மாபிள் வேலை

உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில் அழகாக
மாபிள் பதித்துத் தரப்படும்.
ஒரு சதுர அடி - 75 ரூபாய்
நிலம் இழுத்து பதிக்க - 100 ரூபாய்

**077 334 1281**

---

# ஜேர்மனி, சுவிஸ், பிரான்ஸ், UK விசா ஆலோசனைகள்

சட்டரீதியாக.Visit, Spouse
விசாக்கள் தொடர்பாகவும்.
appeat தொடர்பிலும்
ஆலோசனைகள்
வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு:
**077 399 9877** கொழும்பு-4

---

# வெள்ளவத்தையில்
Office Space வாடகைக்கு உண்டு

| | | |
|---|---|---|
| 01ம் மாடி | 2000 Sq Feet | Price 500,00 |
| 02ம் மாடி | 2000 Sq Feet | Price 500,00 |
| 03ம் மாடி | 2000 Sq Feet | Price 500,00 |
| 04ம் மாடி | 2000 Sq Feet | Price 500,00 |
| 05ம் மாடி | 750 Sq Feet | Price 450,00 |
| 5 மாடிகளும் | 10000 Sq Feet | Price 2.4 Million |

முன்னால் தனியான இடம் W.A.Silva மாவத்தையை முகப்பாக
2000 sq feet Price 1 Million

இல.68.W.A. சில்வா மாவத்தை
வெள்ளவத்தை

தொடர்பு
**0777 311 110**

---

# யாழ்ப்பாணத்தில் காணி விற்பனைக்கு உள்ளது


ஒட்டுமடம் சந்தியில் இருந்து காரைநகருக்கு செல்லும் பிரதான வீதியோரமாக கல்லுண்டாய் வைரவர் ஆலயத்திற்கு அருகாமையில் இரண்டு பக்கம் வீதிகளைக்கொண்ட 33 பரப்பு மேட்டு நிலம், 11 பரப்பு வயல் நிலம் விற்பனைக்கு உள்ளது.

**விலை:** 1 பரப்பு 15 இலட்சம் பேரம் பேசத்தக்கது
(மொத்தமாக கொள்வனவு செய்ய
விரும்புவோர் மட்டும் தொடர்பு கொள்ளவும்)

தொடர்பு: **076 202 5812**

---

# நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



கடந்த 13.04.2021 அன்று இறைவனடி சேர்ந்த
எமது குடும்பத் தலைவர்

மொழி ஞாயிறு
## அமரர் K.C சிவசுப்பிரமணியம்
(ஆங்கில பேராசான்)

தோற்றம்
08.02.1944

மறைவு
13.04.2021

ஆண்டுகள் நான்கு ஓடி மறைந்தாலும்
உங்கள் பிரிவால் எங்கள் கண்கள் கனத்திருக்க
உங்கள் குரல் எங்கள் நினைவில் நிலைத்திருக்க
உங்கள் சொற்கள் எங்களை வழிகாட்ட
உங்கள் ஞானம் எங்களை மேம்படுத்த
உங்கள் நினைவுகள் எங்களில் நீக்கமற நிறைந்திருக்கும்

உங்கள் பாடம் எங்கள் அடையாளம்
உங்கள் சொற்கள் எங்கள் பலம்
உங்கள் அன்பு எங்கள் வரம்
உங்கள் அறிவு எங்கள் வழிகாட்டி....

கனத்திருக்கும் இதயத்தில்
கண்ணீருடன் இன்றும் நாங்கள்....

கந்த முருகேசனார் வீதி,
புலோலி தெற்கு.

குடும்பத்தினர்
உறவினர்கள், மாணவர்கள்

(29625) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

30.03.2025 ஞாயிற்றுக்கிழமை

## வேலைவாய்ப்பு

யாழில் இயங்கும் பலசரக்கு கடை மற்றும் சுப்பர் மார்க்கட்டுக்கு கீழ்வரும் ஆட்கள் தேவை.

1. Computer Billing + Cashier
2. Sales Assistant (உதவியாளர்)

வயது எல்லை - 18 - 35

யாழ். மாநகர சபைப்பு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.

(CS 57878) A

விபரங்களுக்கு: 077 4195 209

## நேபாளத்தில்கலவரம்

நேபாளத்தில் முடியாட்சிக்கு எதிராக, கடந்த ஒரு வாரமாக இடம்பெற்று வந்த போராட்டங்கள் கலவரங்களாக மாறியுள்ளன. துப்பாக்கிச்சூடு நடத்தி நிலைமைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ம)

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 01.03.2025 சனிக்கிழமை அன்று சிவபதமடைந்தஎமது குடும்பத் தலைவர்

### சின்னத்தம்பி குமாரசாமி

(ஓய்வுபெற்ற சுகாதார பரிசோதகர் மலேரியா தடுப்புப்பிரிவு)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (31.03.2025) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

சரவணை மேற்கு, 3ம் வட்டாரம்,
வேலணை
(சின்னமடு பாடசாலைக்கு அருகில்)

மகன்மார், மருமக்கள், பேரப்பிள்ளைகள்
மற்றும் உற்றார், உறவினர்கள்

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம் 26 . 10 . 1934

மறைவு 28 . 02 . 2025



கடந்த 28.02.2025 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த
எமது குடும்பத்தலைவி

### அமரர் குருசாமி சிவக்கொழுந்து

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (30.03.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் மறைவுச்செய்தி கேட்டு எங்களது துக்கத்தில் பங்குகொண்டு நேரில் வருகை தந்து மற்றும் தொலைபேசி, சமூகவலைத்தளங்கள் மூலமாக அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மேலும் கண்ணீர் அஞ்சலி பிரசுரங்கள் வெளியிட்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது குடும்பத்தின் சார்பில் நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

அளவெட்டி மத்தி,
அளவெட்டி.

(cs.57876) (N-1)

குடும்பத்தினர்

## THE ROYAL COLLEGE OF JAFFNA

தனியார் கல்வி நிறுவனம்-சங்கானை A/L கலைப்பிரிவு BATCH 2026, 2027 வகுப்புகள் தமிழ்-கரன், இந்துநாகரிகம் - சிந்துயன், மீடியா - பிரஷாத், அரசியல் - லக்ஷிகா, வரலாறு - லக்ஷன், சங்கானையில் A/L மாணவர்களுக்கான ஒரேயொரு தனித்துவ நிறுவனம் பிரான் பற்று வீதி, சங்கானை பிரதேச செயலகம் அருகில்

தொடர்பு: 077 675 1649

## வேலை வாய்ப்பு

யாழ் நகரில் அமைந்துள்ள ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ் மற்றும் சமுத்திரா ரேடர்ஸ் (hard ware) நிறுவனங்களுக்கான வேலை வாய்ப்பு. ஆண், பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.

தொடர்புகளுக்கு:
076 151 7481, 077 494 9683

## தேவை [பராமரிப்பாளர்]

மெடிஹெல்ப் (Medi help) கொழும்பு, மற்றும் யாழ் இல் இயங்கும் முதியோர் நோயாளர் பாரமரிப்புச் சேவைக்கு ஆண், பெண் பராமரிப்பாளர் தேவை வயது (20-55). சம்பளம் (30-50) தகுதிக்கேற்ப வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:
077 712 6859, 077 712 6860

## வாடகைக்கு

இடம்: திருநெல்வேலி சந்தி பலாலி வீதி, 11 அடி அகலம், 30+10 அடி நீளம் கடை மேல் பகுதி 3 அறைகளுடன் சேர்ந்தது

முற்பணம்: 2 கோடி

வாடகை : 3 லட்சம் பேச்சுவார்த்தைக்கு உட்பட்டது

தொடர்பு: 0044 774 676 7277, 077 818 4875

## வீட்டு வேலைக்கு ஆள் தேவை (பெண்)

திருநெல்வேலியில் உள்ள 4 பேர் கொண்ட குடும்பத்திற்கு வீட்டு வேலைக்கு ஆள் தேவை.

வயதெல்லை : 25-40

சம்பளம் : 8AM - 130 PM - 1000/=
8AM - 4 PM - 1500/=

(CS 2845A) A

தொடர்பு: 0777 898862

## கடை வேலைக்கு ஆள் தேவை

திருநெல்வேலியில் அமைந்துள்ள புடவை விற்பனை நிலையத் திற்கு வேலைக்கு ஆள் தேவை (பெண்).

சம்பளம் : நாளொன்றுக்கு 1000/=

வேலை நேரம் : 9 AM - 7 PM

வயதெல்லை : 18 - 30

(CS 28458) A

தொடர்பு: 076 306 3306

## வீடு வாடகைக்கு

யாழ் நகரில் 3 அறைகளுடன் மேல் மாடி வீடு வாகன நிறுத்த வசதியுடன் வாடகைக்கு உண்டு

தொடர்பு: 077 752 4011

## வேலையாள் தேவை

சாவகச்சேரி நகரில் இயங்கிவரும் மோட்டார் சைக்கிள் விற்பனை நிலையத்திற்கு வேலையாள் தேவை.

1. முகாமையாளர்
2. மோட்டார் சைக்கிள் திருத்துனர் (Mechanic)
3. உதவியாள் (Service)

T.P.: 077 6205 628

## விபத்தில் ஒருவர் இறப்பு!

யாழ்., மார்ச் 30

முல்லைத்தீவு - மருதங்குளம் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற விபத்தில் குடும்பத் தலைவர் ஒருவர் உயிரிழந்துள்ளார். ராமலிங்கம் தங்கேஸ்வரன் என்ற குடும்பத்தலைவர், பிறந்தநாள் ஒன்றுக்குச் சென்றுவிட்டுத்திரும்பியபோது எருமைமாட்டுடன் மோதுண்டு விபத்துக்கு உள்ளாகியுள்ளார். இதையடுத்து, முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சிகிச்சை வழங்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்ட நிலையிலேயே உயிரிழந்துள்ளார்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமச்சிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-26)

## தேவை

யாழில் இயங்கி வரும் சுப்பர் மார்க்கட்டுக்கு பழங்கள், காய்கறிகள் விற்பனை செய்யக்கூடிய நபர்கள் தேவை.

தொடர்பு:- 077 419 5209

## காணி விற்பனைக்கு

யாழ்.பொஸ்கோ வித்தியாலயத்திற்கு மிக அண்மையில் உள்ள றக்கா ஒழுங்கை மிக நல்ல சூழலில் அமைந்துள்ள 3 பரப்பு விஸ்தீரணமுடைய காணியும், அதில் அமைந்துள்ள 3 அறைகள், வரவேற்பறை, சமையலறை, குளியலறை கொண்ட பாவனைக்கேற்ற வகையில் பெரிய வீடும் விற்பனைக்கு உண்டு. தரகர் தொடர்புகொள்ளத் தேவையில்லை.

காலை 9.00 மணிதொடக்கம் நண்பகல் 12.00 மணிவரை மட்டும் தொடர்புகொள்ள முடியும்.

(CS 57877) A

தொடர்புகளுக்கு: 077 070 2922

## புளோரன்ஸ் நேர்சிங் முதியோர் பராமரிப்பு இல்லம்



### எங்களுடைய சேவைகள்

- நீண்ட கால படுக்கை நோயாளிகளை சுத்தமாக பராமரித்தல்
- அங்கம் இழந்தவர்களை அன்பாக பராமரித்தல்
- தனிமையில் மன அழுத்தத்தில் வாழ்பவர்களை பராமரித்தல்
- உங்களுடைய தொழில் மற்றும் குடும்ப சூழ்நிலை காரணமாக பெற்றோரை கவனிக்க முடியாதவர்கள் எங்களிடம் அனுமதியுங்கள்.
- விடுமுறைக்காக வெளியூர் செல்பவர்கள் நாட்கள் அடிப்படையிலும் வார அடிப்படையிலும் எம்மிடம் விட்டுச் செல்லலாம்.

மிகவும் குறைவான கட்டணத்தில் நிறைவான சேவைகள்

(CS/57185) U-1

தொடர்புகளுக்கு
077 718 6438 / 077 482 4473
சுன்னாகம் (வுந்நாகி அம்மன் கோவிலடி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

**உரும்பிராய் வடக்கில் 13 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு**

* இரண்டு பரப்பாகவும் 1 1/2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் 1 பரப்பின் விலை (1500000) பதின் ஐந்து இலட்சம் ரூபாய்.
* சரஸ்வதி சனசமூக நிலையம் அருகாமை குடியிருப்புக்கள் சூழ உள்ள பகுதி.
* செம்மண் நண்ணீர் ஊற்று நிலப்பரப்பு 20 அடி பாதை.
* உரும்பிராய் இந்துக் கல்லூரி **1 KM** தூரம்.
* உரும்பிராய் கற்பகப் பிள்ளையார் கோவில் **1 1/2 KM** தூரம்.
* தரகர் தேவையில்லை.

**தொடர்பு: 077 038 5455**
**077 468 3354**

(CS 57866) A


## பெரும் நிலநடுக்கத்துக்கு இலங்கையிலும் வாய்ப்பு!

### முற்காப்பு நடவடிக்கைகளை எடுக்குமாறு வலியுறுத்து

யாழ்ப்பாணம், மார்ச் 30

இலங்கையிலும் மிகப்பெரியளவில் நில நடுக்கங்கள் ஏற்படச் சாத்தியங்கள் உள்ளன. ஆதலால், அதற்குரிய முற்காப்பு நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ள வேண்டும் என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் புவியியல் துறையின் தலைவரும், வானிலை ஆய்வாளருமான நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:

இலங்கையிலும் அண்மைக்காலமாகச் சிறிய அளவிலான நிலநடுக்கங்கள் பதிவாகி வருகின்றன. எனினும், இதுவரை சேதங்களை ஏற்படுத்தக்கூடிய வகையில் அந்த நிலநடுக்கங்கள் அமையவில்லை. ஆனால், எதிர்காலத்தில் மிகப்பெரிய நிலநடுக்கங்களுக்குச் சாத்தியங்கள் உள்ளன. எனவே, அதை எதிர்கொள்ளும் வகையில் தற்காப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

நிலநடுக்கம் என்பது முற்கூட்டியே எதிர்வுகூற முடியாத ஒரு பேரிடர் நிலையாகும். ஆனால், அதன்மூலம் ஏற்படும் பாதிப்புக்களைக் குறைக்க முடியும். ஜப்பான் போன்ற நாடுகளில் இதற்குரிய செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வெற்றியும் பெற்றுள்ளன - என்றுள்ளது. (அ.ம66)


### தேவை

பொதி செய்தல் கூலியாட்கள். மில்வேலை தெரிந்தவர்கள். மில் உபகரணங்கள் (நெல்,தானியங்கள்)

**077 7722 215**

### பணிப்பெண் தேவை

யாழ்ப்பாணத்தில் சிறிய குடும்பத்திற்கு தங்கி இருந்து வீட்டு வேலை மற்றும் சமையல் செய்யக்கூடிய இளம் பணிப்பெண் தேவை.

தொடர்பு:- **077 165 8524**

(CS/57749) J-1



## COOL AIR (AIR CONDITIONERS)

**9000 Btu முதல் 60000 Btu வரை**
**Wall Mounted / Floor Standing / Ceiling Mount / Cassette type**
**Hotel / Home / Wedding Hall / Shop**
இதற்குரிய சகல விதமான குளிரூட்டிகளும்
**Inverter Model** குளிரூட்டிகள். **Non-Inverter Model** குளிரூட்டிகள்



* **03 meter copper pipe free**
* **03 free service**
* **01 year Full Unit Warranty**
* **05 years compressor warranty**
* **Installation Free**
* **Outdoor Bracket Free**

**எமது சேவைகள் :** ◆ குளிரூட்டி பொருத்துதல்
◆ குளிரூட்டி திருத்த வேலைகள்
◆ குளிரூட்டிகள் சேர்விஸ் செய்தல்

**முகவரி: 477, K.K.S. Road, Tellippalai**
**T.P: 077 7738 888, 077 2176 413, 021 438 8808**

(CS 2838) A


## மரண அறிவித்தல்

தோற்றம் 08 . 09 . 1930 | மறைவு 29 . 03 . 2025



### வல்லிபுரம் அப்புத்துரை

சிறுவிளான் இளவாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் அப்புத்துரை அவர்கள் நேற்று (29.03.2025) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் - கண்ணாத்தை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற செல்லப்பா - செல்லாச்சி தம்பதியரின் அன்பு மருமகனும், அமரர் இராசமணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான கனகம்மா, கதிரவேலு, பாக்கியம், நாகராசா பாலசிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரரும், சத்தியராஜ், சத்தியபாலன், சத்தியஜீவன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், உதயகுமாரி, சறோஜினிதேவி, கலாமதி ஆகியோரின் அன்பு மாமனாரும், உதய சத்தியா, பிரமோதி சத்தியா, சந்துனி சத்தியா, ஜோனாதன் நிருபன் ஒமேஸ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.03.2025) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் பி.ப 3.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக சிறுவிளான் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(CR 44708) A

தகவல்: குடும்பத்தினர்.

ஓம் விராட் விஸ்வபிரம்மனே நம

## மரண அறிவித்தல்



### கந்தையா மகாலிங்கம்

புங்குடுதீவு 4ஆம் வட்டாரத்தினை பிறப்பிடமாகவும் தச்சன்தோப்பு வேலம்பிராய்யை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா மகாலிங்கம் அவர்கள் நேற்று (29.03.2025) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலம்சென்றவர்களான கந்தையா-வள்ளியம்மை தம்பதியரின் மூத்த மகனும், காலம்சென்றவர்களான கந்தையா-அவூர்வம் தம்பதியரின் அன்பு இளைய மருமகனும், காலம்சென்ற முத்தம்மாவின் அன்பு கணவரும், செல்வராணி, காலஞ்சென்ற யோகராணி, சூரியகுமார், உதயகுமார் ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்றவர்களான துரையப்பா, சரஸ்வதி மற்றும் சிவகுானம், காலஞ்சென்ற போனந்தம் மற்றும் சுந்தரலிங்கம், காலம்சென்ற நல்லம்மா ஆகியோரின் மைத்துனரும், சுசிதன்(மதுான்), சுகிர்தன்(மதூஸ்), அபிராமி ஆகியோரின் அன்புத் தந்தையும், டியாளினியின் பாசமிகு மாமனாரும், கிபிஷான், ஆராதனா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (30.03.2025) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் பிற்பகல் 1.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் வேலம்பிராய் பிணமுருங்கை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

தோற்றம் 13 . 02 . 1955 | மறைவு 29 . 03 . 2025



### ஐயாத்துரை அருளம்பலம் (பாலன்)

நுணாவில் மேற்கை பிறப்பிடமாகவும் ஜேர்மனி Bochum ஐ வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்துரை அருளம்பலம் (பாலன்) அவர்கள் நேற்று (29.03.2025) சனிக்கிழமை ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை-நாகம்மா தம்பதியரின் அன்பு புதல்வனும், நடராசா-செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், ஜெயராணி அவர்களின் பாசமிகு கணவரும், கிரிஷான், தர்ஷான், சுலக்சான், கீர்த்தனா ஆகியோரின் பாசமிகு தந்தையும், லக்சி, அபிரா, பேட்ரா, கிருஷாந்தன் ஆகியோரின் அன்பு மாமனாரும், சஷ்வின், கயலி, ஈஷான் ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்றவர்களான அம்பலவாணர், பவளராணி, சோமசுந்தரம், பத்மநாதன், செல்வராணி மற்றும் யோகராணி, கமலராணி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதி கிரிகைகள் பற்றிய விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

00491628034165
0776236516

தகவல் :
குடும்பத்தினர்.

(CR 44707) A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

CMYB

# 31 ஆம் நாள் நினைவலைகள்



தோற்றம் 19 . 04 . 1935

மறைவு 28 . 02 . 2025

## அமரர் கந்தையா மனோன்மணி

அன்பின் அகராதியாய் அவதரித்த எம் தாயே!
அறிவிற்கு இலக்கணமாய் இருந்து வழிகாட்டி
அனைவரையும் இன்புற்று அரவணைத்து
அன்போடு பரிமாறி விருந்தோம்பல் செய்த
அன்னையே உங்களுக்கு நிகர் இல்லையே
அம்மா என்று இனி நாம் யாரை அழைப்போம்!

**உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்**

இல.07, சென்மேரிஸ், 2 ஆம் ஒழுங்கை, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

(cs.27010) (N-1)

பிரிவால்துயருறும்
குடும்பத்தினர்

# 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 19 . 11 . 1939

முருகன் காலடியில் 17 . 03 . 2018

## அமரர் புனிதவதி சந்திரசேகரம்

எம்மை விட்டு நீர் நீங்கி
ஆண்டுகள் ஏழு சென்றதம்மா!
ஆண்டுகள் எத்தனை சென்றாலும்
உம் நினைவு எம்மை விட்டகலாது
எம்மை அன்பினாலல், பண்பினால்
கட்டி அரவணைத்தவளே!
உம் பந்தமும் சொந்தமும்
ஏங்கிப் பரிதவிக்க எம்மை விட்டுப்
பிரிய உமக்கு எத்தனை அவசரமேன்?
புரியவில்லை - ஏன் என்று !
வந்தவர்கள் யாரும் நிலைத்ததில்லை!
இது இந்த வையகத்தின் நியதி
அறிவோம் யாம் சென்றவர்கள்
எங்குற்றார் என்று
யாரும் அறிந்ததில்லை
ஆனால் யான் அறிவேன்
சென்ற இடத்தை!
அந்த இடம் வேறு எந்த
இடமும் இல்லை.
என் இதயமும் நீர் இருக்குமிடம்
கண்ணீர் திவலைகள்
என் வழியோரத்தில்
அந்த விழி நீர் சொரிந்து அன்பே
உன்னை ஆராதிக்கின்றேன்
உன் பந்தங்களுடன் இணைந்து.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

21/4, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி.
30.03.2025

நீங்கா நினைவுகளுடன்
உன்துணை சந்திரசேகரம்

cs.2826) (N-1)

# விடுதலைப்புலிகள் மீண்டும் வரலாம்!

## அஜித் பி பெரேரா தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 30
சர்வதேச ரீதியில் விடுதலைப்புலிகள் மீண்டும் எழுச்சி பெறுவதற்குச் சாதகமான சாத்தியக்கூறுகள் உருவாகி வருகின்றன என்று நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அஜித் பி பெரேரா மேலும் தெரிவித்ததாவது:-

ஸ்ரீலங்காவின் முன்னாள் இராணுவத்தளபதிகள் மற்றும் கடற்படைத் தளபதிக்கு எதிராக பிரிட்டன் விதித்துள்ள பயணத்தடை தொடர்பில், அரசாங்கம் பலவீனமானதொரு பதிலையே வழங்கியுள்ளது.

பிரிட்டனின் தடை தொடர்பில் வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் இலங்கையின் நிலைப்பாடு வலுவாகக் குறிப்பிடப்படவில் லை. பொறுப்புக்கூறல் தொடர்பிலும் காத்திரமான கருத்துக்கள் வெளிப்படுத்தப்படவில்லை.

ஐரோப்பிய நாடுகளில் தேர்தல்கள் வரவுள்ளன. எனவே, அரசியல் ரீதியிலான நகர்வுகளுக்காக எதிர்காலத்திலும் இவ்வாறான தடைகள் வரக்கூடும். ஆதலால், சர்வதேச நிகழ்ச்சி நிரல் தொடர்பில் நாம் புத்திக்கூர்மையுடன் செயற்படவேண்டும்.

தற்போதைய அரசாங்கத்துக்கு அனுபவம் இல்லை. தூரநோக்குச் சிந்தனை கிடையாது. அரசாங்கத்தில் வெளிவிவகாரம் மற்றும் மனித உரிமைகள் தொடர்பில் செயற்படும் குழு பலவீனமானது. அதனால்தான் வெளிவிவகார அமைச்சு பலவீனமானதொரு பதிலை வழங்கியுள்ளது-என்றார்.

(அ-ம-44)

**வேலையாள் தேவை**

கொழும்பில் இயங்கும் பிரபல புடவையகம் ஒன்றிற்கு ஆண் வேலையாள் தேவை. தங்குமிட வசதி உண்டு. சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக் கப்படும்.

**077 539 6262**

**மணமகள் தேவை**

1993, இந்து, திருவாதிரை, IT SUPPORT
பூர்வீகம் - புலோலி, வதியுமிடம் - AUSTRALIA
மணமகன் பதிவு இல: 10686.
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
இணையவழி திருமணசேவை.
அழையுங்கள் 076 664 9401
www.EQMarriageService.com

(CS/299944) J-1

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 25 . 06 . 1944

மறைவு 28 . 03 . 2025

எமது ஆலயத்தின் பரிபாலன சபை உறுப்பினராக செயற்பட்டு நிர்வாக செயற்பாடுகளிற்கும் ஆலயத்தின் வளர்ச்சிக்கும் தொண்டாற்றிய

## அமரர் இ. மகேஸ்வரி

அவரது மறைவு எமக்கு பேரிழப்பாகவுள்ளது. அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய கைதடி வீரகத்திப்பிள்ளையாரை பிரார்த்தனை செய்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

நம்பிக்கை பொறுப்பாளர், பரிபாலன சபையினர்,
கைதடி வீரகத்திப் பிள்ளையார் கோயில்
முதலாய கோயில்கள், கைதடி.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## பரமேஸ்வரி அன்ரனி

(உப அதிபர் யா/ ஆனைப்பந்தி மெ.மி.த.க. பாடசாலை)

தோற்றம் 11.02.1944

மறைவு 09.04.2024

அன்பான அம்மா - அம்மா
ஆண்டொன்று சென்றது அம்மா
இன்றுவரை புரியவில்லை
ஈகையுடன் வாழ்ந்தவரே - நீரே
உரிமையுடன் வாழ வழிகாட்டியவரும் நீரே
ஊருக்கெல்லாம் உறவாகி
எல்லாரையும் ஆளாக்கியவரே
ஏற்றமுடன் வாழ வென
ஐயமும் கரைந்தீரே
ஒருவரையம் பகைக்காமல்
ஓர்மையாய் வாழ வைத்தீரே
உங்கள் ஆன்மா சாந்தியடையட்டும்.

[illegible] வீதி,
யாழ்ப்பாணம்.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

# மயங்கி வீழ்ந்து இறப்பு!

வீதியில் மயங்கி வீழ்ந்தவர் சிகிச்சையின்போது நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

புங்குடுதீவு முதலாம் வட்டாரத்தைச்சேர்ந்த வசந்தா சிறீகாந்தன் (வயது-68) என்ற நபரே உயிரிழந்தவராவார்.

அவர் கடைக்குச் சென்றுவிட்டுத் திரும்பும்போதே மயங்கி வீழ்ந்துள்ளார். இதையடுத்து, யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் நேற்று உயிரிழந்துள்ளார். இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமச்சிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மும்பைக்கு மீண்டும் நேற்றுத் தோல்வி!

**குஜராத், மார்ச் 30**

**ஐ.பி.எல். தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் மும்பையைத் தோற்கடித்து, தனது வெற்றிக் கணக்கை ஆரம்பித்தது குஜராத்.**

முதலில் துடுப்பெடுத்தாடிய குஜராத் அணி 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 196 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக சாய் சுதர்சன் 63 ஓட்டங்களையும், பட்லர் 39 ஓட்டங்களையும், கில் 38 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் பாண்டியா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்குக் களமிறங்கிய மும்பை அணி 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 160 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. அதிகபட்சமாக சூரியக்குமார் யாதவ் 48 ஓட்டங்களையும், திலக் வர்மா 39 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் சிராஜ், பிரசித் கிருஷ்ணா இருவரும் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்கள். (ம)







## மீனவர்கள்...

அவர் மேலும் தெரிவித்ததாவது:-
இந்தியப் பிரதமர் மோடியுடன், மீனவர்களின் பிரச்சினைகள் தொடர்பிலும் ஏனைய விடயங்கள் தொடர்பிலும் ஜனாதிபதி அநுரகுமார விரிவான கலந்துரையாடலை மேற்கொள்ளவுள்ளார். மோடியுடைய வருகை மீனவர்களின் பிரச்சினையைக் கையாள்வதற்கு மட்டுமானதல்ல. பல்வேறுபட்ட ஆழமான விடயங்களை இரு நாடுகளின் தலைவர்களும் கலந்துரையாடவுள்ளனர்.
இந்தியாவுக்கும் எங்களுக்கும் எந்தவித பகையும் கிடையாது. இந்திய மீனவர்களுக்கும் எங்களுக்கும் எந்தவிதமான கோபமும் கிடையாது. இந்திய இழுவைமடிகள் எமது கடலுக்குள் நாசகரமான வேலைகளில் ஈடுபடுவதுதான் எங்களின் ஒரே பிரச்சினை. இந்திய இழுவைமடிகள் இவ்வாறு செயற்பட்டுவந்தால், இன்னும் பத்து வருடங்களில் எங்களின் கடல்வளம் இல்லாமல் போய்விடும். இதை அனுமதிக்கக்கூடாது.
இந்தியப் பிரதமரைப் பாதுகாப்பதோ, இந்தியத் தூதுவரைப் பாதுகாப்பதோ அல்லது இந்திய மீனவர்களைப் பாதுகாப்பதோ எமது கடமையல்ல. எமது மீனவர்களைப் பாதுகாப்பதுதான் எங்களின் கடமை. அதற்கே நாங்கள் முன்னுரிமை வழங்குவோம் - என்றார். (அ-ம-125)

## பேச்சுக்கு...

தொடர்ந்து அவர் அவசரமாக நாட்டை விட்டுத் தப்பிச்சென்றுள்ளார்.
அத்துமீறிய மீன்பிடி தொடர்பில் இலங்கை மீனவ அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கும், இந்திய மீனவ அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கும் இடையில் அண்மையில் பேச்சுவார்த்தை இடம்பெற்றது. இதற்காக வருகைதந்த இந்தியப் பிரதிநிதியான ஜேசுராஜாவுக்குச் சொந்தமான படகு இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டதால், அவர் அந்த வழக்கின் முதலாம் எதிராளியாக உள்ளார்.
இதனால், அவரைக் கைதுசெய்வதற்காக மன்னார் மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களம் முயற்சிகளை மேற்கொண்டது. இதற்காக சட்டமா அதிபர் திணைக்களத்தின் அனுமதியும் பெறப்பட்ட நிலையில், இந்த விடயத்தை அறிந்துகொண்ட ஜேசுராஜா நேற்று முன்தினம் மாலை அவசர அவசரமாக நாட்டைவிட்டு வெளியேறிச் சென்றுள்ளார். (அ-ம-125)

## 'ஆனையிறவு...

இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.
தேசிய உப்பு நிறுவனத்தின் ஆனையிறவு உப்பு உற்பத்தித் தொழிற்சாலையில், மேசை உப்பு உற்பத்தியை ஆரம்பிக்கும் நிகழ்வு நேற்றுச் சனிக்கிழமை இடம்பெற்றது. கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சி யாண்மை அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி, கடற்றொழில் நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இ.சந்திரசேகர் ஆகியோரின் பங்கேற்புடன் இந்த நிகழ்வு ஆனையிறவில் நடைபெற்றது. இதன்போது மக்கள் மத்தியில் உரையாற்றுகையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
ஆனையிறவில் உற்பத்தி செய்யப்படும் உப்பானது தற்பொழுது 'ரஜ உப்பு' என்ற பெயரிலேயே வெளிவருகின்றது. கடந்த ஆட்சிக் காலத்திலேயே பெயர்மாற்றம் செய்யப்பட்டுள்ளது. உடனடியாக அந்த பெயரை மாற்றமுடியாது. அதற்கென நடைமுறைகள் உள்ளன. உடனடியாக நடவடிக்கைகள் மீள ஆரம்பிக்கவேண்டும் என்பதற்காகவே பழைய பெயரிலேயே விநியோகிக்கப்படுகின்றது. வெகுவிரைவில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு ஆனையிறவு உப்பளத்தின் பெயரிலேயே இலங்கையில் மட்டும் அல்ல, உலகம் முழுவதும் விநியோகிக்கப்படும். இது தொடர்பில் எமக்கு கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி உத்தரவாதம் வழங்கியுள்ளார் - என்றார். (அ-ம-26)

# மரண அறிவித்தல்



## ஸ்ரீஸ்காந்தன் வசந்தா

| அன்னை மடியில் | ஆண்டவன் அடியில் |
|---|---|
| 20.11.1956 | 29.03.2025 |

புங்குடுதீவு 1ம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஸ்ரீஸ்காந்தன் வசந்தா அவர்கள் நேற்று (29.03.2025) சனிக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - புஸ்பவதி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கைலாசபிள்ளை - கண்ணம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், ஸ்ரீஸ்காந்தன் (உரிமையாளர், அம்பாள் களஞ்சியம்) அவர்களின் அன்பு மனைவியும், சிவகஜனி (சாலினி, வளர்மதி முன்பள்ளி ஆசிரியர், கொக்குவில்), ஷாரங்கன் (முகாமையாளர், வியாபார முன்னேற்றம், விரிவுரையாளர் ESOFT METRO CAMPUS JAFFNA.) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற வரதா மற்றும் வதனி ஆகியோரின் அன்பு சகோதரியும், உருத்திரக்கண்ணாவின் அன்பு மாமியாரும், ஷஸ்வினி, ஸ்ரீவர்ணி ஆகியோரின் அன்புப் பேரத்தியும், புஸ்பமாலா, இரஞ்சிதமாலா, ஸ்ரீதரன் (பொலிவியா), காலஞ் சென்ற ஜீவமாலா, சிறிவரதன் மற்றும் ஸ்ரீபாலன் (ஜேர்மனி), ஜெயமாலா ஆகியோரின் அன்பு மைத்துனியும், இரத்தினவேல் (அத்தான்), தர்மசேனன், விஜயலலிதா, காலஞ்சென்ற தங்கேஸ்வரன் மற்றும் கலாராணி, அருளானந்தம், பற்றீசியா ஆகியோரின் அன்பு சகலியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (31.03.2025) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது கொக்குவில் இல்லத்தில் நடைபெற்று, பின்னர் பூதவுடல் புங்குடுதீவில் உள்ள அவரது இல்லத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, பிற்பகல் 3.00 மணியளவில் புங்குடுதீவு மணற்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**36/1, பிரம்படி 1ம் ஒழுங்கை, கொக்குவில்.**
**1ம் வட்டாரம், புங்குடுதீவு.**

**தகவல் : குடும்பத்தினர்**
**074 132 2350,**
**076 644 2214**
**077 936 2632**

(CS 2848) A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மியான்மர்...

உயிரிழந்தோரின் எண்ணிக்கை ஆயிரத்து 700ஆக அதிகரித்துள்ளது.
சுமார் 320 கட்டடங்கள் இந்த நிலநடுக்கத்தில் தரைமட்டமாகியிருந்தன. அவற்றில் மீட்புப்பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. 50 வீதமான கட்டட இடிபாடுகள் அகற்றப்படவில்லை. ஆதலால், உயிரிழப்பு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது. (அ-ம-இ)

## 'ஆனையிறவு...

நாடாளுமன்ற உறுப்பினருமான சிவஞானம்சிறீதரன் கோரிக்கை விடுத்துள்ளார்.
இதுதொடர்பில் கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்திக்கு நேற்றுச் சனிக்கிழமை கடிதமொன்றை அனுப்பி அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.
அந்தக் கடிதத்தில் தெரிவித்துள்ளதாவது:-
வடக்கு மாகாணத்தின் கைத்தொழிற் பொருளாதார அடையாளங்களுள் ஒன்றான ஆனையிறவு உப்பளத்தை மீள ஆரம்பித்தமை காலத்தேவையான செயற்பாடாகும். ஏறத்தாழ ஒன்பதுதசாப்த பாரம்பரியம்மிக்க ஆனையிறவு உப்பளத்தின் செயற்பாடுகள் இன்றுமுதல் (நேற்று) மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளமை மகிழ்ச்சியளித்தாலும், 'ஆனையிறவு உப்பு' என்ற அடையாளப்பெயர் 'ரஜலுணு' என மாற்றம் செய்யப்பட்டுள்ளதாகக் கிடைக்கும் செய்திகள் அதிர்ச்சியளிக்கின்றன.
வடக்கு மாகாணத்தின் கைத்தொழிற் பேட்டைகளுள் முதன்மையானதும், முக்கியத்துவம் மிக்கதுமான ஆனையிறவு உப்பளம் என்பது எமது மக்களின் அடிப்படை வாழ்வியலோடு இணைந்த ஓர் அடையாளமாகும். அத்தகையதோர் கைத்தொழிற் கட்டமைப்பை மீள ஆரம்பிக்கும்போது அதன் அடிப்படை அடையாளத்தை மாற்றம் செய்கின்றமை தங்கள் அரசாங்கத்தின் மீதான அபிமானத்தையும், இன நல்லிணக்கம் குறித்த தங்களின் சிந்தனைப் போக்கையும் கேள்விக்குட்படுத்துவதாக அமைந்துள்ளது.
குறிப்பாக கடந்த காலங்களில் இனத்துவ அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட அடையாளத் திணிப்புகளைப் போலவே எமது மொழியியல் அடையாளத்தைச் சிதைத்துப் பெரும்பான்மையினத்தின் தனித்துவத்தை வலிந்து புகுத்தும் இன மேலாதிக்கச் செயற்பாடாகவே இதனையும் கருதவேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம்.
எனவே ஆனையிறவு உப்பளத்தில் உற்பத்தி செய்யப்படும் உப்பினை 'ஆனையிறவு உப்பு' என்ற பாரம்பரிய பெயருடனேயே விற்பனை செய்வதை உறுதி செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றேன் - என்றுள்ளது. (அ-ச-113-125-66)

## பரந்தன்...

டல் ஒன்றில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
ஆனையிறவு உப்பு உற்பத்தித் தொழிற்சாலையைத் தொடர்ந்து, பரந்தன் தொழிற்சாலையையும் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இதன் முதற்கட்டமாக பரந்தனில் இரசாயனத் தொழிற்சாலைக் கட்டடத்தை விருத்தி செய்வதற்கு வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மிக விரைவில் பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை இயங்குநிலையை அடையும் - என்றார். (அ-ம-125)

## வீட்டுத்...

பல வீட்டுத்திட்டங்கள் இடைநிறுத்தப்பட்ட நிலையில், அந்த வீட்டுத்திட்டங்களை தொடர்ந்தும் நிறைவேற்றுவதற்கு ஏதுவாக தலா 6 லட்சம் ரூபாவை நாங்கள் வழங்கவுள்ளோம். புதிய வீடுகளை அமைப்பதற்கு 10 இலட்சம் ரூபாவை வழங்கவுள்ளோம். வடக்கில் உள்ள காற்றாலை மற்றும் சோலர் உற்பத்தி நிலையங்கள் மக்களினுடைய எதிர்ப்பு இல்லாமல், அவர்களுடைய அனுமதியுடன் மட்டும்தான் கொண்டுவரப்படும் - என்றார். (அ-ம-125)

## விபத்தில்...

சைக்கிள் விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.
சிவராசா பிரவீன் (வயது-19) என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.
குறித்த இளைஞர் செலுத்திவந்த மோட்டார்சைக்கிளும் இன்னொரு மோட்டார் சைக்கிளும் மோதியதிலேயே விபத்து சம்பவித்துள்ளது. விபத்தில் மேலும் ஒருவர் சிக்கிய நிலையில், அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.
விபத்துத் தொடர்பில் சுன்னாகம் பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். இறப்பு விசாரணைகளை வலிகாமம் கிழக்கு திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (அ-ம-26-27-66)

## எல்லாவற்றையும்...

முகாம்கள் தொடர்பிலும் விசாரணைகள் இடம்பெறும் என்று அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.
வவுனியாவில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அமைச்சர் பிமல் மேலும் தெரிவித்ததாவது:-
உள்ளூராட்சித் தேர்தல் மூன்று வருடத்துக்கு முன்னர் நடைபெற்றிருக்க வேண்டியது. ஆனால், கடந்த அரசாங்கம் தேர்தலை நடத்தாது பிற்போட்டது. நாங்கள் ஆட்சிக்கு வந்ததும் தேர்தலை நடத்துகின்றோம்.
அரசியற்கைதிகளை விடுவிக்கமுடியும். ஆனால் அதனை உடனடியாகச் செய்ய முடியாது. நாம் ஆட்சிக்கு வந்து நான்கு மாதங்கள்தான் ஆகின்றன. ஜனாதிபதிக்கு அதிகாரங்கள் இருந்தாலும் படிப்படியாக அதற்கான செயன்முறைகள் ஊடாகத்தான் செய்யமுடியும். காணிகள் உடனடியாக விடுவிக்கப்பட்டுள்ளன. வடக்கின் கைத்தொழிற்சாலைகளை மீள இயங்குநிலைக்கு கொண்டு வந்துள்ளோம். எமது அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டத்தில்கூட முன்னைய அரசாங்கங்கள் ஒதுக்காத அளவுக்கு அதிக நிதியை நாம் வடக்குக்காக ஒதுக்கியுள்ளோம். ஆகவே சில நடைமுறைகளை பின்பற்றித்தான் செயற்படவேண்டும். அந்த நடைமுறைகளின் பிரகாரம் அரசியற் கைதிகள் விடுவிக்கப்படுவர்.
1980ஆம் ஆண்டு காலப் பகுதியில் பட்டலந்த வதைமுகாம் மாதிரி பலவதை முகாம்கள் இருந்தன. தெற்கில் ஜே.வி.பி., யு.என்.பி. பிரிந்து இருந்தது போன்று, வடக்குக் கிழக்கில் விடுதலைப் புலிகள், புளொட், ஈ.பி.டி.பி., ஈ.பி.ஆர்.எல்.எப்., ரெலோ எனப் பிரிந்து செயற்பட்டனர். இந்த வதைமுகாம்களால் அனைவரும் பாதிக்கப்பட்டுள்ளனர். இவை அனைத்துக்குமான விசாரணைகளின் ஆரம்பமாகவே, பட்டலந்த தொடர்பில் எதிர்வரும் 10ஆம் திகதி விவாதிக்கப்பட வுள்ளது. அனைத்துப் பிரச்சினைகளை யும் உடனடியாக விசாரிக்கமுடியாது. ஆனால், படிப்படியாக விசாரிப்போம் - என்றார். (அ-ம-110)

## சங்கிலியை...

சைக்கிளில் வந்த இருவர் அறுத்துச் சென்றநிலையில், விரைந்து செயற்பட்ட தருமபுரம் பொலிஸார் சந்தேகநபர்களைத் துரத்திப்பிடித்துக் கைதுசெய்துள்ளனர்.
இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது.
புளியம்பொக்கணைப் பகுதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்த பெண்ணிடமிருந்தே 3 இலட்சத்து 15 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்கச் சங்கிலி அபகரிக்கப்பட்டது. சம்பவம் தொடர்பாக தருமபுரம் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலுக்கமைய பொலிஸார் சந்தேகநபர்களை துரத்திப்பிடித்து அபகரிக்கப்பட்ட சங்கிலியையும் மீட்டுள்ளனர்.
அத்துடன் சந்தேகநபர்களிடமிருந்து 2.25 மில்லிக்கிராம் ஹெரோய்ன் 20 கிராம் கஞ்சா மற்றும் கொள்ளையிடப் பயன்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிள் என்பவற்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்களை பொலிஸார் நேற்றுமுன்தினம் நீதிமன்றில் முற்படுத்தியபோது சந்தேகநபர்களை பொலிஸ் தடுப்புக்காவலில் வைத்து விசாரிக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (அ-ச-113)

## 24 மணிநேர...

வெட்டு ஏற்பட்டதால், சலசலப்பு ஏற்பட்டது.
தேசிய புத்திஜீவிகள் அமைப்பின் பொறியியலாளர்கள் பிரிவின் ஏற்பாட்டில், யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விடுதியில் நேற்று மாலை விசேட கலந்துரையாடல் இடம்பெற்றபோதே குறித்த சம்பவம் பதிவாகியுள்ளது.
நிகழ்வில் வலுசக்தி அமைச்சர் குமார ஜயக்கொடி, கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், டிஜிற்றல் பொருளாதார பிரதி அமைச்சர் எரங்க வீரரத்ன, துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் பிரதி அமைச்சர் ஜனித் கொடித்துவக்கு, நாடாளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன், தேசிய புத்திஜீவிகள் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் லலித் சமரசேகர உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-125)

## ஆனையிறவில்...

கடந்த நாள்களில் நிலவிய உப்புத்தட்டுப்பாட்டை நீக்கும் வகையில் கைத்தொழில் அமைச்சின் கீழ் ஆனையிறவில் உப்பு உற்பத்தியை ஆரம்பிப்பது தொடர்பில் கடந்த சில வாரங்களாக அரசாங்கம் கவனம் செலுத்தியிருந்தது. இதைத் தொடர்ந்தே நேற்றுமுதல் உப்பு உற்பத்தி மீளவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
இந்த நிகழ்வில், கைத்தொழில் அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி, கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், பிரதியமைச்சர் சதுரங்க அபேசிங்க, நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன், வடமாகாண ஆளுநர் நா.வேதநாயகன், மேலதிக மாவட்டச் செயலர் நளாயினி இன்பராஜ், கண்டாவளை பிரதேச செயலாளர் த.பிருந்தாகரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.
(அ-ம-113-125-27-66)

## யாழ்ப்பாணத்துக்குள்ளும்...

இந்தியாவை தளமாகக்கொண்டு இயங்கும் மிகப்பெரும் மத அடிப்படைவாத இயக்கமான 'ஆர்.எஸ்.எஸ்.', தற்போது யாழ்ப்பாணத்தில் தனது ஆதிக்கத்தைச் செலுத்த முற்படுகிறது என்று சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் இலக்கியத்துறையின் முன்னாள் தலைவரும், ஆய்வாளருமான பேராசிரியர் வீ.அரசு எச்சரிக்கை விடுத்துள்ளார்.
'தமிழியல் செல்நெறியில் கல்விப்புல சமூக இயக்க வீச்சுத்தள அனுபவப் பகிர்வுக் கருத்தாடல் நிகழ்வு' கடந்த செவ்வாய்க்கிழமை சுழிபுரத்தில் நடைபெற்றது. அந்த நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
ஆர்.எஸ்.எஸ். அமைப்பு இந்தியாவில் பாசிசவாதத்தைக் கக்கி பல்வேறு வன்முறைச் சம்பவங்களில் ஈடுபட்டது. அதில் மிகவும் உச்சபட்ச வன்முறை காந்தியைக் கொன்றமையாகும். 1947க்குப் பிறகான காலப்பகுதியில் இந்தியாவில் மூன்று முறை இந்த அமைப்புக்குத் தடைவிதிக்கப்பட்டது.
பின்னர் 2014ஆம் ஆண்டு மோடி ஆட்சி அமைத்ததில் இருந்து இன்று வரை நாடுமுழுவதும் ஊடுருவி பிரம்மாண்டமாக வளர்ந்துநிற்கிறது. இந்தப் பயங்கரவாத அமைப்பை நான்காவது முறையாக நிரந்தரமாக தடைசெய்யவும், இந்தியாவை விட்டுவிரட்டியடிக்கவும் அனைத்து ஜனநாயக சக்திகளும், உழைக்கும் மக்களும் ஒன்றிணைந்து செயற்பட்டுவருகின்றனர்.
இந்தநிலையில் தூதரகங்கள் மூலமாக தமிழ்நாட்டில் இயங்கும் ஆர்.எஸ்.எஸ். மற்றும் அதன் பின்புலத்தில் உள்ளவர்களை கற்றைகற்றையாக யாழ்ப்பாணத்துக்கு அனுப்புகிறார்கள். ஏராளமான நிகழ்ச்சிகளை ஏற்பாடுசெய்து நடத்துகிறார்கள். பல கோடி ரூபா பெறுமதியான கட்டடங்களைக் கட்டிக்கொடுத்துத் தமது நாட்டின் அடையாளமாக உருவாக்குகிறார்கள். இது சார்ந்த செயற்பாடுகள் யாழ்ப்பாணத்தில் தற்போது பரவலாக இடம்பெறுகின்றன.
இந்த நிலைமை தொடருமானால், தமிழ் மக்கள் எவ்வாறு 1956ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக சிங்களத் தேசியப் பேரினவாதத்துக்கு எதிராகப் போராடுகிறீர்களோ, அதேபோன்று மிகக் குறுகிய காலத்துக்குள் இந்துத்துவ பார்ப்பனிய சக்திகளுக்கு எதிராகவும் போரிடவேண்டிய நிலைமை வரும்.
யாழ்.மண்ணில் ஒரு வழிபாடு சார்ந்த, பக்தி சார்ந்த, சைவம் சார்ந்த மரபு வேரூன்றியிருக்கிறது. இவ்வாறு வேரூன்றியிருக்கும் மக்களின் பண்பாட்டு மரபை அவர்கள் பயன்படுத்தத் திட்டமிடுகிறார்கள். அது எளிதாக நடைமுறைப்படுத்தப்படும் எனவும் அவர்கள் நம்புகின்றனர். சாதியை மையமாக வைத்து சாதிக்குள் காணப்படும் அனைத்துப் பலவீனங்கள், அது சார்ந்த விடயங்களைப் பயன்படுத்தி ஆர்.எஸ்.எஸ் அமைப்பை அவர்கள் வளர்த்து வருகின்றனர் - என்றார். (அ-ச-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# NEW SCIENCE WORLD
கணித - விஞ்ஞானப் பிரிவுகள்

## A/L 2027 Batch
**Tamil & English Medium**

நேரடி வகுப்புக்கள் மற்றும் **Zoom** இன் ஊடான வகுப்புக்கள்

| | |
|---|---|
| பௌதீகவியல் - | திரு. R.குமரன்<br>திரு. R.குகன் |
| இரசாயனவியல் - | டயஸ்<br>திரு. K.T.சிவகுமார் |
| உயிரியல் - | திரு. N.T.கஜேந்திரன் |
| இணை.கணிதம் - | திரு. S.S. செந்தில்ராஜ்<br>திரு. V.ஹரிகரன் |
| ICT - | திரு. T.லவேந்திரன் |

**ஆரம்பம் :- 09.04.2025 (புதன்கிழமை)**
**நேரம் :- காலை - 9.15 மணி**

**அனுமதிகளை 01.04.2025 (செவ்வாய்க்கிழமை) அன்று நண்பகல் 12.00 மணியிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.**

மேலதிக விபரங்களுக்கு :-
**021 221 6690, 077 336 4055**

**New Science World**
Navalar Road, Brown Road, Junction, Jaffna. (cr.44675) (N.1)

**SPOKEN ENGLISH & GRAMMAR**
GCE O/L எழுதிய மாணவர்களுக்கு
அவரவர் தகுதியிலிருந்து எதிர்கால ஆங்கில
தேவைக்காக Speaking,Writing,Reading
English Medium Students அனைவரும்
கொழும்பில் பலவருடம் கற்பித்த அனுபவ
ஆசிரியர்:K.Ganesh BA
யாழ் நாவலர் - அன்னசத்திர வீதி.
077 766 8725

**வீடு வாடகைக்கு**
குருநகர் மவுங்காமல் வீதியில் 3 அறைகளைக் கொண்ட புதிய வீடு வாடகைக்குண்டு
**021 222 0869, 077 791 7660**

# CJ Sounds
மிக துள்ளியமான **Sound system Audio lounch, indoor programs outdoor events,**வைபவங்கள்,**Party** போன்ற அனைத்து நிகழ்வுகளுக்கும் **15000/-** முதல் **DJ with lights**.
தொடர்பு:- **077 254 6511** (CS 57830) (N-1)

**மணமகள் தேவை**
யாழ். கிறிஸ்தவ குடும்பத்தைச் சேர்ந்த 1983ம் ஆண்டு பிறந்த விவாகரத்தான சுயதொழில் புரியும் மணமகனுக்கு 30-40 வயதிற்குட்பட்ட கிறிஸ்தவ மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். (கணவரை இழந்த அல்லது விவாகரத்தானவர்களும் விரும்பத்தக்கது)
தொடர்பு:- **075 5920 700** (CS/57829) N-1


**மானிப்பாயில் குருதிக்கொடை**

யாழ்., மார்ச் 30

தவக்காலத்தை முன்னிட்டு மானிப்பாய் அருணோதய மன்றம் நடாத்தும் குருதிக்கொடை முகாம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் மானிப்பாய் புனித அன்னாள் ஆலய மண்டபத்தில் நடைபெற வுள்ளது. (ம-66)



**காணி விற்பனைக்கு**
55 New செம்மணி வீதி கல்வியங்காட்டில் 2 1/4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
**(கிணற்றுடன்)** - tube well, **நல்லூர் கோவில் 1.7** Km, **கல்வியங்காடு சந்தி 350** m
**077 185 4870** (cs 57840) (N-1)

**காணி விற்பனைக்கு**
கொடிகாமத்தில் 104 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
whatsapp:- **074 173 3553** (CS/57833) J-1

**காணி குத்தகைக்கு**
யாழ்நகருக்கு அண்மையில்8 பரப்பு (80 பேர்ச்) காணி நீண்டகால குத்தகைக்கு தேவை.
**076 444 9377** (cs 57858) N-1

**Media வகுப்புக்கள்**
**A/L 2025,2026,2027**
ஆகிய பிரிவுகளுக்கு ஊடக கற்கை **(Media)** zoom, நேரடி வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
Y.Kones **077 644 6514** (cs 57856)


# மரண அறிவித்தல்



## கனகசபை நவரத்தினம்

நீர்வேலி, கரந்தனைப் பிறப்பிடமாகவும், நீர்வேலி மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபை நவரத்தினம் அவர்கள் நேற்றுமுன்தினம் (28.03.2025) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை அன்னலட்சுமி தம்பதியின் அன்பு மகனும், செல்வராணியின் அன்புக் கணவரும், நந்தினி (நீர்வேலி), கிருஷ்ணகுமரன் (அவுஸ்ரேலியா), ஜெயகிருஸ்ணன் (காப்பாளர் - இலங்கை போக்குவரத்துச் சபை - முல்லைத்தீவு), சன்சயின் (வலி கிழக்கு முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்) ஆகியோரின் அன்புத் தந்தையும், நடேசரூபன் (காரைநகர்), மதுரா (முல்லைத்தீவு), சுமித்திரா (அச்செழு), சுஜீவா (முள்ளியவளை) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சஹானா, ஜெய்சனா, கித்தீஸ் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.03.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி சீயாக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தோற்றம்** 15.01.1944 **மறைவு** 28.03.2025

**தகவல்: குடும்பத்தினர்**
நீர்வேலி மத்தி,
நீர்வேலி.
077 648 1664, 077 445 5875
077 839 4470
(CS/57862) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதவி வெற்றிடம்

யாழ்ப்பாணத்தில் இயங்கி வரும்
சிற்றி மெடிக்கல் கெயார் பிறைவேற் லிமிட்டட்
(City Medical care (Pvt) Ltd)
மருந்தகத்திற்கு பணியாளர்கள் தேவை

- விற்பனை உதவியாளர்- Counter Sales Assistant (ஆண்/பெண்-யாழ்ப்பாணம், சாவகச்சேரி)
- துப்பரவு பணியாளர்- Cleaning Staff (ஆண்/பெண்-யாழ்ப்பாணம்)
- பாதுகாப்பு ஊழியர்- Security Staff (ஆண்-யாழ்ப்பாணம்)
- களஞ்சிய உதவியாளர்- Store Assistant (ஆண்-யாழ்ப்பாணம்)
- விற்பனை மேம்படுத்தல் உதவியாளர் - Sales Promotion Staff - (ஆண்/பெண்- யாழ்ப்பாணம்)
- காசாளர் & விற்பனை உதவியாளர்- Cashier Cum Sales Assistant ( ஆண் / யாழ்ப்பாணம்)
- விற்பனை உதவியாளர்- Grocery Sales Assistant (ஆண்/பெண்-யாழ்ப்பாணம், சாவகச்சேரி)
- காசாளர்- Cashier (ஆண்/பெண்-சாவகச்சேரி )

முன்னனுபவம் விரும்பத்தக்கது சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.

தொடர்பு கொள்ளவேண்டிய நேரம்
திங்கள்-சனி வரை 8.30am-6.00pm
**075 221 7661**
Email- hrcmjaffna@gmail.com

## விஸ்டம்
தொழினுட்பக் கல்லூரி

தொழினுட்பப் பிரிவில் ஒவ்வொரு வருடமும் தேசிய மாவட்ட முதல் நிலைச் சாதனையாளர்களை உருவாக்கி வருகின்ற அதே ஆசிரியர்களின் வழிகாட்டலில்

31.04.2025 திங்கட்கிழமை நேரம்: காலை 8.30 மணிக்கு

**A/L 2027 தொழினுட்பப் பிரிவு**
புதிய வகுப்புக்கள் ஆரம்பம்

பொறியியற் தொழினுட்பவியல், உயிர்முறைமைகள் தொழினுட்பவியல்
தொழினுட்பவியலுக்கான விஞ்ஞானம்
ICT, கணிதம் (7), விவசாய விஞ்ஞானம், புவியியல், சித்திரம், ஊடகக்கல்வி
077 248 7774,076 552 9093, 021 221 7860

## YOO விநியோகஸ்தர் தேவை





இலங்கையின்
முன்னணி பாதணி
உற்பத்தியாளர்களுக்கு
வடமாகாணத்தில்
விநியோகஸ்தர்
தேவை.

contact us :
YOO BRANDS (PVT) LTD
No. 375/A/01, High-Level Road,
Makumbura, Pannipitiya, Sri Lanka
Tel : 077 885 0007 / 011 769 6001


# நினைவலைகள்

## முதலாம் ஆண்டு

தோற்றம்
23.11.1947



மறைவு
09.04.2024

**அமரர் கதிரவேற்பிள்ளை கோவர்த்தனராஜா**

திதி: பிரதமை - 30.03.2025

ஆலம் விழுதுகள் போல் ஆயிரம் உறவுகளோடு
உடையார் பரம்பரை வழியாக
நிமிர்ந்த நடையும் நேர்கொண்ட பார்வையும்
சுற்றத்தைப் போற்றிக் காக்கும் உயர் பண்பும்
ஒருங்கே அமைந்த மூத்த மனிதராய்
இத்தனையும் கொண்டு சிறப்புடன் வாழ்ந்தீரே....

புன்னகை தவழ்ந்திடும் உங்கள் முகம்
ஆறுதலான உங்கள் வார்த்தைகள்
அன்பின் சிகரமே... வாழ்வின் ஒளி விளக்கே
எங்கள் குடும்பத்தலைவரே - எம் வாழ்வின்
வழிகாட்டிய தீபமே காற்றிலேகலந்து ஆண்டு ஒன்றாகி விட்டதய்யா !

யாவும் கற்றுத்தந்தவரே...எம்மில் பற்று வைத்தவரே
இனிய கற்றுத்தருணங்களை எமதாக்கியவரும்
நீங்கள் தானே ஐயா- வாழ வழி நடத்தி - எம்
வாழ்வுக்கு வளம் சேர்த்து வாழவைத்த
அன்புத் தந்தையே மண்ணுலகைவிட்டு விண்ணுலகம் சென்று
எங்களை ஆசிர்வதித்துக்கொண்டிருக்கும்
எங்கள் அன்பு நிறை தெய்வமே! ஓராண்டு ஆனாலும் - மாறாது
உங்கள் நினைவுகள் எந்நாளும்.

## இருபதாம் ஆண்டு

தோற்றம்
22.11.1953



மறைவு
23.02.2005

**அமரர் திருமதி இராஜகுமாரி கோவர்த்தனராஜா**

திதி: மகம்

அம்மா ஆண்டு இருபது
ஆனாலும்
அம்மா என்ற உறவை
எப்பிறப்பில் காண்போம் யாம்
தாயே.....
என்றும் எங்களை
பரிபூரணமாக
ஆசிர்வதித்துக்கொண்டிருப்பீர்கள்
நாம் மாண்டிடும்
காலம்வரை
மாறாது உங்கள்
நினைவுகள்

உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்

உடையார் ஒழுங்கை,
பழம் வீதி, கந்தர்மடம்

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

... 30.03.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பக்கங்கள்: 08

# சஞ்சீவி

Registered as a Newspaper

சொல்தளர்ந்து கோல் ஊன்றிச் சோர்ந்த நடையினராய்ப்
பல்கழன்று பண்டம் பழிகாறும் – இல்செறிந்து
காம நெறிபடரும் கண்ணினார்க்கு இல்லையே
ஏம நெறிபடரும் ஆறு

– நாலடியார்

மலை : 34 | வள்ளுவர் ஆண்டு : 2055 | பங்குனி 16 | ஞாயிற்றுக்கிழமை (30.03.2025) | சிகரம் :138



# சரியான நேரத்தில் சரியான கூட்டு?

○ நிலாந்தன்

"அநுரவின் அரசாங்கத்தை வலுவான முறையில் எதிர்கொள்வதற்கும், தமிழ் மக்களின் உரிமைகளை வலியுறுத்துவதற்கும் நாடாளுமன்றத்தில் தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்றுபடுவதைத் தவிர வேறு வழி இல்லை" என்று, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் இந்திய ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலில் கூறியிருக்கிறார்.

புதியயாப்பு ஒன்று உருவாக்கப்படுமிடத்து அந்த யாப்பை நோக்கி கட்சிகளை ஒருங்கிணைக்க வேண்டும் என்பதில் யாருக்கும் மாற்றுக்கருத்துக் கிடையாது. தமிழர்கள் ஒரு தரப்பாகத் திரண்டுநின்றால்தான் தங்களுக்கு என்ன வேண்டும் என்பதனை பலமாக வெளிப்படுத்தலாம். மிகக் குறிப்பாக சுமந்திரனும் அவருடைய கூட்டாளிகளும் இணைந்து முன்பு தாங்கள் தயாரித்த "எக்கிய ராஜ்ய" என்கிற இடைக்கால வரைவை மீண்டும் மேசைக்கு எடுப்பதைத் தடுப்பது என்றால் தமிழ்த் தரப்பு ஐக்கியப்படுவது தவிர்க்கமுடியாதது.

அதேசமயம் யாப்பை நோக்கி மட்டும் தமிழ்த் தரப்பு ஐக்கியப்படக்கூடாது, மாறாக தேர்தல்களை நோக்கியும் சமயோசிதமான, தந்திரோபாயமான கூட்டுகளுக்குப் போகவேண்டும். அல்லது குறைந்தபட்சம் போட்டித் தவிர்ப்பு உடன்படிக்கைகளுக்காவது போகவேண்டும் என்பதனை நான் தொடர்ச்சியாகச் சுட்டிக்காட்டிவந்திருக்கிறேன்.

அதற்கு ஓர் அடிப்படைக் கோட்பாட்டு விளக்கம் உண்டு. தேர்தல் கூட்டுகள் பெரும்பாலும் தந்திரோபாயமானவை. ஆனாலும் தமிழ்மக்கள் ஒருதரப்பாக தங்களைப் பலப்படுத்தவேண்டும் என்று சிந்தித்தால், தேர்தலுக்கும் அங்கே ஒரு பங்கு உண்டு. தேர்தலில் தமிழ் மக்கள் ஒருதரப்பாகத் தோற்கும் பொழுது பின்னர் நாடாளுமன்றத்தில் இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் தமிழ்த்தரப்பு பலமாக நின்று பேச முடியாது. எனவே ஒருதரப்பாக தமிழ் மக்களைப் பலப்படுத்துவது என்று பார்த்தால் அது நாடாளுமன்றத்தில் மட்டுமல்ல, மாகாண சபைகள், உள்ளூராட்சிசபைகள் என்று எல்லாத் தேர்தல்களங்களிலும் தமிழ்த் தரப்பை ஆகக்குறைந்தபட்சம் தந்திரோபாய நோக்கத்தோடாவது ஒருங்கிணைக்கவேண்டும்.

ஆனால் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தந்திரோபாயக் கூட்டுகளுக்குத் தயாராக இல்லை. அவர்கள் கொள்கை வழிக் கூட்டுகளுக்கே தயாராக இருப்பதாகக் கூறிக்கொள்கிறார்கள். கடைசியாக இயங்கிய உள்ளூராட்சி சபைகளின் கடைசிக்கட்டத்தில் காரைநகரில் ஒரு பிரச்சினை வந்தது. அங்குள்ள சுயேச்சைக்குழு தமிழ்த் தேசியக் கட்சிகளோடு இணைந்து ஆட்சி அமைக்க விரும்பி யது. அது தொடர்பாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியோடு நான் உரையாடினேன். அவர்கள் எந்தவிதமான நிபந்தனையும் இன்றி குறிப்பிட்ட சுயேச்சைக்குழுவுக்கு ஆதரவளிக்க முன்வந்தார்கள். அதேசமயம் அந்த உரையாடலின்போது, செல்வராசா கஜேந்திரன் என்னிடம் சொன்னார், "அண்ணை இது போன்ற விடயங்களில் நீங்கள் என்ன கேட்டாலும் நாங்கள் செய்வோம். ஆனால் ஐக்கியத்தைப் பற்றி மட்டும் கேட்டுவிடாதீர்கள்" என்று.

அந்தளவுக்கு அவர்களுக்கு ஐக்கியம் அலேர்ஜிக்காக இருந்தது. அரங்கில் நம்பிக் கூட்டுச்சேர முடியாத சக்திகளே அதிகமாக இருக்கலாம். ஆனால் இங்கே பிரச்சினை என்னவென்றால், ஒருதரப்பாக தமிழ் மக்களைப் பலப்படுத்துவது என்று சொன்னால் அதனைத் தந்திரோபாயமாகத்தான் செய்யலாம். அதுவும் தேர்தல் வழியில் தந்திரங்கள்தான் அதிகம்.

நான் திரும்பத்திரும்பக் கூறும் ஓர் உதாரணம் உண்டு. சுத்தமான தங்கத்தை வைத்து ஆபரணங்களைச் செய்ய முடியாது. தங்கத்தில் நகை செய்யவேண்டுமானால் குறிப்பிடத்தக்க அளவுக்கு செப்பைக் கலக்கவேண்டும் வேண்டும். இந்தப் பூமியிலே பெரும்பாலான விடயங்கள் அப்படித்தான். அதிலும் அரசியலில், குறிப்பாக தேசியவாத அரசியலில், அதுதான் நடைமுறைச்சாத்தியமானது.

அரசியலில் புதுமையானது, நீதியாயானது , புனிதமானது ,சரியானது, பிழையானது…போன்ற அனைத்துமே சார்புக் கணியங்கள்தான். ஒப்பீட்டு முடிவுகள்தான். நடைமுறை வாழ்வில் முழுப் புனிதமானது எதுவும் இல்லை. முழுத் தூய்மையானது எதுவும் இல்லை. இரண்டாம் உலகப்போரில் ஹிட்லரையும் முசோலினியையும் தோற்கடிப்பதற்காக இரண்டு கொள்கை எதிரிகள்தான் கூட்டுச்சேர்ந்தார்கள். அதாவது முதலாளித்துவமும் கொம்யூனிசமும் கூட்டுச்சேர்ந்தே இரண்டாம் உலகப்போரை முடிவுக்கு கொண்டுவந்தன. கொள்கைப்படி பார்த்தால் அது ஒரு பிழையான கூட்டு. ஆனால் அது உலகப் போரை நிறுத்திய கூட்டு.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இப்பொழுது உருவாக்கியிருக்கும் கூட்டில் இருப்பவர்களில் அநேகர் முன்பு வெவ்வேறு கூட்டுகளில் இருந்தவர்கள்; வெவ்வேறு தரப்புகளோடு சேர்ந்து உழைத்தவர்கள். இறந்தகாலத்தைக் கிண்டினால் யாருமே புனிதரில்லை. ஏன் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும்தான். கஜேந்திரகுமாரின் தகப்பனார் குமார் பொன்னம்பலம் இந்திய–இலங்கை உடன்படிக்கையின் பின்னணியில் 1980களின் இறுதிக் கட்டத்தில் கொழும்பில் உள்ள தனது இல்லத்தின் பாதுகாப்புக்கு புளொட், ரெலோ ஆகிய இயக்கங்களின் ஒத்துழைப்பைப் பெற்றிருந்தார். அவருடைய வீட்டுக்கு பாதுகாப்பு பணிக்காகச் சென்ற தமது அனுபவத்தை ஏற்கனவே சிவாஜிலிங்கம் பகிரங்கமாகத் தெரிவித்திருக்கிறார். புளொட் இயக்கத்தின் சிவநேசனும் அவ்வாறு கூறியுள்ளார். ஆனால் அதற்காக பின்னாளில் குமார் சிந்திய இரத்தத்தை யாரும் குறைத்து மதிப்பிடமுடியாது. அதுதான் அரசியல்.

ஆனால் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தந்திரோபாயமாகக் கூட்டுகளை வைத்துக்கொள்வதற்குத் தயாராக இல்லை. கொள்கைவழிக் கூட்டுக்கே தாங்கள் தயார் என்று திரும்பத்திரும்பக் கூறிவருகின்றது. தங்கள் கொள்கையில் வழுக்காதவர்கள் என்று கூறுவதன் மூலம் மற்றவர்களை கொள்கைகளில் வழுக்கியவர்கள் என்று முத்திரை குத்தி வந்தது. அதன் விளைவாக கடந்த 15 ஆண்டுகளாக அவர்களால் தாங்கள் முன்வைக்கும் இலட்சியத்தை நோக்கி அவர்களுடைய சொந்தக் கட்சியையும் கட்டியெழுப்பமுடியவில்லை; தமிழ் மக்களையும் கட்டியெழுப்பமுடியவில்லை. இப்பொழுது யாப்புருவாக்க முயற்சியில் தமிழ் மக்கள் பேரவையின் முன்மொழிவின் அடிப்படையில் ஒன்றுசேரவேண்டும் என்று அவர்கள் கேட்கிறார்கள். ஆனால் தமிழ் மக்கள் பேரவையை செயற்படாத நிலைக்குத் தள்ளியதில் அவர்களுக்குப் பொறுப்பு இல்லையா? அவர்கள் நினைத்திருந்தால் தமிழ் மக்கள் பேரவையை அதன் அடுத்தகட்டக்கூர்ப்புக்குக் கொண்டுபோய் இருந்திருக்கலாம். பேரவை என்ற தாயின் முடிவுக்குக் காரணமாக இருந்துகொண்டு அந்தத் தாய் ஈன்ற பிள்ளையாகிய முன்மொழிவை இப்பொழுது காவுகின்றார்கள்.

அப்படித்தான் பொதுவேட்பாளரின் விடயத்திலும் முன்னணி அந்தக் கூட்டுக்குள் இணைந்து இருந்திருந்தால் நிலைமை வேறுவிதமாகப் போயிருக்கும். கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் நிகழ்ந்த அனர்த்தம் தவிர்க்கப்பட்டிருக்கும். ஆனால் தொடக்கத்தில் இருந்தே பொதுவேட்பாளரை முன்னணி எதிர்த்தது. அது மட்டுமல்ல, பொதுவேட்பாளருக்கு ஆதரவானவர்களை இந்தியாவின் ஏஜென்ட்கள், முதுகெலும்பில்லாதவர்கள் என்று கூறியது. பொதுக்கட்டமைப்பை உருவாக்கும் சந்திப்புகளின்போது குடிமக்கள் சமூகத்தைச் சேர்ந்தவர்களை நோக்கி கஜேந்திரன் பின்வருமாறு சொன்னார் "இந்த முயற்சியில் நீங்கள் வெற்றிபெற்றால் நாங்கள் இப்பொழுது வைத்திருக்கும் இரண்டு ஆசனங்களையும் இழந்துவிடுவோம் என்று எங்களுக்குத் தெரியும். அதை நன்கு தெரிந்துகொண்டு தான் உங்களை எதிர்க்கிறோம்" என்று.


ஆனால் பொதுவேட்பாளருக்கு முன்னணியின் தீவிர ஆதரவாளர்கள் பலரும் வாக்களித்தார்கள். தேர்தல் முடிவுகளின் பின் பொதுவேட்பாளருக்குக் கிடைத்த வாக்குகளை கஜேந்திரகுமார் தமிழ்த்தேசியத் தன்மை மிக்க வாக்குகள் என்று கூறினார்.

07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊடகவியலாளர்களை குறிவைத்து வேட்டை



(சென்றவாரத் தொடர்ச்சி)

## யசிகரன், வளர்மதி விடுதலை




"யசிகரனுக்கும், வளர்மதிக்கும் எதிராகத் தாக்கல்செய்யப்பட்டு நடைபெற்றுக்கொண்டிருக்கும் வழக்கைச் சட்டமா அதிபர் தொடர்ந்து நடத்த உத்தேசிக்கவில்லை" என அரச சட்டத்தரணி மேல் நீதிமன்றுக்கு அன்றையதினம் 12 மணியளவில் கூறினார். இதனையடுத்து நீதிபதி குமுதினி விக்கிரமசிங்க தனது தீர்ப்பில், "முதலாவது எதிரியான யசிகரன் வழங்கிய குற்ற ஒப்புதல் வாக்கு மூலம் சுயமாகப் பெறப்பட்டது என நிரூபிக்க, அரச தரப்பால் இதுவரை அழைக்கப்பட்ட சாட்சியங்களினால் எந்தச் சான்றும் முன்வைக்கப்படவில்லை. மேலும் இந்த வழக்கை அரசதரப்பு தொடர்ந்து நடத்தினாலும் சான்றுகள் கிடைக்குமா என்ற சந்தேகம் நீதிமன்றுக்கு உண்டு. அத்துடன் இரண்டாவது எதிரியாகக் குறிப்பிடப்பட்டுள்ள வளர்மதிக்கு எதிராக எந்தச் சாட்சியங்களும் இருப்பதாகத் தெரியவில்லை. இந்தநிலையில் அரசதரப்பு குற்றச்சாட்டுப் பத்திரத்தை மீளப் பெறுவதனால் அதன் அடிப்படையில் யசிகரனையும், வளர்மதியையும் விடுதலை செய்கிறேன்" என்று அறிவித்தார்.

Ekwality Graphics (Pvt) ltd பணிப்பாளர்கள் ஆறு பேரில் வளர்மதியும் ஒரு பணிப்பாளர் என்பதைத்தவிர அவர் செய்த குற்றம் பத்திரிகையாளர் யசிகரனை காதலித்துத் திருமணம் முடித்ததுதான். இந்நிறுவனத்தின் பணிப்பாளர் என்ற ரீதியில் கைதுசெய்யப்பட்டிருந்தால், சரிநிகர் பத்திரிகையின் ஆசிரியரான சிவகுமார் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு அன்றையதினமே விடுதலையாகியதைப் பார்க்கும்போது பணிப்பாளர் என்ற ரீதியில் வளர்மதி கைதுசெய்யப்படவில்லை என்பதும் தெளிவாகின்றது.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் நான்காம் பிரிவின்படியும் அவசரகால ஒழுங்குவிதி 7(1)இன் படியும் அந்த நபரோ அல்லது நபர்களோ மேல்நீதிமன்றத்தில் குற்றவாளியாகக் காணப்படுமிடத்து, அவர்களின் சொத்துக்களைப் பறிமுதல் செய்து அரச உடமையாக்கச் சட்டத்தில் இடமுண்டு. ஆனால் குற்றஞ்சாட்டப்பட்டவர் நீதிமன்றத்தினால் விடுதலைசெய்யப்படும்பொழுது கைப்பற்றப்பட்ட அசையும், அசையாச் சொத்துக்கள் வழக்கின் தடயப்பொருள்களாக குறிப்பிடப்பட்டிருந்தாலும், அவ்வாறு குறிப்பிடப்படாமல் இருந்தாலும் அவை யாவும் விடுதலையானவருக்கு திரும்பக் கையளிக்கப்படவேண்டும். இதுவே சட்டம். யசிகரன் வளர்மதி இருவரும் கைதுசெய்யப்படும்பொழுது யசிகரனால் நடத்தப்பட்ட Ekwality Graphics (Pvt) ltd அச்சகத்தை சீல் வைத்ததுடன் அவரால் பாவிக்கப்பட்ட வாகனத்திலிருந்து அச்சக இயந்திரங்கள் உட்பட 63 பொருள்கள் பொலிஸாரால் எடுத்துச்செல்லப்பட்டிருந்தன. யசிகரன் வழக்கிலிருந்து விடுபட்ட பின்னர் தனக்குச் சொந்தமான இந்தப் பொருள்களையும், வாகனத்தையும் தனக்குத் திரும்பத்தரும்படிநீதிமன்றத்தில் விண்ணப்பிக்க இருந்த வேளையில் 2009.11.19 ஆம் திகதி அரச சட்டத்தரணி நீதிமன்றத்தில் ஒரு விண்ணப்பத்தை முன்வைத்தார்.

அந்த விண்ணப்பமாவது 2009ஆம் ஆண்டு தை மாதம் 7ஆம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி இல. 1583/12 இன் பிரகாரம் பயங்கரவாதப் பிரிவுப் பொலிஸார், பொலிஸ்மா அதிபர் மூலம் பாதுகாப்பு அமைச்சருக்கு (Defence Minister) இந்த வழக்கின் தடயப் பொருள்களை அரச உடமையாக்க உத்தரவு தரும்படி அறிவித்துள்ளதாகவும் இன்னும் பாதுகாப்பு அமைச்சரிடமிருந்து தங்களுக்கு அறிவித்தல் வரவில்லையெனவும், ஆகவே நீதிமன்றினால் விடுதலைசெய்யப்பட்ட யசிகரனுக்கு அவரது உடைமையிலிருந்து பொலிஸாரினால் கைப்பற்றப்பட்ட பொருள்களைக் கையளிக்க வேண்டாம் எனவும் வேண்டிக்கொண்டார்.

குறிப்பிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்ட அவசரகால ஒழுங்குவிதி, 7(1) இன் கீழ் பாதுகாப்பு அமைச்சருக்கு (ஜனாதிபதிக்கு) அரச உடமையாக்கும் அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது. இருந்தபோதிலும் அவ்வாறு அரச உடமையாக்குவதாயின் அதற்கு முன்னர் குறிப்பிட்ட அசையும், அசையாச் சொத்துகளை அதன் உரிமையாளரின் வேண்டுகோளையும் கேட்டு விசாரணை நடத்தவேண்டும். அதன் பின்னரே அரச உடமையாக்குமாறு கட்டளையிடப்படவேண்டும். ஆனால் 2009.12.14ஆம் திகதி அரச சட்டத்தரணியால் மேல் நீதிமன்றுக்குக் கையளிக்கப்பட்ட கடிதத்தில், 'பாதுகாப்பு அமைச்சரினால் 2009.12.04 ஆம் திகதி இந்த வழக்கின் தடயப்பொருள்களாக கூறப்பட்டிருந்த 63 பொருள்கள் அரசுடமை ஆக்கப்பட்டுவிட்டன' என்றே கூறப்பட்டிருந்தது.

(தொடரும்)

# போரின் வடு

## கவிதை




## தேவி 5

முத்து முத்தாக வாழ்ந்த வாழ்வு
போர் கொண்டுபோன
பெத்த மக்கள் சுமந்த
கருவறைகள்.......கத்தும் கதறும்
ஆற்றிவிட யாருமில்லா
அநாதைக் கிழவியவள்
ஒன்றைக் கொடுத்தாள்...
எங்கென்று தெரியாமல்...
முழுதாக.. உயிரும் சதையுமாய்
ஆறடிக் குழந்தையொன்றைத்
தொலைத்துவிட்டு அழுகின்ற...
பாசக் கிழவிக்கு
பல்லுமில்லை...
வேண்டி அழுது புலம்பிக் கொள்ள
சொல்லுமில்லை...
வருவானோ... வருவானோ...
ஒற்றை மகன்...
கொள்ளிவைத்து கூடி அழ வருவானோ...
பிணி சுமக்கும்
இத்தாயின்
உயிருள்ள
செத்தாயின்
பிள்ளை வருவானோ
பிணியறுக்க...
நிலாச்சோறு ஊட்டி... மடிமீது வளர்த்தி
தேனும் சோறும் என்று ...
செல்லமாக ஊட்டிய...கைகள்
சோர்ந்தன....மூன்று தசாப்தங்கள் ..
ஓடிக்களைத்தன......
ஓய்வின் பொழுதிலும்......
ஓயவில்லை போராட்டம்.......
தலைமாட்டில் படுக்கும்....
மகனின் ஓவியம்.....
காலத்திலும் கலைந்துபோகாத...அவன் வாசம்...
வயிற்றில் இருப்பதாக...ஓர் உணர்வு...
எட்டி உதைப்பதான வலி....
யாரும் இல்லையென...யாரோ....முதியோர் இல்லத்தில்
சேர்த்து முடித்தார்........ இவளை
பார்வை மங்கும்....பழைய நினைவுகள் அழியும்
தேடிக்களைத்த கிழவி....தேம்பி அழும் பொழுதில்
மகனை நினைத்து மரத்த இதயம்...
மன்றாட்டம் செய்யும்...
மனம்வருந்திக்கேட்கும்.....
திருப்பித்தா....என்வாழ்வை திரும்பத்தா?
முதுமை வலி கொடுமை
யாருமில்லா முதுமை..யாரிடம் எதைக்கேட்டும்....
மீட்டுத்தா என் கருவை..என்முகவரியை
மாற்றித்தா...என்னை வாழவிடு
என் பிணம் சுமக்க பிள்ளையைத் திரும்பக்கொடு...!

- ஆனந்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மதிப்புக்குரிய உள்ளூராட்சி அதிகாரிகளுக்கு...!

வணக்கம்.

உங்கடை நிர்வாகத்துக்குக் கீழை நல்லது நடந்தால் அது உங்கள் எல்லாருக்கும் எவ்வளவு பெருமையோ, அவ்வளவுக்கு அவ்வளவு முறைகேடுகள் நடந்தாலும் அதற்குப் பொறுப்பும் பதில் சொல்லவேண்டியதும் நீங்கள்தான். எந்தச் சந்தர்பத்திலும் நீங்கள் மக்கள் சேவகர்கள் எண்டதை ஒருக்காலும் மறக்கவேண்டாம். சட்டமும் அதிகாரமும் மக்களைப் பாதுகாக்கத்தானே தவிர மக்களுக்கு இடைஞ்சலைத் தாறதுக்கு இல்லை எண்டதை முதலிலை நீங்கள் விளங்கிக்கொள்ளவேணும். என்ன இடைஞ்சல்கள் வந்தாலும் உங்கடை சொந்த வேலையளை உடனை பாய்ஞ்சடிச்சு அதைச் செய்துமுடிக்கிறியள் எல்லே? அதைப்போலை உங்கடை காரியாலய வேலைகளையும் செய்ய வேணும் .

பெரும்பாலும் மக்கள் சேவைகளோடை அதிகம் தொடர்புபடுகிறது நீங்கள்தான். சுகாதாரம் எண்டால் என்ன? வீதிவிளக்குகள் எண்டால் என்ன? றோட்டுகளிலை பள்ளந்திட்டியள் எண்டால் என்ன? இதுகளிலை பிரச்சினை வந்தால் சனம் முதலிலை மனசாறத் திட்டுறது உங்களைத்தான். ஏனெண்டால் மக்களிட்டை இருந்து வரி வாங்குறது நீங்கள்தானே!




அதைப்போலை வியாபாரங்களுக்கு முதலிலை அனுமதி குடுக்கிறதும் நீங்கள்தான். அந்த அனுமதியை மட்டும் வைச்சுக்கொண்டு வியாபாரியள் பல தில்லுமுல்லுகளையும், திருகுதாளங்களையும் செய்யினம் எண்டதும் உங்களுக்கு வடிவாத்தெரியும். உதாரணத்துக்குத் குடிதண்ணி விக்கிற கடையளைப் பாருங்கோ. உங்கடை அனுமதிக்குப் பிறகு அவை எத்தினை அனுமதியளைப் பெறவேணும். ஆனால் அவை உங்கடை அனுமதியோடை சட்டத்திலை இருக்கிற ஓட்டையளை வைச்சுக்கொண்டு தங்கடை வியாபாரத்தைப் பாக்கினம் எண்டு சனம் கதைக்கிது.

உங்கடை ஆட்சிக்குட்பட்ட இடங்களிலை றோட்டுக்கு இரண்டு கரையிலும் சட்டவிரோதக் கடையள். அதுவும் சாப்பாடு விக்கிற தள்ளுவண்டிக் கடையள், பழக்கடையள், சட்டி பானை விக்கிற கடையள், தளபாடக் கடையள், பிளாஸ்ரிக் கடையள் எண்டு திடீர்க் கடையள். உதுகளைப் போடுறவையள் ஆரெண்டு தெரியாது. அவங்கள் என்னத்தை விக்கிறாங்கள், விக்கிறது போலியளோ? சுகாதாரத்துக்கு உட்பட்டதோ? சனத்தை ஏமாத்திறாங்களோ? உங்கடை அனுமதி எடுத்தவங்களோ? ஒரு விபரமும் ஒருத்தருக்கும் தெரியாது. அது ஒரு பக்கம் கிடக்கட்டும். கோயில் குளங்களோட ஒட்டினாப்போலை கார், வான், லொறி சேவிஸ் ஸ்ரேசன்களுக்கு அனுமதி குடுத்திருக்கிறியள். அந்த சேவிஸ் ஸ்ரேசன் கழிவுகள் குளத்தை மாசுபடுத்துமெண்டு தெரியாதோ? அதோடை சிறு பயிர்ச்செய்கைகளுக்குரிய தோட்டக்காணியளுக்கையும் சேவிஸ் ஸரேசன்களுக்கு அனுமதி குடுத்திருக்கிறியள். அதெல்லாம் பிழை இல்லையோ?

அதுமட்டுமில்லை தோட்டக் காணியளுக்கை விளையாட்டுப் பயிற்சிக் கல்லூரிக்கும் இடம் குடுத்திருக்கிறியள். அந்தக் கல்லூரி கிடக்கிற இடத்தைச் சுற்றித் தோட்டங்கள். அங்கை இருபோகம் பயிர்செய்யிறவை. ஒரு வருசத்திலை ஆறேழு மாதங்கள் அதுக்கை பயிர்ச்செய்கை இருக்கும். அதுக்குப் பொலிடோல் அதைப்போலை பல கிருமிநாசினிகளை அவை அடிப்பினம். அந்த மணத்துக்கை விளையாட்டை என்னெண்டு பழக்கிறது? விளையாட்டு ஆரோக்கியத்துக்குரியது. அதைக் கிருமிநாசினி அடிக்கிற இடத்திலை வைக்க அனுமதி குடுத்திருக்கிறியள். எவ்வளவு சமூகப்பொறுப்பு உங்களிட்டை இருக்கு? உதைத் தெரிஞ்சுதானே செய்யிறியள்?

அதைவிட மோசம். பள்ளிக்கூடங்களுக்கு அருகிலை கார், லொறி திருத்திற கறாச் வைக்க இடம் குடுத்திருக்கிறியள். கறாச்காரர் திருத்தவாற அரைவாசி வாகனத்தை றோட்டிலை விட்டு பள்ளிக்கூடத்துக்கு வாற போறவையளை இடைஞ்சல் படுத்தினபடி நிக்கினம் . றோட்டின்ரை போக்குவரத்தைப் பற்றி அவைக்கு அக்கறை இல்லை. றோட்டிலை விட்டுத்தான் திருத்த வேலையள் நடக்கிது. உதை உள்ளூராட்சிக்காரர் பாக்க ஏலாதோ? இல்லைப்பாத்திட்டுபூனைபால்குடிக்கேக்கைகண்ணைமூடிக்கொண்டிருந்த மாதிரி ஊரைப் பேய்க்காட்டினமோ?

கொஞ்சநாளைக்கு முன்னம் பொலிஸ் திணைக்களம் அறிவிச்சதாம் கட்டாக்காலி மாடுகளைப் பிடிக்கச்சொல்லி. ஆனால் அவை ஏதோ ஐக்கிய நாடுகள் சபையிலை கதைச்சுச் சுதந்திரம் எடுத்த மாதிரி வலு சௌகரியமா நடுறோட்டிலை நிண்டு ரெஸ்ட் எடுக்கினம். சாணகத்தைப் போடினம். அதைவிடப் பகிடி ஒருவழிப் பாதையிலை இரை மீட்டபடி கிடக்கினம். உதை ஆர் பாக்கிறது, ஆரிட்டைச் சொல்லுறது? முன்னாள் அதிகாரி, முன்னாள் அதிபர் எண்ட மாதிரி இப்ப எங்கடை சனத்துக்கு "முன்னாள் படிச்சவை" எண்ட ஒரு புதுப் பட்டத்தைக் குடுத்திருக்கினமாம். அப்ப உப்பிடிக் கன பிழையள் சமூகத்திலை கிடக்கேக்கைதான் தேர்தல் நடக்கப்போகுது. அதுக்குப் பிறகு வாறவை என்னென்ன திருகுதாளம் செய்யப்போயினமோ? ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம்.

*இப்படிக்கு*
*மனம் சோர்ந்து போனாலும் மக்கள் சேவையை மறக்காத*
*அன்னமுத்து*

ந.பரமேஸ்வரன்

# அடங்காத்தமிழன் சுந்தரலிங்கம்:

## தெரியவேண்டிய சில குறிப்புகள்



1964ஆம் ஆண்டு இலங்கைக்கு சுதந்திரம் வழங்கிய சோல்பரி பிரபுவுக்கு ஒரு கடிதம் எழுதினார் சுந்தரலிங்கம். சுந்தரலிங்கத்தின் கடிதத்திற்கு சோல்பரி பிரபு அனுப்பிய பதில் கடிதத்தின் தமிழாக்கம் இங்கு தரப்படுகிறது. சோல்பரி பிரபுவின் கடிதத்தை டெய்லி மிரர் பத்திரிகையிலும் பிரசுரித்திருந்தார் சுந்தரலிங்கம்.

*அன்பின் சுந்தரலிங்கம்,*

உங்களது கடிதத்தை ஆர்வமாகவும், மனவேதனையுடனும், விசனத்துடனும் வாசித்தேன். நான் இலங்கையில் ஆளுநராக கடமையாற்றிய காலத்தில் தமிழ்சிங்கள இனங்களுக்கிடையே பிளவும், கசப்புணர்வும் ஏற்படுமென ஒருபோதும் எதிர்பார்க்கவில்லை. இந்தப்பிளவை ஏற்படுத்தியது சேர்.ஜோன் கொத்தலாவலையும் அவரது அரசாங்கமும்தான் என நீங்கள் எழுதியது முற்றிலும் சரி. அவர் தமிழர்களைத் தாக்குமாறு தூண்டிவிட்டிருந்தார். ஆனால் பண்டாரநாயக்கா ஊசிகள் பொருத்தப்பட்ட சாட்டையால் தமிழர்களைத் தாக்கியுள்ளார். தமிழர்களின் மீதான சிங்களவர்களின் அணுகுமுறை குறுகிய நோக்கமுடையதும் முட்டாள்தனமானதுமாக உள்ளது.

1945ஆம் ஆண்டு தலைவராக இருந்து அரசியல் யாப்பை உருவாக்கியபோது இரு சமூகங்களுக்கிடையிலான உறவைப்பற்றி நான் ஆராய்ந்தேன். அதில் நான் கவனத்தில் எடுத்துக்கொண்ட விடயம் "தமிழர்கள்தான் இலங்கையின் பொருளாதாரத்தை உருவாக்கியவர்கள், உருவாக்குபவர்கள். அத்துடன் இலங்கைத்தமிழர்கள் கல்வியறிவில் சிங்களவர்களைவிட சிறந்து விளங்கினார்கள். சுறுசுறுப்பானவர்கள்,கஷ்டப்பட்டு உழைப்பவர்கள், பல வழிகளிலும் ஸ்கொட்லாந்துக்காரர்களைப் போன்றவர்கள்" என்பதாகும். ஸ்கொட்லாந்துக்காரர்கள் இப்போதும் பிரிட்டனின் பொருளாதாரத்தில் ஆதிக்கம் செலுத்துகின்றனர். 18ஆம்,19ஆம் நூற்றாண்டுகளில் ஆங்கிலேயர்கள் ஸ்கொட்லாந்துக்காரர்களைப் பார்த்துப் பொறாமைப்பட்டார்கள். சனத்தொகைக்கு ஏற்ப வழங்கப்பட்ட எண்ணிக்கையைவிடக் கூடுதலான எண்ணிக்கையில் அவர்கள் வேலை வாய்ப்புகளைப் பெற்றிருந்தார்கள்.

ஸ்கொட்லாந்துக்காரர்கள் சிறந்த கல்வியறிவுடையவர்களாவும்,சுறுசுறுப்பானவர்களாகவும் விளங்கியமையே இதற்குக் காரணம்.

வடக்கு மக்கள் எப்போதும் தென்பகுதி மக்களைவிட கடின உழைப்பாளிகள். காலநிலையும் மண்ணும் அவர்களை இவ்வாறு உழைப்பதற்கு நிர்ப்பந்திக்கின்றன. ஆங்கிலேயர்கள் முட்டாள்தனமாக ஸ்கொட்லாந்துக்காரர்களை பகைவர்களாகக் கருதவில்லை. ஆங்கிலேயர்களும் சிங்களவர்களைப் போன்று ஸ்கொட்லாந்துக்காரர்களை நடத்தியிருந்தால் பிரிட்டன் அபிவிருத்தியடைந்திருக்கவோ பிரிட்டிஷ் சாம்ராச்சியம் விஸ்தரிக்கப்பட்டிருக்கவோ முடியாது.

21

18ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இங்கிலாந்துக்கும் ஸ்கொட்லாந்துக்குமிடையே யூனியன் சட்டமூலம் உருவாக்கப்பட்டபோது ஆங்கிலேயர்கள் இரு நாடுகளுக்கும் ஆங்கிலம்தான் மொழி என அமுல்ப்படுத்தியிருந்தால் ஒவ்வொரு ஸ்கொட்லாந்துக்காரனும் ஸ்கொட் மொழியுடனே தொங்கிக்கொண்டிருந்திருப்பான். ஒவ்வொரு ஸ்கொட்டிஷ் தாய்மாரும் உணர்வுபூர்வமாக தமது பிள்ளைகளுக்கு ஆங்கிலத்தைப் போதித்தனர். காரணம் ஆங்கிலம் தெரிந்தவர்களுக்கு பெருமளவு வேலை வாய்ப்புகள் காணப்பட்டன. சிங்களம் படிக்கவேண்டும் என்ற நிலை ஏற்பட்டால் ஒவ்வொரு தமிழ்த்தாயும் ஆத்திரத்துடன் தமது பிள்ளைகளுக்கு சிங்களம் போதிப்பார்கள்.

நான் உருவாக்கிய அரசியல் யாப்பு சிறுபான்மையினரை பாதுகாக்கும் என அப்போது நான் எண்ணினேன். ஆனால் நான் நினைத்தது போல் 29 ஆவது பிரிவு அதிகாரமுடையதாக இருக்கவில்லை. நான் இப்போது இந்தியாவிலும் மற்ற இடங்களிலும் உள்ளது போன்ற மனித உரிமை ஷரத்து ஒன்றை சிபார்சு செய்ய விரும்புகிறேன். ஆனால் மாநில அரசாங்கமோ,சுயாதீன அரசாங்கமோ அமைப்பது நடைமுறையில் சாத்தியமாகுமென நான் நம்பவில்லை. மாநில சுயாட்சியை நடைமுறைப்படுத்துவது மிகவும் கடினமானது. சுயாதீன தமிழரசை இயக்குவதும் கடினமானது.

நான் மட்டுமே ஆலோசகனாகவும், தீர்மானங்களை ஏற்றுக்கொள்பவராகவும், அதிகாரம்மிக்க ஒருவனாகவும் இருந்ததையிட்டு அஞ்சுகிறேன்.கழிவிரக்கம் அடைகிறேன். நீங்கள் அயர்லாந்துக்காரர் முன்பு சமர்ப்பித்ததை பிரதி பண்ணியுள்ளீர்கள். தற்செயலாக டட்லி சேனநாயக்கவுக்கு ஆதரவளிக்க தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் விரும்பவில்லை. அவர்களால் அவரை ஆட்சியில் அமர்த்தமுடியுமென நினைக்கிறேன். தோட்டத்தொழிலாளர்களும் கடும் சினமுற்றுள்ளனர்.

பெருந்தொகையான ஆண்களும் பெண்களும் வாக்குரிமையின்றி அதிர்ச்சியுற்ற நிலையில் உள்ளனர். கண்டியில் உள்ள தேர்தல் தொகுதிகளை சுவீகரிப்பதற்காகவே சிங்களவர் இந்த விரும்பத்தகாத செயலை செய்துள்ளனர் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடிகிறது. ஒரு நியாயமான தீர்வு வடகிழக்கிற்கு வெளியே வாழும் தமிழர்களுக்காக (அவர்கள் தீவின் எப்பக்கத்திலும் வசிக்கலாம் ) நான்கு அல்லது ஐந்து ஆசனங்கள் தமிழர்களுக்கு மட்டுமென உருவாக்கப்படவேண்டும். நான் உங்களிடமும் உங்களது சமூகத்திடமும் உளப்பூர்வமாக மன்னிப்புக் கோருகிறேன்.

ஒப்பம்
சோல்பரி
*30.4.1964*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டலந்த முகா



அ.நிக்ஸன்

போர்க்குற்றம் தொடர்பாக சர்வதேச விசாரணை என்றும், இன அழிப்புக்கான சர்வதேச நீதி விசாரணை அவசியம் எனவும் ஈழத்தமிழ் அமைப்புகள் பேசிவரும் நிலையில், 'பட்டலந்த' வதைமுகாம் தொடர்பாக இலங்கை ஒற்றையாட்சி நாடாளுமன்றத்தில் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருப்பதன் பின்னணியில் பல காரண காரியங்கள் உள்ளன.

இதனை மூன்று வகையாக நோக்கலாம்.

ஒன்று. முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு பட்டலந்த வதை முகாமுடன் இருந்த தொடர்பு. இரண்டாவது, ரணில் விக்கிரமசிங்கவை ஜனநாயகவாதி எனவும் இனப்பிரச்சினைக்கு அவரால்தான் தீர்வை முன்வைக்க முடியும் என்றும் நம்புகின்ற மற்றும் அவருக்காக பிரசாரம் செய்கின்ற தமிழர்களின் மனநிலை பற்றியது.

மூன்றாவது, 1994 இல் இருந்து 2004 ஆம் ஆண்டு வரை சந்திரிகாவுக்கும் 2005 இல் இருந்து 2009 வரை மஹிந்தவுக்கும் ஆதரவு வழங்கி ,தேன்நிலவை அனுபவித்த காலத்தில் இந்த 'பட்டலந்த ' வதை முகாம் பற்றிய அறிக்கையை ஜே.வி.பி. ஏன் கோரவில்லை என்ற சந்தேகம்.1988- 89 ஆண்டுகளில் பிரேமதாஸ ஜனாதிபதியாக இருந்தபோது ரணில் அமைச்சராக இருந்தார். பாதுகாப்பு அமைச்சராக ரஞ்சன் விஜேரத்ன இருந்தார். 'பட்டலந்த' வதை முகாமில் ஆயுதக் களஞ்சியப் பொறுப்பதிகாரியாக இருந்த ஓய்வு பெற்ற பொலிஸ் பரிசோதகர் ஏ. பீ. கருணாரத்ன அப்போது முகாமில் நடந்த ஈவிரக்கமற்ற கொலைகள் பற்றி ஊடகங்களுக்கு வழங்கிய நேர்காணலில் பகிரங்கமாகக் கூறியிருக்கிறார்.

குறிப்பாக சட்டத்தரணி விஜயதாஸ லியனாராச்சி கொடூரமாகக் கொலைசெய்யப்பட்டமை பற்றி அவர் அந்த நேர்காணலில் விபரித்துள்ளார்.

சட்டத்தரணி விஜயதாஸ குற்றுயிராக இருந்த நிலையில் முகாமுக்கு ஒரே வாகனத்தில் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸவும், ரணில் விக்கிரமசிங்கவும் வந்துசென்றனர் என்று அவர் கூறியுள்ளார்.

ஆகவே, இந்தப் படுகொலைகளுக்கு அப்போதைய ஐக்கிய தேசியக் கட்சியே காரணம் என்பதும் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் தொடர்பு இருந்தது என்பதும் வெளிப்படையான ஒன்று. அதுவும் ரணிலின் இந்தச் செயற்பாடுகள் பற்றி கடந்த 30 வருடங்களில் நாடாளுமன்றத்தில் சிங்கள உறுப்பினர்கள் பலரும் ஆதாரங்களுடன் சுட்டிக்காட்டியிருக்கின்றனர். 1990களில் நாடாளுமன்றத்தில் 'பட்டலந்த' என்ற பட்டப் பெயரும் ரணிலுக்கு இருந்தது.

ரணில் விக்கிரமசிங்கவை 2005 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெறவிடாமல் விடுதலைப் புலிகள் தடுத்துவிட்டதாகவும், இனப்பிரச்சினைக்குரிய தீர்வை ரணில்தான் வழங்கக்கூடியவர் எனவும், முற்போக்குத் தமிழர்கள் என்று தம்மைத்தாமே சொல்வோரும், நுனி நாக்கில் ஆங்கிலம் பேசும் மாற்றுக்கருத்தாளர்கள் எனப்படுவோரும் ரணிலைப் புனிதராக்கினர்.

ரணில் 2002 ஆம் ஆண்டு பிரதமராக இருந்தபோது நோர்வேயின் ஏற்பாட்டில் இடம்பெற்ற சமாதானப் பேச்சில் புலிகளுக்கு எதிராக சர்வதேச அரங்கில் ரணில் மேற்கொண்ட இரகசியக் காய்நகர்த்தல்களை அறிந்துகொண்ட பின்புலத்தில்தான் ரணிலை 2005 இல் புலிகள் ஜனாதிபதியாக்க விரும்பியிருக்கவில்லை என்பது நிதர்சனம். இதன் காரண காரியத்தோடுதான் ரணில் ஒரு 'நரி' என 2006 ஆம் ஆண்டு அன்ரன் பாலசிங்கம் லண்டனில் நடந்த பொதுக் கூட்டம் ஒன்றில் பகிரங்கமாகச் சுட்டிக்காட்டியிருந்தார்.

1990 களில் நாடாளுமன்றத்தில் ரணிலுக்கு 'பட்டலந்த' என்று பட்டப்பெயர் வைத்திருந்த சிங்கள உறுப்பினர்கள் பலரும் 2009 ஆம் ஆண்டுக்குப் பிற்பட்டகாலத்தில் ரணிலை நரி என்றும் அவ்வப்போது உச்சரித்திருந்தனர். ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து வெளியேறிய உறுப்பினர்கள்தான் ரணில் ஒரு நரி என்று பகிரங்கமாகக் குற்றம் சுமத்தினர். அதேநேரம், 2015 ஆம் ஆண்டு மைத்திரி ரணில் அரசாங்கத்தை நல்லாட்சி என்றும் ரணில்தான் தமிழர்களின் அரசியல் உரிமைகளை வழங்கும் நாயக'ன் என்றும் ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் போற்றிப்புகழ்ந்த காலமும் உண்டு. 17 வருடங்களின் பின்னர் 1994 ஆம் ஆண்டு பதவிக்கு வந்த சந்திரிகா தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை மையப்படுத்திய பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம், 'பட்டலந்த ' வதைமுகாம் மாத்திரமல்ல, 'சூரியவெ' படுகொலை உள்ளிட்ட ஜே.வி.பி.க்கு எதிரான பல கொலைகளை விசாரணை நடத்துவதாக உறுதியளித்திருந்தது.

போரை நிறுத்தி புலிகளுடன் சமாதானப்பேச்சு நடத்தப்படும் என்றும் அப்போது சந்திரிக மார்தட்டியிருந்தார். 1993 ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடைபெற்ற மேல் மாகாணசபைத் தேர்தலில் முதலமைச்சர் வேட்பாளராகப் போட்டியிட்டிருந்த சந்திரிகா, ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியில் நடந்த கொலைகள், அட்டூழியங்கள் அனைத்தையும் அக்குவேறு ஆணிவேறாக பிய்த்து உதறினார். தேர்தலில் வெற்றிபெற்று முதலமைச்சராகப் பதவியேற்ற சந்திரிகா பின்னர் பிரதமராகவும் சில மாதங்களில் ஜனாதிபதியாகவும் பதவியேற்றார். அதன்போது ஜே.வி.பி. சந்திரிகாவுக்கு ஆதரவு கொடுத்தது. ஜே.வி.பி.யும் 1994 இல் முதன் முறையாக ஜனநாயக வழியில் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டது. தேசியப் பட்டியல் மூலம் நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவியேற்ற நிஹால் கலப்பத்தி, சந்திரிகா அரசாங்கத்துக்கு ஆதரவு கொடுத்திருந்தார்.

நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிக்க வேண்டும் என்றும் சந்திரிகாவுக்கு அவர் நிபந்தனை விதித்திருந்தார்.

அதேநேரம், தேர்தல் பிரசாரங்களின்போது உறுதியளித்தபடி புலிகளுடன் சமாதானப்பேச்சையும் சந்திரிகா ஆரம்பித்தார். ஆனாலும், பேச்சுகள் முறிவடைந்து 1995 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் மீண்டும் மூன்றாம் கட்ட ஈழப்போர் ஆரம்பமானது.

## ஜே.வி.பி. கேட்கத் தவறிய சந்தர்ப்

இந்தப் போருக்கு ஜே.வி.பி. முழு ஆதரவு வழங்கியது. ஆனால், நிஹால் கலப்பத்தி சந்திரிகாவிடம் முன்வைத்த நிபந்தனைகளுக்கு நடந்தது என்ன? பட்டலந்த வதை முகாம் பற்றி மாத்திரமே சந்திரிகா விசாரணை நடத்தினார். ஆனால் அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை. குற்றவாளிகள் தண்டிக்கப்படவுமில்லை. அத்துடன், நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி ஆட்சி முறை ஒழிக்கப்படவுமில்லை.

இதனால் சந்திரிகா அரசாங்கத்துக்கான தனது ஆதரவை நிஹால் கலப்பத்தி விலக்கிக்கொண்டார். இராணுவத்தால் 1995 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் யாழ்ப்பாணம் கைப்பற்றப்பட்டு அங்கு பல கொலைகள் நடந்தன. 1996 இல் கிருசாந்தி குமாரசுவாமி பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு கொல்லப்பட்டார். 600 இற்கும் அதிகமான தமிழ் இளைஞர்கள், பெண்கள் கொல்லப்பட்டு செம்மணியில் புதைக்கப்பட்டுள்ளரென கிருசாந்தியை பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்திய சிப்பாய் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் வாக்குமூலம் வழங்கியிருந்தார்.

கிழக்கு மாகாணத்தில் தமிழர்களுக்கு எதிராகப் பல திட்டமிடப்பட்ட படுகொலைகள், சித்திரவதைகள் நடந்தன. குறிப்பாக மட்டக்களப்பில் குடும்பப் பெண் ஒருவரின் அந்தரங்க உறுப்பில் கிரனேட் வெடிக்கவைக்கப்பட்டு நடந்த கோரக் கொலைகள் அன்று சர்வதேச ஊடகங்களில் பரபரப்பாகப் பேசப்பட்டிருந்தன. ஆனால், சந்திரிகா அரசாங்கத்தில் நடைபெற்ற இந்தக் கொலைகள் பற்றியெல்லாம் ஜே.வி.பி. அன்று வாய் திறக்கவில்லை. பட்டலந்த வதை முகாம் பற்றி விசாரணை நடத்தி அறிக்கையை சமர்ப்பிக்க விரும்பாத சந்திரிகா பற்றி அன்று ஜே.வி.பி. எதுவுமே பேசவில்லை. மாறாகபுலிகளுக்குஎதிரானபோரைத்தீவிரப்படுத்தவேண்டும் என்று அழுத்தங்களுடன் மாத்திரமே சந்திரிகாவின் அரசாங்கத்துக்கு ஜே.வி.பி. ஆதரவு வழங்கியது.

2000 ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப், 'நுவா' எனப்படும் தேசிய ஐக்கிய முன்னணி என்ற கட்சியை உருவாக்கி அதில் சிங்கள தமிழ் முஸ்லிம் உறுப்பினர்கள்

## இனஅழிப்பு எ
## மூடி மறைப்

அனைவரையும் போட்டியிடவைத்தார். ஒரு தேசியக் கட்சியாக அஷ்ரப் தனது கட்சியைக் காண்பித்திருந்தார். இது சந்திரிகாவுக்குப் பெரும் சவாலாக மாறியது.

இதனால், 2000 ஆம் ஆண்டு தேர்தலில் ஜே.வி.பி.யின் முழு ஒத்துழைப்பை சந்திரிகா பெற்றார். அத்துடன் பிரித்தானியாவில் தலைமறைவாக வாழ்ந்துகொண்டிருந்த ஜே.வி.பி. தலைவர் சோமவன்ச அமரசிங்க இலங்கை வருவதற்கு சந்திரிகா அனுமதியும் வழங்கினார்.

1988 ஆம் ஆண்டு இலங்கையை விட்டுத் தப்பிச்சென்ற சோமவன்ச அமரசிங்க 2000 ஆம் ஆண்டு கொழும்புக்கு வந்து நடத்திய முதலாவது செய்தியாளர் மாநாடு கல்கிசை ஹொட்டலில் நடைபெற்றது. அங்கு செய்தியாளர்களுக்கு விளக்கமளித்த சோமவன்ச , 'ஐம்பதாயிரம் சிங்கள இளைஞர்களைத் திரட்டி புலிகளுக்கு எதிரான போருக்கு அனுப்புவேன் 'என்று உறுதியளித்திருந்தார்.

தேர்தல் பரப்புரை மேடைகளில் அவர் புலிகளுக்கு எதிரான போரைத் தீவிரப்படுத்தவேண்டும் என்று முழங்கியிருந்தார். இதனால் எட்டு நாடாளுமன்ற உறுப்பினர்களை ஜே.வி.பி. பெற்றது. ஜே.வி.பி.யின் ஆதரவுடன் சந்திரிகா அரசாங்கத்தை அமைத்திருந்தார். ஆனால், இந்த ஆட்சியில்கூட பட்டலந்த வதை முகாம் தொடர்பான அறிக்கையை சமர்ப்பிக்குமாறு ஜே.வி.பி. சந்திரிகாவுக்கு அழுத்தம் கொடுக்கவில்லை. இருந்தாலும் இந்த அரசாங்கமும் கவிழ்ந்து 2001

ஆம் ஆண்
தேர்தல் நட
அந்தக் கா
ஆரம்பிக்க
சமாதான
பட்டலந்த
களிலும் 19
ணுவம் புரி
விடுதலைப்
முன்னெடுத்
இதனால் தே
லும், ரணில்
யக் கட்சிை
அரசாங்கத்
இருக்க ரண
கட்சியாகவு
லில் மாறுப
வானது.
இந்தச் சூழல்
ஆரம்பித்த
னார். 2002
சாங்கமும்
கைச்சாத்திட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காம் அறிக்கை:





## தர்ப்பங்களும்



# பு விசாரணை
# றைப்புகளும்

ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் மீண்டும் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்றது.

அந்தக் காலத்தில்தான் நோர்வேயின் சமாதான முயற்சியும் ஆரம்பிக்கப்பட்டது. தேர்தல் பரப்புரைகளில் நோர்வேயின் சமாதான முயற்சிக்கு கடும் எதிர்ப்பு வெளியிட்ட ஜே.வி.பி., பட்டலந்த வதைமுகாம் உட்பட தங்களுக்கு எதிராக 1970 களிலும் 1988 -89 ஆம் ஆண்டுகளிலும் இலங்கை இராணுவம் புரிந்த படுகொலைகள் தொடர்பாகப் பேசாமல், விடுதலைப்புலிகளுக்கு எதிரான பரப்புரைகளை மாத்திரமே முன்னெடுத்திருந்தது.

இதனால் ஜே.வி.பி.க்கு 16 ஆசனங்கள் கிடைத்தன. ஆனாலும், ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியை மையப்படுத்திய ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தை அமைத்தது. சந்திரிகா ஜனாதிபதியாக இருக்க ரணில் பிரதமராக இருந்தார். அரசாங்கம் வேறு கட்சியாகவும் ஜனாதிபதி மற்றொரு கட்சியாகவும் முதன்முதலில் மாறுபட்ட ஆட்சிமுறை ஒன்று இலங்கைத்தீவில் உருவானது.

இந்தச் சூழலில்தான் நோர்வேயின் ஏற்பாட்டுடன் சந்திரிகா ஆரம்பித்த சமாதான முயற்சியை ரணில் முழுமைப்படுத்தினார். 2002 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் இலங்கை அரசாங்கமும் புலிகளும் புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டனர். இதற்குக் கடும் எதிர்ப்பை வெளியிட்ட ஜே.வி.பி. பௌத்த பிக்குமாரின் ஒத்துழைப்புடன் கொழும்பில் தொடர் போராட்டங்களை நடத்தியிருந்தது.

சந்திரிகா ஜனாதிபதியாக இருந்து கொண்டு ஜே.வி.பி.க்கு மறைமுக ஆதரவு வழங்கினார். ஜே.வி.பி.யின் எதிர்ப்பைக் காண்பித்து நோர்வேயின் சமாதான முயற்சிகளில் பல இடர்பாடுகளை சந்திரிகா உருவாக்கினார். ரணில் விக்கிரமசிங்கவும் சந்திரிகாவின் எதிர்ப்புகளை மேற்கோள் காண்பித்து பேச்சுவார்த்தை மேசையில் புலிகளின் நியாயமான கோரிக்கைகள் பலவற்றை தட்டிக்கழித்தார். அதாவது, தமிழர்களின் அரசியல் அபிலாசைகள் நிறைவேற்றப்படுவதைத் தடுக்க சந்திரிகாவின் எதிர்ப்பை ஓர் உத்தியாகப் பயன்படுத்தினார் ரணில். இந்த இழுபறியில் தான் 2003 ஆம் ஆண்டு பாதுகாப்பு அமைச்சு உட்பட மூன்று முக்கியமான அமைச்சுகளை ரணிலின் அரசாங்கத்திடம் இருந்து கையகப்படுத்தினார் சந்திரிகா. இதனால் கொழும்பில் அரசியல் நெருக்கடி ஏற்பட்டது. சமாதான பேச்சுகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டன. சந்திரிகாவின் இந்தச் செயற்பாட்டுக்கு ஜே.வி.பி. பின்னணியாக இருந்தது.

இந்த இழுபறி நிலையினால் ரணிலின் அரசாங்கத்தை சந்திரிகா கலைத்தார். இதனால் 2004 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் மீண்டும் நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்பட்டது. நோர்வேயின் சமாதான முயற்சிக்கு எதிராகவே ஜே.வி.பி.யும் சந்திரிகா தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பும் பரப்புரைகளை மேற்கொண்டிருந்தன. சந்திரிகாவின் வெற்றிலைச் சின்னத்தில் கூட்டுச்சேர்ந்து தேர்தலில் போட்டியிட்டதால் ஜே.வி.பி.க்கு 39 ஆசனங்கள் கிடைத்தன. சந்திரிகா அமைத்த அரசாங்கத்தில் தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க விவசாய அமைச்சராகப் பதவி வகித்திருந்தார். ஆனால், அந்த அரசாங்கத்தில் கூட 'பட்டலந்த' வதை முகாம் தொடர்பான அறிக்கையை ஜே.வி.பி. கோரவில்லை. மாறாக நோர்வேயை சமாதான முயற்சியில் இருந்து வெளியேற்ற வேண்டும் என்பதே ஜே.வி.பி.யின் ஒரேயொரு இலக்காக இருந்தது. 2005 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்சவின் வெற்றிக்குக் கடுமையாக உழைத்த ஜே.வி.பி. புலிகளுக்கு எதிரான போரைத் தீவிரப்படுத்த கடும் அழுத்தங்களைக் கொடுத்தது.

பட்டலந்த படுகொலைகளுக்கு நீதிகோருவதை விடவும்.புலிகளை இல்லாதொழிக்கவேண்டும் என்ற இலக்கு மாத்திரமே ஜே.வி.பி.க்கு 1994 இல் இருந்து 2009 மே மாதம் வரை இருந்தது என்பது இங்கே கண்கூடு.

எனவே, இந்த வரலாற்றுப் பின்னணியில் இனவாதத்தை மூலதனமாக்கி 2024 ஆண்டு செப்ரெம்பர் மாதம் 159 என்ற அறுதிப் பெரும்பான்மை ஆசனங்களுடன் ஆட்சியமைத்துள்ள ஜே.வி.பி.யின் முகத்தோற்றமான தேசிய மக்கள் சக்தி, பட்டலந்த அறிக்கையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்திருக்கிறது. உண்மையில் பாதிக்கப்பட்ட ஜே.வி.பி. உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் மற்றும் சாதாரண சிங்களப் பொது மக்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுப்பதற்காவே பட்டலந்த அறிக்கை என்று சிங்கள மக்கள் நம்பலாம். ஆனால் நோக்கம் அதுவல்ல. இதை மூன்று வகைப்படுத்தலாம்

ஒன்று, இன அழிப்புக்கான சர்வதேச நீதி விசாரணை வேண்டும் என்ற தமிழர்களின் கோரிக்கைகளை மடைமாற்றி எண்பது வருட அரசியல் போராட்டத்தை இலங்கைத்தீவின் உள்ளக விவகாரமாக மாற்றுவது.

இரண்டாவது, இலங்கையின் மூத்த சிங்கள அரசியல்வாதிகள் சிலரையும் இலங்கை இராணுவ உயர் அதிகாரிகள் சிலரையும் தண்டித்தால் போதும் என்ற மனப்பாங்குடன் செயற்பட்டு "இலங்கை ஒற்றை ஆட்சி அரசு" என்ற கட்டமைப்பு நியாயமானது நீதியானது என்ற எண்ணப்பாட்டை சர்வதேசத்துக்கு வெளிப்படுத்துவது. மூன்றாவது, ரணில் சஜித் பிரேமதாஸ ஆகியோர் எதிர்காலத்தில் கூட்டுச்சேர்ந்து மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியாக அல்லது புதிய அரசியல் அணியாகச் செயற்படுவதைத் தடுப்பது.

ஆகவே "மாற்றம்" "சோசலிசம்" என்று மார் தட்டிக் கொண்டு ஆட்சிக்கு வந்த ஜே.வி.பி., இரண்டு விடயங்களைப் புரிந்து கொள்ளவேண்டும். ஒன்று ஈழத்தமிழர்களின் அரசியல் விடுதலைக்கான 30 வருடப் போரில் தமிழர்கள் கொல்லப்பட்டமை, சித்தரவதை செய்யப்பட்டமை என்பது இன அழிப்பின் வெளிப்பாடு. தமிழர்களின் மரபு அடையாளங்கள், கலாசாரங்கள்கூட 2009 ஆம் ஆண்டு மே மாதத்துக்குப் பின்னரான சூழலிலும் அழிக்கப்பட்டு வருகின்றன.

இரண்டாவது பட்டலந்த வதை முகாம் உட்பட பல வதை முகாம்களில் ஜே.வி.பி. உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் கொல்லப்பட்டமை சித்திரவதை செய்யப்பட்டமை என்பது ஓர் இனத்துக்குள் நடந்த கொலைகள்.

அது இன அழிப்பு அல்ல. இந்தக் கொலைகள் சர்வதேசக் குற்றங்கள் என்று இதுவரையும் எந்தவொரு சர்வதேச நாடுகளும் சர்வதேச அமைப்புகளும் கூறவேயில்லை. ஆனால் ஈழத்தமிழர்கள் மீது இலங்கை இராணுவம் நடத்திய படுகொலைகள் சர்வதேசக் குற்றங்கள் என்றே ஜெனிவா மனித உரிமைச்சபையின் அறிக்கைகள் கூறியிருக்கின்றன. போர்க்குற்ற விசாரணை அவசியம் என்று ஐ.நா. அறிக்கைகளிலும், சர்வதேச நீதி விசாரணை அவசியம் என்றும் பல சர்வதேச நாடுகளும்கூட சுட்டிக்காட்டியுமிருக்கின்றன.

இன அழிப்பு என தமிழர்கள் கோரினாலும் இன்னமும் அதனை சர்வதேச நாடுகள் ஏற்றுக்கொள்ளவில்லை. இருந்தாலும் கனடா போன்ற சில சர்வதேச நாடுகள் இன அழிப்பு என்பது பற்றி பரிசீலிக்கின்றன. பட்டலந்த கொடூரமான படுகொலைகள் மனித குலத்துக்கு எதிரானவை. ஆனால் அது சர்வதேசக் குற்றமா என்பதை ஜே.பி.வி.தான் கூற வேண்டும். ஆகவே, மேலும் இரண்டு விடயங்களை ஜே.வி.பி. புரிந்துகொள்ள வேண்டும்.

ஒன்று பட்டலந்த வதைமுகாம் அறிக்கையை மாத்திரம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து அதனை வெறும் பேசுபொருளாக சித்தரிக்க முயற்சிக்கும் நகர்வு என்பது ஈழத் தமிழர்களுக்கு இழைக்கப்படும் மிகப் பெரும் அரசியல் அநீதி. இரண்டாவது பட்டலந்த முகாம் அறிக்கையை உள்ளூராட்சி சபைத் தேர்தல் பிரசாரங்களுக்குப் பயன்படுத்தினால், பெரும்பான்மையாக வாக்களித்த சிங்கள மக்களுக்கு இழைக்கப்படும் பெரும் துரோகமாகும்.

ஆகவே, கிணறு வெட்ட பூதம் கிளம்பிய கதையாக பட்டலந்த முகாம் அறிக்கை மாறலாம். இந்த இடத்தில் தமிழ்த் தேசியக் கட்சிகளின் பலவீனங்களும் இலங்கை ஒற்றையாட்சி அரசின் தேர்தல் வியூகங்களுக்குள் மாத்திரம் மூழ்கியிருப்பது மிக மிக ஆபத்தானது. புதிய இளம் தலைமுறை இந்த வரலாறுகளை நன்கு கற்றுக்கொள்ள வேண்டும்.

2009 க்குப் பின்னரான சூழலில் ரணில், ராஜபக்ச தற்போது அநுரகுமார என்று மாறி மாறி ஆதரவு வழங்கி வரும், வழங்க முற்படும் தமிழரசுக் கட்சிக்கும் கட்சிகளாக இயங்கும் சில முன்னாள் ஈழ விடுதலை இயக்கங்களுக்கும், சில புலம் பெயர் தமிழ் அமைப்புகளுக்கும் இக்கட்டுரை சமர்ப்பணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சங்கப் பெண்பாற் கவிஞர்களின் பார்வையில்

# தமிழர் பண்பாடும் வாழ்வியலும் – ஓர் நோக்கு



09

பேராசிரியர் சிவேசன் சிவானந்தமூர்த்தி
சந்தைப்படுத்தல் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

### போரும் வீரமும்

சங்கம் வைத்து தமிழ் வளர்த்த முன்னோர்கள் வாழ்ந்த காலத்தில் மூவேந்தர்களுக்கும் குறுநில மன்னர்களுக்குமிடையே அதிகாரப்போட்டியின் மிகுதியால் ஓயாது போர்கள் நிகழ்ந்த வண்ணம் இருந்தன. பண்டைய கிரேக்கச் சமூகம் போல போர்ச்சமுதாயமாக விளங்கிய தமிழகத்தில் பெண்டிரும் ஆடவர்போல் மறவுணர்வு மிக்கோராய் விளங்கினர். (துட்சிணா மூர்த்தி, 2021 ப.24). பூங்கன் உத்திரையார் என்ற பெண்பாற் கவிஞர் கூந்தல் வெண்மையாக நரைத்த மூதாட்டித் தாய் ஒருத்தி தனது மகன் போர்க்களத்தில் மாண்டான் எனக் கேள்வியுற்றபோது அவனைப் பெற்றபொழுது ஏற்பட்ட ஆனந்தத்தினைக் காட்டிலும் ஓர் உயர்வான பெருமகிழ்வு கொண்டாள் எனக் குறிப்பிடுகின்றார். இங்கு தாய், சேய் என்ற இரத்த உறவைக்காட்டிலும் வீரம், போர் என்ற அரசியல் உறவு நிலை முதன்மைப்படுத்தப் பட்டுள்ளது. ஆனாலும் தாய்ப்பாசத்தின் மிகுதியினால் மாவீரனைப் பெற்றதாக மார்தட்டி பூரிப்படைந்த தாய் நிலைதழும்பி, நிலைகுலைந்து மாலைப்பொழுதில் மூங்கில் காட்டில் மழை பொழிவது போல் பாச உணர்வின் மிகுதியால் அவள் கண்களிலிருந்து கண்ணீர் சிந்துகின்றது. இதற்கு "சிதரினும் பலவே" என்ற புறநானூற்றுப்பாடல் சான்றாக அமைகின்றது. பண்டைய பெண்டிர் பந்த பாசங்களுக்கும், உறவுகளினால் ஏற்படுகின்ற உணர்வுகளுக்குள்ளும் சிக்குண்டு கொள்ளாமல் வீரத்துக்கும் ஆண்மைக்கும் முக்கியத்து வம் கொடுப்பவர்களாக இருந்தார்கள். இதற்குப் பிரமாணமாக புறநானூற்றில் காக்கைப் பாடினியார் நச்செள்ளையார் எழுதிய 278 ஆவது பாடல் அமைகின்றது.

மகன் யுத்தத்தில் புறங்கொடுத்தான் என ஊர் சொல்லக் கேட்டதாய் அது உண்மை எனின் அவனுக்காகப் பால்சுரந்த என் முலையினை அறுத்து எறிவேன் என சபதம்செய்து நடந்தவற்றினைக் காண்பதற்கு யுத்தகளம் செல்கின்றாள். அங்கு மாய்ந்த வீரர்களுடன் தன் மகனும்நெஞ்சில்விழுப்புண்களுடன் களத்தில் மாண்டுகிடப்பதைக் கண்டு ஆனந்தம் கொள்ளுகின்றாள்.

மேலும், ஒக்கூர் மாசாத்தியார் என்னும் பெண்பாற் புலவரினால் வாகைத்திணையில் எழுதப்பட்ட செல்கெனவிடுமே என்ற 279 ஆவது புறநானூற்றுப்பாடலில் ஒரு மறவகுலத்துப் பெண்ணின் துணிவும், நாட்டின் மீது கொண்ட நாட்டுப்பற்றும் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன. அதாவது பேணுவதற்கு யாருமற்ற நிலையில் இருக்கும் பெண் நாட்டின்மீது கொண்ட தீராத காதலின் விளைவாக (நாட்டுப்பற்றின்) தன்னுடைய சிறிய மகனை யுத்தகளம் அனுப்புகின்றாள். இங்கு யுத்தகளத்தில் தந்தையை, கணவனை இழந்தும் தேசிய உணர்வு மேலோங்கி நிற்பதால் தனது சிறிய மகனைப் போர்க்களம் புகச் செய்தாள். இதனை "ஒருமகன் அல்லது இல்லாள் செருமுக நோக்கிச் செல்க என விடுவே!" என்கின்ற புறநானூற்றுப் பாடல்வரிகளிலிருந்து புரிந்துகொள்ளலாம். முடிவுரை ஆண் பெண் என்கின்ற பால்வகுப்பு இயற்கையின் நியதியின் வாயிலாக உருவாக்கப்பட்ட ஒருமையின் இரு வேறு நிலைகளேயாகும். இதில் பெண்களினால் மட்டுமே தாய்மையடையமுடியும். ஆதலால் பெண்கள் எப்பொழுதும் தமிழ்ச்சமுதாயத்தில் உயர்ந்தவர்களாகவே நோக்கப்படுகின்றார்கள். சங்ககாலத்தில் பெண்கள் பல்வேறு வகையான கல்வி, கலை, பொழுதுபோக்கு, அறிவு, சமூகச் செயற்பாடுகளுடன் தம்மை இணைத்திருந்தனர். அதன்மூலம் பெண்களின் அறிவு, சமூக மூலதனம் போன்றவை மேம்படுத்தப்பட்ட வலுவான சமூக, பொருளாதார, பண்பாட்டு விழுமியங்களுடன் கூடிய பெண்ணினம் சங்ககாலத்தில் பெருவாழ்வு வாழ்ந்தது.

> **சங்ககாலத்தில் பெண்கள் பல்வேறுவகையான கல்வி, கலை, பொழுதுபோக்கு, அறிவு, சமூகச் செயற்பாடுகளுடன் தம்மை இணைத்திருந்தனர். அதன்மூலம் பெண்களின் அறிவு, சமூக மூலதனம் போன்றவை மேம்படுத்தப்பட்ட வலுவான சமூக, பொருளாதார, பண்பாட்டு விழுமியங்களுடன் கூடிய பெண்ணினம் சங்ககாலத்தில் பெருவாழ்வு வாழ்ந்தது.**

இக்கட்டுரையில் சங்கப்படைப்புகளில் பெண்பாற் புலவர்களினால் படைக்கப்பட்ட மொத்தம் 181 கவிதைகள் பட்டியல்ப்படுத்தப்பட்டுள்ளதுடன் அவற்றுள் பெண்பாற் புலவர்கள் அகநானூற்றுப் பாடல்கள் இருபத்திரெண்டினையும், அறுபத்திமூன்று புறநானூற்று பாடல்களினையும், இருபத்தைந்து நற்றிணைப் பாடல்களினையும், அறுபத்தியொரு குறுந்தொகைப் பாடல்களினையும், பத்து பதிற்றுப்பத்துப் பாடல்களினையும் இயற்றியுள்ளார்கள். இவர்களுடைய பாடல்களில் அன்பு, காதல், வீரம், காமம், பிரிவு, துயர், கைம்மை நோன்பு, வாழ்க்கை பற்றிய பேருண்மை, இற்செறிதல் போன்றன பெண்மைக்கே உரிய நுட்பமான உணர்வுகளை அறிவுணர்வுடன் மதிநுட்பமாக வெளிப்படுத்தியுள்ளனர். உலகளாவிய மாந்தர்கள் இன்றுவரை மனித வாழ்வியலை மேம்படுத்துவதற்காகச் சபைகள் அமைத்தும் சங்கம் வைத்தும் முயன்றுவரும் வேளையில் பண்டைய பண்பாட்டுத் தமிழன் அன்றே உயர் நாகரிகமான வாழ்வியலைத் தமக்கு அமைத்துக்கொண்டான்.

(முற்றும்)

---

# ஊர்ப்புதினம்

பாகம் 3

இராகவன்

போனகிழமை ஊர்ப்புதினத்தின் தீவிரவாசகர் ஒருவரைப் பற்றிச் சொல்லுறன் எண்டனான். இப்ப அவரைப் பற்றிப் பாப்பம். அவரை எல்லாரும் தேவாமாஸ்ரர் எண்டு சொல்லுவினம். தேவராஜா எண்டதுதான் அவரின்ர முழுப்பெயர். உடுப்பிட்டி அமெரிக்கமிஷன் ஸ்கூல்ல அவர் மற்ஸ் படிப்பிச்சவர். கேம்பிறிட்ஜ் ரியூசனிலயும் மற்ஸ் படிப்பிச்சவர். அவரும் மற்ஸில ஒரு விண்ணன்தான். இலக்கியம், வாசிப்பிலயெல்லாம் நல்ல ஆர்வமுள்ளவர். அவரை அண்டைக்கு உதயண்ணை வீட்டில சந்திச்சாப்போலை, "நான் உங்கடை ஊர்ப்புதினத்தைத் தவறவிடாமல் வாசிக்கிறனான். அதிலை நீங்கள் எங்கட ஜெபரத்தினம் மாஸ்ரரைப் பற்றி எழுதினதைப் போட்டோ எடுத்து அவருக்கும் இராமகிருஷ்ணனுக்கும் (போனகிழமை நான் ஊர்ப்புதினத்தில சொல்லியிருந்த இராமர்) வாட்ஸ்சப்பில அனுப்பினனான்.

அதைப்பாத்திட்டு ஜெபரத்தினம் மாஸ்றரர் கோலெடுத்து, "ஆரடாப்பா இவன் என்னைப் பற்றி இந்தளவுக்குத் தெரிஞ்சுவைச்சிருக்கிறான்?" எண்டு கேட்டார். நான் உங்களைப் பற்றிச் சொன்னன். தனக்குச் சரியா ஞாபகம் வரேல்லையெண்டு சொன்னார். எதிர்பாராத விதமா அந்தாளும் போய்ச்சேர்ந்திடுத்து" என ஆதங்கப்பட்டுச் சொன்னார்.

உண்மைதான் நான் ஊர்ப்புதினத்தில ஜெபரத்தினம் மாஸ்ரரைப் பற்றி எழுதிக் கொஞ்சநாளிலை அவர் காலமாகிட்டார். அது எனக்கும் சரியான கவலைதான். இருந்தாலும் தேவாமாஸ்ரர் மூலமாக ஜெபரத்தினம் மாஸ்ரர் தன்னைப் பற்றி ஊர்ப்புதினத்தில வந்ததை வாசிச்சிருக்கிறார் எண்டது எனக்கு ஒரு மனநிறைவைத் தந்திருக்கு. தேவாமாஸ்ரருக்கு என்ர மனமார்ந்த நன்றி.

22

இதேபோலதான் துரைமாமாவைப் பற்றி நான் ஊர்ப்புதினத்தில எழுதினதைச் சிவமண்ணை சொல்லி அவரதை வாசிக்கிறதுக்குத் தேடிக்கிடைக்காமலேயே அவர் காலமானதை நினைக்கேக்குள்ளயும் எனக்கது தீராத கவலைதான். போன இருவத்தோராந்திகதி எங்கட அரவிந்தன் அண்ணாவின்ர (உடுவில் அரவிந்தன்) பிறந்தநாள். முந்தி நான் மருதங்கேணி டீ.எஸ். ஒப்பீஸில வேலைசெய்யேக்குள்ள அவர் பருத்தித்துறைப் பிரதேசசபை வைத்திய நிலையத்தில டொக்ரராயிருந்தவர். அப்பவெல்லாம் அவரை நேரில சந்திச்சு வாழ்த்துவன். இப்ப அவர் கிளிநொச்சிக்கு ட்ரான்ஸறாகிப் போகிட்டார். அதால ரெலிபோனில வாழ்த்துச் சொன்னன். பலதும் பத்தும் கதைச்சம். அப்ப ஊர்ப்புதினத்தைப் பற்றியும் கதை வந்தாப் போலை நான் ஜெபரத்தினம் மாஸ்ரர், துரை மாமா பற்றியெல்லாம் சொன்னன். அந்தாள் ஒரு கலாய்ப்பு மன்னன்.

நான் சொன்னதையெல்லாம் வடிவாக் கேட்டுப்போட்டு, "என்ன ஐஸே! உம்மட ஊர்ப்புதினத்தை வாசிக்கிறவரும் சாகிறார். வாசிக்காதவரும் சாகிறார். என்னதான் நடக்குது? எனக்கொண்டுமாய் விளங்கேல்ல!" எண்டு வழமைபோல கலாய்ச்சுத்தள்ளினார். எனக்கிதைக் கேட்டாப்போலைதான் ராகுலசாங்கிருத்தியன் எழுதின "வால்காவிலிருந்து கங்கைவரை" எண்ட புத்தகம்தான் ஞாபகம் வந்திச்சுது. இதைப் பற்றிக் கனபேர் எனக்குச் சொன்னதால எப்பிடியும் வாசிக்கவேணும் எண்டு வெளிக்கிட்டன். அப்ப ஒராள் எனக்குச் சொன்னார், "அதைத் தேடிப்போய் வாசிச்சால் வாசிக்கிறவர் வீட்டில ஒரு கிழமைக்குள்ள ஒரு துக்ககாரியம் நடக்கும்" எண்டு.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிணம்



நெடுந்தீவு செ.மகேஷ்

சஞ்சீவி சிறுகதை

பண்டாரி செத்துப்போனான். அவன் தனியாக ஒரு கொட்டிலில் சிறு குடிலில் யாரோ விட்டுப்போன இடத்தில் கவனிப்பாரற்றுக் கிடந்தான். இன்று எதிர்பாராதவிதமாக அவ்விடத்திற்கு வந்து அவனது குடில் ஓரமாய் சென்ற அவனுக்குத் தூரத்து உறவான இந்திரா ஏதோ எண்ணத்தில் குடிலின் உள்ளே எட்டிப்பார்த்தாள். அங்கே அசைவற்றுக் கிடந்த அந்த உடல் பண்டாரியின் பிணம் எனக் கண்டபோது அவள் அதிர்ந்துபோனாள்.

உண்மையை அறிந்த ஊரும் அந்தப் பிணம் பற்றிய பேச்சைக் குறித்து அதிகம் அலட்டிக்கொள்ளவில்லை. அவனது இறப்பு இப்படி ஆனதில் ஆச்சரியப்படவோ ஆதங்கப்படவோ இல்லை. ஆதரவின்றித் தனித்திருந்த பண்டாரிக்காக இன்று அனுதாபப்படவும் பெரிதாக எவருமே இருப்பதாகத் தெரியவில்லை. பிறந்தவன் இறப்பது நியதியே எனினும் அவன் வாழ்ந்தான் என்ற நீண்ட காலத்திற்குள் அவன் வாழ்ந்த சமூகத்தில் இணைந்து ஆற்றிய பணிகளின் பங்குகளே, உலகில் அவன் வாழ்ந்தமைக்கு ஆதாரங்களாய் ஊர்மக்களின் வாயில் உயிர்வாழும்.

பண்டாரி இன்றுதான் இறந்தானா? அல்லது தனித்திருந்த அவன் இறந்து ஓரிரு தினங்கள் கடந்துவிட்டனவா? பிணத்தில் நாற்றம் சற்றே பிறக்கத்தொடங்கியிருந்தது. இதனை விதானையார் அறிந்தபோது அவனது பிணம் குறித்த செய்தி காவற்றுறைக்கும் சுகாதாரப்பிரிவுக்கும் தெரிவிக்கப்பட்டது. இப்பொழுது பண்டாரியின் உணர்வற்ற சடலம் பிரேத அறையில் அசைவின்றிக் கிடக்கிறது. ஊராரின் வாயில் அவன் உயிர் வாழ்ந்த காலத்தில் ஆடிய சுவையற்ற ஆட்டங்களின் அபிநயங்கள் பல திசை ஊர்ந்தும் நடந்தும் உலவித்திரிந்தன


அவன் ஒரு தனியாளாக எவரும் விரும்பி அரவணைக்கும் வகை தேர்ந்த மனிதனாக நல்லவனாக வாழ்ந்தானில்லை. பாடங்கள் படிக்கப் பள்ளிக்குப் போனதான எந்த அறிகுறியும் அவனிடத்தில் இல்லை. ஏதேனும் ஒரு தொழில் தேர்ந்து உழைத்துப் பிழைக்கும் ஆற்றல் கொண்டிருந்தானா? என்பதும் அறியப்படவில்லை. அப்படியெனில் அவன் எவ்வாறு வாழ்ந்தான்? பொய், களவில் புலமைபெற்றிருந்த இவனது புலமையைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி இலாபம் பெற்ற சிலர் அவனை அணைத்திருந்தனர்.

ஆடுகள், கோழிகள் களவுபோயின. நீரில் நனைத்து அடித்துத்துவைத்துக் கொடியில் காயப்போட்ட சில துணிகளும் ஆங்காங்கே காணாமற்போயின. அண்மைக்காலமாகப் பலரின் வளர்ப்பு மாடுகளும் பசுக்களும்கூட சிலரின் விசேடங்கள் நிகழும் வேளைகளில் இறைச்சிக்காய் களவாகின. இத்தனைக்கும் இவனே காரணம் என்பது பலராலும் அறியப்பட்ட உண்மைகளே.

ஆதாரங்கள் இருப்பினும் பண்டாரியின் நீதியற்ற அடாவடித்தனங்களில் இருந்து தப்பிக்க எதுவும் பேசாமல் மௌனமாயினர்.

இன்று பண்டாரி இறந்துவிட்டான். இந்த ஆடு,மாடு, கோழிகளை வளர்ப்போர் மனதிற்கு இது ஓர் ஆறுதல் தரும் செய்தியாகவே பரவித் திரிந்தது . அண்மைக் காலமாகப் புலம்பெயர்ந்தோர் வாழ்ந்த வீடுகள் பலவும் வெறுமையாய் எவரது பராமரிப்புமின்றிக் கடந்த மழைக்கும் வெயிலுக்கும் நனைந்தும் காய்ந்தும் சிதைந்தே இருந்தன. அவற்றுள் பல வீடுகளின் கூரை ஓடுகள் இரவிலும் பகலிலும் சிறிது சிறிதாகக் காணாமற்போயின . தொடரும் நாளெல்லாம் கூரைச்சட்டங்களும் வீட்டின் யன்னல் கதவுகளின் மரச்சலாகைகளும் காணாமற்போயின. அவற்றைக் கேட்போர் அருகிலில்லா நிலையில் பண்டாரியின் களவு ஊரார் சிலரால் கெட்டித்தனமாகப் பேசப்பட்டன. பண்டாரி இந்தக் களவுகளால் உயிர்வாழ்ந்தான். ஆனால் இவ்வகையில் தமது உடைமை இழந்தோர் மனங்களால் அவன் தினமும் எரிக்கப்பட்டான்.

பண்டாரி என்ற பெயரைக் கேட்போர் மனக்கண்ணில் பல வேளைகளில் அவனது பெயரளவில் புதியவர்களுக்கு அந்நாள் அந்த ஊரின் தலைவராய் உலாவிய பண்டாரி சிங்காரனின் நினைவு வந்துபோகலாம். உண்மையில் இவனது பெற்றோர் இட்ட பெயர் என்றோ தொலைந்துபோய்விட்டது. களவும் பொய்யும் கலந்துலாவும் இவனுக்கு ஊரார் இட்ட 'பண்டி ஊரி' என்ற பெயர். பன்றியாய் ஊர்பவன் என்ற பெயர் மருவிப் பண்டாரி என ஆகியது என்பதே உண்மை. இதனால் பெயரளவில் அவ னுக்குப் பெருமைதான்.



பலவேளைகளில் இவனது வேலையின்மையால் அவனுக்கு ஏற்படும் பசிக் கஸ்ரங்களை உணர்ந்து அனுதாபப்பட்டு வேலைதந்து உதவச் சிலர் முன்வந்தாலும் அவனது களவுப்பழக்கம் அவனது வேலைக்கு இடையூறாக மேலெழவே செய்யும். அவனுக்கென உதவ இன்று எவரும் முன்வரவில்லை. அவனுடைய பொய், களவால் மறைவாக இலாபம் பெற்றுத் தம்மை மறைத்துக்கொண்டோரும் அவனை அறிந்தவர் சிலரும் அவன் அநாதரவாகக் கண்மூடிக் கிடக்கும் இந்தப் பிணத்திற்கேனும் உதவ இன்று முன்வரவில்லை.

பொய், களவு எல்லாமே சமூகம் விரும்பாதவை என்பதை நன்கு தெரிந்தோர் அவற்றை மறைவாகச் செய்துவருவது அவரவர் மனச்சாட்சியில் உறுத்தாமலா? போகும். சமூகத்தின் பார்வையில் மறைந்துவாழும் தம்மை மறைத்து வாழும் மனிதநேயமற்றோர் மரணத்தின் பின்னே பிணத்தின் முன்னே கேவலமாக நோக்கப்படுவதும் பேசப்படுவதும் அவரவர் வாழ்வின் சிறப்புகளே.

"இவன் பண்டாரி செத்துப்போனானாம். செத்தது நல்லதாப்போச்சு இந்த நாசமாப்போனவன் நாங்கள் ஊரிலில்லாதபோது எங்கட காணி மதில் வேலிக்கல்லுகளை உடைச்சுப் பெயர்த்து முழுதையும் இரவோடிரவாக ஏத்தி வித்துப்போட்டான். எனக்கு இதால ஐம்பதினாயிரம் ரூபாவுக்கும் மேல் நட்டம். அதோட காணிக்கும் அறிக்கை இல்லாமப் போச்சு " என சண்முகம் வாத்தியார் மனம் எரிந்தது.

இவனது பிணம் இன்னமும் பிரேத அறையிலிருந்து வெளியே கொண்டுசெல்லப்படவில்லை. இன்றல்ல அவன் வாழ்ந்தான் என நம்பிய இது நாள்வரையும் அவன் எவராலும் மதிக்கப்படாத ஒரு நடைபிணமாகத்தான் உலவினான் என்பது அவனறியாத ஓர் உண்மைதான்.

"இந்தப் பட்டியலில் இன்னும் பல காட்டான்கள் இருக்கவே செய்கிறார்கள். என்ன செய்யப் பிறப்பிலே முடமானால் பேய்க்குப் பார்த்தாலும் இவர்கள் திருந்தவா போகிறார்கள்?" என சண்முகம் வாத்தியார் புகைந்தார்.

# சரியான நேரத்தில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதெப்படி வெளிநாட்டின் ஏஜென்ட்கள் தமிழ்த் தேசிய தன்மைமிக்க வாக்குகளைத் திரட்டலாம்? கெட்ட கூட்டு எப்படி நல்ல விளைவைத் தரும் ?

தமிழ் மக்கள் பேரவையின் சிதைவுக்குக் காரணமாக இருந்த ஒரு தரப்பு கிட்டத்தட்ட ஐந்தாண்டுகளின் பின் அதே பேரவையின் முன்மொழிவை கையில் எடுத்திருப்பது எதைக் காட்டுகின்றது? ஐந்து ஆண்டுகளுக்கு முன் அவர்கள் எடுத்த முடிவு தீர்க்கதரிசனமற்றது என்பதைத் தானே? பொது வேட்பாளரைத் தவறு என்று கூறிவிட்டு அவர் பெற்ற வாக்குகளைத் தேசியத் தன்மை மிக்கவை என்று கூறுவது எதைக் காட்டுகின்றது? எட்டு மாதங்களுக்கு முன்பு அவர்கள் எடுத்த முடிவு தவறானது என்பதைத்தானே?பொது வேட்பாளருக்காக முன்னணியில் நின்று உழைத்த ஒரு சிவில் சமூகச்செயற்பாட்டாளர் கூறுவதுபோல "முன்னணியானது சரியான வேளைகளில் பிழையான முடிவை எடுக்கிறது. பிழையான வேளைகளில் சரியான முடிவை எடுக்கின்றது" என்பது சரியா ? இப்பொழுது முன்னணி எடுத்திருக்கும் முடிவானது சரியான வேளையில் எடுக்கப்பட்ட சரியான முடிவா? கடந்த 15 ஆண்டுகால அனுபவத்திலிருந்தும் கற்றுக் கொண்ட பாடங்களின் அடிப்படையில் முன்னணி அப்படி ஒரு முடிவை எடுத்திருக்குமாக இருந்தால் அதை வரவேற்கவேண்டும். ஒப்பீட்டளவில் பெரிய கூட்டை முன்னணி [illegible]டுக்க வேண்டும். ஒப்பீட்டளவில் யார் தேசத்தைத் திரட்டும் நம்பிக்கைகளை பலப்படுத்துகின்றார்களோ, அந்த நம்பிக்கைகளுக்காக உண்மையாக உழைக்கின்றார்களோ, அவர்களை தமிழ்மக்கள் ஆதரிக்கவேண்டும். பொது வேட்பாளருக்குப் பின் மீண்டும் ஒப்பீட்டளவில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய ஒரு கூட்டை முன்னணி உருவாக்கியிருக்கிறது.

அது சரியான நேரத்தில் எடுக்கப்பட்ட சரியான முடிவு என்பதனை நிரூபிக்கவேண்டிய பொறுப்பு சம்பந்தப்பட்ட எல்லாக் கட்சிகளுக்கும் உண்டு. குறிப்பாக வாக்களிக்கப் போகும் மக்களுக்கு உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சின்னச் சின்ன சிறுவர்கள்

சின்னச் சின்ன சிறுவர் நாங்கள்
சேர்ந்து விளையாடும் சிறுவர் நாங்கள்
ஆடிப்பாடி கொண்டாடுவோம்
சிறுவர் உலகை ஆக்கிடுவோம்

அன்பாய் பாசமாய் அணைவோம் நாம்
இன்பமாய் உறவாய் இருப்போம்
எல்லோருக்கும் நன்மை செய்வோம்
நல்லாய் வாழ்வோம் நட்பில் இணைவோம்

இயற்கை இன்பத்தில் இணைவோம்
பறவையாய் புலியாய் பாய்வோம்
மயிலாய் ஆடுவோம் குயிலாய் பாடுவோம்
மனிதரெல்லாம் மகிழ்ச்சியில் இணைந்தே...

K.இந்துஜா
தரம்-9
யா/ உரும்பிராய் இந்துக் கல்லூரி.



## அம்மா

அம்மா என்பது மூன்றெழுத்து
அம்மா உலகில் முதன்மையானவள்
ஆசை முத்தங்கள் கோடி
ஆயிரம் உறவுகளைத் தாண்டி...

இன்பத்திலும் துன்பத்திலும் அவளே
இதயத்துடிப்பை அறிந்திடுவாள்
எண்ணும் எழுத்தும் கற்பித்தாள்
எட்டும் உயரத்திற்கு என்னை உயர்த்தினாள்

உயிர்போகும் வலியிலும் என்னைப் பெற்றெடுத்தாள்
உலகம் போற்றும் வகையில் என்னை வாழ்த்தினாள்
ஊன் உறக்கத்தை அவள் மறந்திடுவாள்
ஊட்டி ஊட்டி என்னை வளர்த்திடுவாள்

ச.யதுசிகா,
தரம்- 11
யா/ சைவத்தமிழ் வித்தியாலயம், உரும்பிராய்




மாணவர்களே!

நீங்களும்
உங்கள்
கைவண்ணங்கள்,
ஆக்கங்களை
அனுப்பலாம்.

அனுப்ப வேண்டிய முகவரி!

உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555




ச.அலசியா
தரம் 9B
யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி








து.ஹரீஸ்
தரம் 5
யா /கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை



K. கவியரசி
தரம் 11
யா /உரும்பிராய் இந்துக் கல்லூரி



ச.பிரியங்கா
தரம் 9A
யா / கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி



ற.அஸ்மிகா
தரம் 4A
யா/சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை



ஜெ.அஞ்ஜிதன்
தரம் - 04
யாழ்ப்பாணக் கல்லூரி



இ.திரிசன்
தரம் 2B
யா/சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org